

# மருதாபுரி

அல்-ஹாஜ். ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி.

வெளியீடு :
சமூக மேம்பாட்டு மையம்
504A, மசூர் மௌலானா வீதி, மருதமுனை-03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்தாபுரி

ஆசிரியர் :

அல்-ஹாஜ். ஏ.ஆர். அப்துல் சத்தார், ஜே.பி.

வெளியீடு :

சமூக மேம்பாட்டு மையம்

504A, மசூர் மௌலானா வீதி, மருதமுனை-03.

2016-10-25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் பற்றிய விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மருதாபுரி |
| ஆசிரியர் | : | அப்துல் றகீம் அப்துல் சத்தார் |
| மொழி | : | தமிழ் |
| நூலின் வகை | : | வரலாற்று நாவல் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| ஆண்டு | : | 2016 ஒக்டோபர் |
| பக்கங்கள் | : | 120 + iii |
| கணனி வடிவமைப்பு | : | முபா பிறின்ட் இமேஜ், மருதமுனை. |
| அச்சுப்பதிப்பு | : | அப்னா ஓப்செற் பிரிண்டர்ஸ், மருதமுனை. |
| வெளியீடு | : | சமூக மேம்பாட்டு மையம், மருதமுனை. |
| விலை | : | ரூபா 500.00 |
| **ISBN No.** | : | **978-955-41921-0-2** |

## Bibiliography

| | | |
|---|---|---|
| Book Title | : | **Maruthapuri** |
| Author | : | **Abdul Raheem Abdul Sathar** |
| Language | : | **Tamil** |
| Kind of Book | : | **Histry Novel** |
| Copy Right | : | **Author** |
| First Edition | : | **October 2016** |
| Pages | : | **120 + iii** |
| Graphics | : | **MOFA Print Image, Maruthamunai.** |
| Printing | : | **ABNA Offset Printing, Maruthamunai.** |
| Publisher | : | **Community Development Centre, Maruthamunai.** |
| Price | : | **Rs. 500.00** |
| ISBN No. | : | **978-955-41921-0-2** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களின் மருதாபுரி பண்டைய மருதமுனை வாழ்வியலின் மீதான எளிய பாடல்

விமர்சனமானது பல வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது. அதில் ஒரு வகை பாராட்டுமுறை விமர்சனமாகும். பாராட்டு என்பது எந்த ஒரு படைப்பாளிக்கும் இன்றியமையாததாகும். படைப்பாளியையும், அவனின் படைப்பையும் அறுவைச் சிகிச்சை செய்து, அவைகளை துண்டு துண்டாக வெட்டி, ரணகளமாக்கி அவனை படைப்பாக்கச் செயற்பாடுகளிலிருந்து விட்டோடச் செய்வதைவிட, படைப்பாளியை தட்டிக்கொடுத்தலே அவனை கற்றலையும் தேடலையும் மேற்கொள்ள வைத்து அடுத்த கட்டத்திற்கு நகரச் செய்யும். இதுவே பன்மைத்துவ விமர்சனவியலின் முக்கியாம்சமாகும்.

இனிய இயல்பான வகையில், சாதாரணமாய் யாவரும் அறியும் வண்ணம், இயற்கை அமைப்பையும், அழகையும் அற்புதங்களையும் சனங்களின் நடை, உடை, பாவனை, எண்ணம், பேச்சு, செயற்பாடு போன்றவைகளையும் உரைநடையில் எழுதி, பெரும் கதையையும், அதன் வாழ்வியலையும் கூறி பாத்திரங்களின் உரையாடல்கள் மூலமாக கதை ஓட்டம் நிகழ்த்தப் பெறும் இலக்கிய வகையறா நாவல் எனலாம். இன்னொரு சாராரோ, எழுதப்பட்ட காலத்தின் உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையினையும், வாழ்வின் பழக்க வழக்கங்களையும் வெளியிடும் ஓவியம் என்றும், குறிப்பிடத்தக்க ஒரு செய்தியை பற்றியதாகவும், மாந்தர்களையும் ஆழ்ந்த நோக்கினையும் அடித்தளமாக உடையதாகவும், உரை நடையில் அமைகின்ற புனைகதைதான் நாவல் என்றும் கூறுவர்.

அந்த வகையில் அந்தக்கால புவியியல் தோற்றங் களையும், நிலக்காட்சிகளையும், கிழக்குப் பெரும் பரப்பின், குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு பெரு நிலங்களின் காட்சிகளையும் மருதாபுரி நாவலின் மூலம் ஏ.ஆர்.ஏ. சத்தார் தரிசிக்க வைக்கிறார். கதை நிகழ் காலத்தின் ஓர்ளவு உண்மைக்கு அணித்தாகவுள்ள வாழ்க்கை முறையினையும், பழக்க வழக்கங்களையும், அவர்களின் வியாபார முறை, வெளிநாட்டு வணிகம், காடுகள், நதிகள், குளங்கள், கேணிகள், கடல்கள், வாவிகள், பழங்கள், விலங்குகள், உயிரினங்கள், ஜீவராசிகள் போன்றவைகளையும் விபரிக்கின்றது இந் நாவல்.

கப்பல் வணிகமாக இங்கு வந்த அறபிகள், திமிலர்களின் கொடுமையிலிருந்து சீர்பாதகுல இந்துக்களை காப்பாற்றி, அவர்களுடன் தொடர்புகளை பேணி, அவர்களுடன் திருமண ஒப்பந்தம் செய்து, இஸ்லாத்தை ஏற்று, பின்னர் அரேபியர்கள் எவ்வாறு நெசவுத் தெழிலை இங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கினர், தொழிற்சாலை பெருக்கி, சனங்கள் குடியமர்த்தி, உற்பத்திகளைக் கூட்டி, பள்ளிவாசல் அமைத்து, பாதைகளை அமைத்து விருத்தி செய்தனர் மருதாபுரி விபரித்துச் செல்கிறது.

அப்போது இருந்த அடர்ந்த வனத்தினது சூழலை கண்முன் கொண்டு வந்து, பாத்திரங்களையும், கதை களையும் வளர்த்தெடுத்துச் செல்லும்போது, உண்மை யிலேயெ அடுத்தது என்னவாக இருக்கும் என்று வாசக பிரதி மீதான ஈர்ப்பு தொற்றிக் கொள்கிறது.

இலவம், பருத்தி பஞ்சுகள் சேகரிக்கப்பட்டு, நூல் நூற்று, ஒலிய மரப்பட்டை, கள்ளிச்செடி, நறுவிலி பட்டைகள் போன்றவற்றால் நிறமூட்டி, றாணை, சமுளை, முதிரை மரங்களால் தறி செய்து, மூங்கில், பிரம்பு, நாணற் புற்களால் அச்சு விழுதுகள் செய்து, துணிகளை உற்பத்தி செய்தார்கள் என்பது நல்ல கற்பனையும் உண்மையும் கலந்த நெசவின் புனைவு வரலாறாகும்.

இந்த வரலாற்றோடு, மோகினி-மாலிக் காதல், ஆயிசா-மாலிக் திருமணத்தில் முடிந்து இரு குழந்தைகளும் பிறக்கிறது. மாலிக்குடன் இங்கு வந்த அவன் நண்பர்களான அறபிகளுக்கும் உள்ளூர் பெண்களுடனேயே திருமணம் நடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நிலவரங்கள் ஒவ்வொரு அத்தியாயத்திலும், பிறழாமல் அதன் உள்ளார்ந்த தொடர்ச்சியாக இருப்பதும், பாத்திர வளர்ப்பு எவ்வாறு வார்க்கப்பட்டிருக்கிறது என்பதிலும், அதன் போக்கில் அதுவாகவே நகர்ந்து வளராமல், வேகமாக வளர்க்கப்பட்டிருக்கின்றதா என்பதையும் கவனித்தால் எந்த ஒரு நாவலினதும் போக்கு செம்மையாகவே அமையும்.

ஏ.ஆர்.எம். சத்தார் அவர்களின் மருதாபுரி பண்டைய மருதமுனையைச் சூழ்ந்த மக்களின் வாழ்வியலையும், நிலவியலையும், அரசியலையும், கலாச்சாரத்தையும் காட்டுவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான முயற்சியாகும் என்பதோடு மருதமுனை நாவல் இலக்கிய வரலாற்றிலும், கல்முனைப் பிராந்திய நாவல் இலக்கிய முயற்சிகளிலும் முக்கியமானது என்றே ஆழமாக எண்ணத் தோன்றுகின்றது.

**ஏ.எம். றியாஸ் அகமட்**
*சிரேஸ்ட விரிவுரையாளர்,*
*கிழக்கு பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதமுனையின் நாவலாளர் பட்டியலில் இடம் பிடித்துள்ள சத்தார் ஹாஜியார்

சிறுகதைகளில் பயணித்த அனுபவத்தின் நீண்ட தயாரிப்பாளரிட மிருந்தே நாவல்கள் வருவது மாமூலான விடயம். அவைகளைக் கட்டுடைத்து விட்டு கன்னி இலக்கியப் புகுதலாகவே ஏ.ஆர்.ஏ. சத்தார் நாவலொன்றைத் தந்திருப்பது நம்மை அதிசயிக்க வைக்கிறது.

ஏ.எச்.எம். மஜீதின் "எனது கிராமத்தைத் தேடுகிறேன்" (2015) - ஆ.மூ. சரிபுத்தீனின் "மருதமுனை வரலாறு" (2009) - ஜெஸ்மி எம். மூஸாவின் "மருதமுனைப் பிரதேச தமிழ்-முஸ்லிம் உறவு" (2010 தினக்குரல் தொடர் கட்டுரை) - எஸ்.எம்.மூஸாவின் "மருதமுனை மண்ணின் மைந்தர்கள்" (2015-மாண்புறும் மருதமுனை -ஆய்வுக் கட்டுரை) ஆகியவற்றின் மூலம் மருதமுனையின் பல் விம்பங்களைத் தரிசித்தவர்களுக்கான ஒரு கடையலாகவே "மருதாபுரி" நாவல் ஜனனித்துள்ளது.

ஏ.ஆர்.ஏ. சத்தார் "மாண்புறும் மருதமுனை" வரலாற்றுப் பதிவின் மூலம் மருதமுனையின் வரலாற்றுத் தடத்தில் நீங்கா இடம் பிடித்தவர். நூலகத்தோடு தொடர்புற்ற அவரது இயல்பூக்க வாசிப்பின் அறுவடையாகவே இந்நாவலைத் தந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமன் நாட்டிலிருந்து வருகை தந்த காலிதின் வணிகக் குடும்பம் மருதமுனையில் வாழத் தலைப்படுகிறது. நெசவுத் தொழில்லுக்குச் சாதகமான சூழல் கண்டு நெசவை ஆரம்பித்ததும் அடிக்கடி வந்து செல்வதால் இங்கு வாழ்ந்த மோகினி என்ற இந்துப் பெண் குடும்பத்தாரின் உறவு கிடைக்கிறது. காலித் மகன் மாலிக்-மோகினி மீது காதல்கொள்ள அது திருமணத்தில் முடியவேண்டி சுயவிருப்பில் மோகினி "ஆயிஷா"வாக குடும்பத்தாருடன் இஸ்லா மாகிறாள். தொடர்ந்து மாலிக்-ஆயிஷா குடும்பம் மருதமுனையில் காலூான்றுகிறது. இவ்வாறாக வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தகவல் பின்னலாக வெளிக்கொணரப்பட்டுள்ளதே "மருதாபுரி" ஆகும்.

பல்துறை எழுத்துப் பரவலாளர்கள் மருதமுனையில் பீறிட்ட நிலையிலும் நாவலுக்கான பங்களிப்பு அரிதென்றே சொல்லலாம். கிழக்கு மண்ணின் நாவல் ஊசலாடலுக்குள் மருதமுனையை குறைத்து மதிப்பிடவும் முடியாது. மருதூர்வாணரின் "பெருநாள் பரிசு" (குறுநாவல்-**1969**), மருதவாசி பாறுக்கின் "றொபின்சன் குருசோ" (மொழி பெயர்ப்பு நாவல் - **1972**), ஜின்னா ஷரிபுத்தீனின் "கருகாத பசுமை" (**2000**) ஆகிய மூன்றுமே நமக்குத் தெரிந்தளவில் நூலாக வெளிவந்தன. மருதூர் பாரி - மருதூர்க் கொத்தன் - மருதமுனை மஜீத் உள்ளிட்ட பலர் பத்திரி கைகளிலும் சஞ்சிகைகளிலும் குறுநாவல் களையும் தொடர் நாவல்களையும் எழுதிய போதிலும் அவை நூலாகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரமுனை - மருதமுனையாகிய விதம்: அவக்கலியப்பா பள்ளி -மஸ்ஜிதுன் நூரான செய்தி : சரிபா உம்மா் கபுறடி இருந்த இடம்: ஆங்கிலேயரின் படைக்கெதிராகப் போராடிய ஒல்லாந்தர் படைத் தளபதியான அனுஸ்லெப்பை மருதமுனையார் எனும் ஆதாரம்: அல்-மனார் காணி அன்பளிப்பு முதலிய பல விடயங்களை வரலாற்றுப் பதிவாகக் காட்ட சத்தார் ஹாஜியார் பிரயத்தனம் எடுத்துள்ளார்.

காதலர்களான மாலிக்-மோகினி இருவரையும் பலமுறை சந்திக்க வைத்துள்ள நாவலாளர் நாகரிகமான பரிமாற்றங் களைச் செய்துள்ளமை சமூகத்தோடிணைந்த அவரது எழுத்தைக் காட்டுகிறது.

சொல்லோவியங்களை நடனமாட விட்டு - துளைத்துச் சூடேற்றும் எழுத்துக்களை நாவலாக்கி கட்டுடைப்புக் களைச் செய்துவரும் இக்காலகட்டத்தில் பழைய நாவல் வகைப் பாட்டுக்குள் எம்மை மீள இழுத்துச் சென்று வரலாற்று நர்வல் என இதனைக் கூறவைத்துள்ளார் சத்தார் ஹாஜி.

"வெண்மதியின் பால் ஒளி நீலக் கடற்பரப்பில் பட்டுத் தெறிப்பதுவும் காற்றின் தாக்கத்தினால் கடல் நீர் நடன மாடுவதும் பெரிய மீனினங்கள் விண்ணைப் பிடிப்பதற்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப் பாய்வதும் கடலிலிருந்து குளிர்ந்த காற்று மேனியில்பட்டு இன்பக்களிப்பூட்டுவதுமான ஒருசூழலை அனுபவித்துக் கொண்டிருந்த ஐவரும் நாளை பொழுது புலவர்வதற்கு முன் தமது பயணம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்" என்ற வரிகளில் ஆசிரியரின் மொழியாடல் தேர்ச்சி வெளிப்படு கின்ற அதேவேளை படிமுறை நாவல் மொழிநடையை இது கட்டியம் கூறி நிற்கிறது. ஈழத்தின் முதலாவது நாவலான அசன்பேயின் சரித்திரத்தின் சூழல் தாக்கமும் நீண்ட-வருணனை மொழிநடையும் இதற்குள் எட்டிப் பார்க்கிறது

தனக்குள் இருந்த அல்லது தன்னால் சரி காணப்பட்ட ஒரு வரலாற்றுப் பின்புலத்தை நாவலாகக் கொண்டுவர சத்தார் ஹாஜியார் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது. தனது வாசிப்பு மற்றும் எழுத்தாற்றல் மூலம் நாவலொன் றைத் தரப்புகுந்த இச்செயற்பாடு நாவலொன்றை உருவாக்குவதற்கான பரிசோதனை முயற்சியென்றே சொல்லலாம்.

விரைவாக வாசித்து முடித்துவிடக்கூடிய ஓட்ட மொன்று காணப் படுகின்ற போதிலும் இறுக்கத் தன்மை நோக்கிய நகர்வு இன்னும் எழுத்தைக் கனதியாக்க வாய்ப்பேற்படுத்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எவ்வாறான போதிலும் நாவலொன்றைத் தந்த மருதமுனை யாளர் பட்டியலில் சத்தார் ஹாஜி இடம் பெற்றுள்ளார் என்பது அக மகிழ்கின்ற விடயமாகும்

**- ஜெஸ்மி எம். மூஸா**
*06.06.2016*

*522 சீ,*
*ஸம் ஸம் வீதி,*
*மருதமுனை-03.*
*077 36 246 90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரைக் குறிப்புகள்

**கலாநிதி பிர்தௌஸ் சத்தார்** PhD (Sri Lanka)

நாவல் என்கிற புதினவெளியில் புதிய சாத்தியங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலம் இதுவாகும். மனித வாழ்வின் வழி சிக்கல்களைக் காட்டக்கூடியதாகவும் சம்பவ நடப்புகளிலிருந்து எல்லையற்ற விரிவை தொட முயல்வதாகவும் புதிய பொருண் மைகளை உள்வாங்கிக் கொண்ட பேரனுபவம் மிக்கதாய் அல்லது அதி புனைவாய் தன்னை உருமாற்றம் செய்கிறது நாவல்.

ஈழத்தில் கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை இங்கு தோன்றியுள்ள நாவல்களை பொருள் புலப்படுத்தும் முறையை அடிப்படையாகக் கொண்டு சமூக உணர்வு நாவல்கள், வரலாற்று நாவல்கள், அரசியல் நாவல்கள், பெண்ணிய நாவல்கள், புலம்பெயர் நாவல்கள், சிறுவர் நாவல்கள், போர்ச்சூழல் பற்றிய நாவல்கள் எனப் பல்வகைப்படுத்த முடிகிறது. இவற்றில் அரிதாக வெளிவரும் புனைவுகளாக வரலாற்று நாவல்கள் காணப்படுகின்றன. அருள்செல்வநாயகம், வ.அ. இராசரெத்தினம், ஈழத்துப் பூராடனார், ந. பாலேஸ்வரி, வாகரை வாணன், க. வேலாயுதம் ஆகியோரது வரலாற்று நாவல் முயற்சிகள் குறிப்பிடற்குரியதாய் அமைந்தபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது புனைவுகள் மேலெழுந்த வாரியான வரலாற்றுப் போக்கிலேயே அமைந்து விடுகின்றன. எனினும் வ.அ. இராசரெத்தினத்தின் 'கிரௌஞ்சப் பறவைகள்' வரலாற்றுப் பதிவுகளை அதிகம் கொண்டிருப்பதோடு இத்துறையின் புதிய வளர்ச்சிக்கு வழிகாட்டி நிற்கிறது. பிற்காலத்துப் புனைவாளர்களால் வரலாற்று நாவல் துறை வளர்த்தெடுக்கப்படவில்லை என்ற ஒரு குறைபாடும் நிலவி வருகிறது. இத்தகைய தொரு சூழலில் ஏ.ஆர்.ஏ. சத்தாரினுடைய 'மருதாபுரி' என்கிற வரலாற்றுக் குறுநாவல் 2016இன் ஒரு புதிய வரவாகும். சந்திமணல், ஆத்திமேடு, மதுரமுனை என்றெல்லாம் அழைக்கப்பட்ட மருதமுனைக் கிராமம் தோற்றம் பெற்ற வரலாற்றைக் கதையாகக் காட்டும் எத்தனம் இதில் சாத்தியமாகி இருக்கிறது.

வரலாறு ஒன்றைக் கதையாகக் கட்டமைக்க முனையும் போது அதற்கான நியமங்கள் அல்லது பண்புத் தரங்களின் போதுமை பற்றிய கவனக் குவிப்பு இன்றியமையாதது. அதாவது ஒரு குறிப்பிட்ட சமுதாயம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், அச்சமூகத்தில் நடைபெற்ற வாழ்க்கை முறை, அவ்வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், அங்கு நிலவிய கருத்துக்கள் என்பவற்றை காலப் பின்னணி, சூழ்நிலை என்பவற்றோடு சுதந்திரமாகவும் அளவோடு கற்பனை கலந்தும் ஒரு புனைவாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகையில் அதனை வரலாற்று நாவல் என்று கொள்ள முடிகிறது. மட்டுமன்றி ஏனைய நாவலாசிரியர்களை விடவும் வரலாற்று நாவலாசிரியருக்கு கடந்த காலம் பற்றிய தெளிவு அவசியமிருத்தல் வேண்டும். இக்கவனம் மருதாபுரியில் குவிந்திருக்கின்றமை நன்கு தெரிகிறது.

மருதாபுரி எப்படி உருவானது?

இக்கிராமத்தில் குடியேறியவர்கள் எப்படி, எக்காலத்தில் வந்திருந் தார்கள்? அவர்களுடைய பழக்கவழக்கங்கள், அவர்கள் பேசிய மொழி, மதம், ஆண், பெண் உறவுகள், தொழில் முதலிய விடயங்கள் இப்புனைவின் வழி நன்கு காட்டப்படுகின்றன. ஆசிரியர் தனது கிராமத்தின் வரலாற்றை வரைவதற்கென சிறந்த கதாபாத்திரங்களைத் தேர்ந்து, பாத்திர மாந்தர்களினூடாக காலகட்ட நடப்புகளைக் கவனமாகப் பதிவாக்கியுள்ளார். 'சரித்திர மறியாதவன் சண்டாளன்' என்பது பழமொழி. இது பூர்வீக அவசியம் கருதிய மொழி. எனவே சரித்திரம் அளவான கற்பனை கலந்து கதையாகும் போது வாசக நெஞ்சங்களில் ஆழப்பதிவாகிவிடும் என்ற எண்ணமும், ஊர்ப்பற்றும் இந்த நூலின் வரவை விசைப்படுத்தியிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதாபுரிக்குள் நுழைய முன்னர் ஈழத்தில் இவ்வகை நாவல் புனைவுகளின் நிலையறிதல் இன்றியமையாதது. ஈழத்தின் முதல் வரலாற்று நாவலான மோகனாங்கி (1895) திருகோணமலையைச் சேர்ந்த தி.த. சரவண முத்துப்பிள்ளை அவர்களால் எழுதப்பட, அதனைத் தொடர்ந்து விஜயசீலம் (1961)இல் எழுகிறது. அதற்குப் பின்னர் வெள்ளி வீதியாரின் சிங்கை ஆரியன் என்ற நாவல் 1955இல் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்தது. அதிலிருந்தும் பத்து வருட இடைவெளியின் பின்னரே கிழக்கிலங்கையில் குறுமண்வெளியைச் சேர்ந்த அருள்செல்வநாயகத்தின் பாசக்குரல் (1963), வாள்முனை வாழ்வு (1968), ஈழத்துப் பூராடனாரின் யாரிந்த வேடர்? (1965) ஆகியன வெளிவந்திருந்தன. இவற்றில் நின்றும் பத்து வருடங்கள் பிந்தியே வ.அ. இராசரத்தினத்தின் கிரௌஞ்சப் பறவைகள் வெளியாகியிருக்கின்றது. வடபுலத்தில் செங்கையாழியானின் நந்திக்கடல் (1969) நாவலும் சித்ரா பௌர்ணமி என்ற குறுநாவலும், சமகாலத்தில் எல்லாளன், துட்டகைமுனு ஆகியோர் பற்றிய ஈழராஜா எல்லாளன் (2004) நாவலும், கலைவாணனின் காளை விடு தூது (1992), முல்லை மணியின் வன்னியர் திலகம் (1998) ஆகியனவும் எமக்குக் கிடைக்கின்றன. 1980களில் திருகோணமலை ந. பாலேஸ்வரியின் கோவும் கோயிலும் வெளிவந்தது. 1990களில் கிழக்கிலே வரலாற்றுப் புதினங்கள் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவராதிருக்க, 2000களில் மட்டக்களப்பு வாகரை வாணனின் நந்திக்கொடி (2004)உம் திருகோணமலை தம்பலகாமத்து க. வேலாயுதத்தின் ரங்கநாயகியின் காதலன் (2005)உம் வெளிவந்திருக்கின்றன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது ஈழத்தில் வரலாற்று நாவல் துறையின் வளர்ச்சி மந்தகதி என்பதைப் புரியலாம்.

இவற்றினுள்ளும் ஈழத்துப் பிரதேசங்களை, கிராமங்களை வைத்துக் கொண்டு எழுதப்பட்ட சமூக வரலாற்றுப் புனைவுகள் என்ற வகையில் ஆ.மு.சி. வேலழகனின் சில்லிக்கொடியாற்றங்கரை (2004), இவர்கள் மத்தியிலே (2006) என்பன முக்கியமானவை. சில்லிக்கொடி யாற்றங்கரை மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியைச் சார்ந்து காணப்படுகின்ற வைக்கிஎல்ல, கொனாகொல்ல, உகனை, வண்டறத்தீவு, பன்னலகம ஆகிய கிராமங்களில் 1940களில் சேனைப்பயிர்ச்செய்கை செய்து வாழ்ந்த வேடுவர் சமூகத்தை எடுத்துக்காட்ட, இவர்கள் மத்தியிலே (2006) படுவாங்கரை மக்களின் வயல்வெளி வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுந்துள்ளது.

முஸ்லிம் பிரதேசத்து நாவல்களைப் பொறுத்தவரை இற்றைக்கு மூன்று தலைமுறைக்கு முந்திய காத்தான்குடி முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறையையும் பண்பாட்டம்சங்களையும் மையமாகக் கொண்டு எழுதப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட சமூக வரலாற்று நாவலாக பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் (2005) காணப்படுகிறது. சாய்ந்தமருதைச் சேர்ந்த தீரன் ஆர்.எம். நௌஸாதின் பள்ளிமுனைக் கிராமத்தின் கதை (2003)யைத் தொடர்ந்து வந்த நட்டுமை (2009) முக்கியமானது. ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய இறுதிக் காலகட்டத்தில் தென்கிழக்கு முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான சம்மாந்துறைக் கிராமத்தின் வாழ்வியற் சூழல் மற்றும் பண்பாட்டம்சங்களைப் பேசி நிற்கிறது. இதற்குப் பின்னர் தென்கிழக்குப் பிரதேசத்தின் மருதமுனைக் கிராமத்தை வைத்து எழுதப்பட்ட வரலாற்று நாவலாக மருதாபுரி (2016) உள்ளது. இது சுமார் ஐந்நூறு வருடங்கள் கொண்ட வரலாற்றைப் பேசுகிறது.

எமன் தேசத்திலிருந்து புத்தளம், கற்பிட்டிப் பிரதேசங் களுக்கு குதிரை, துணி முதலியவற்றை விற்பனை செய்ய வரும் மாலிக் என்ற இளைஞன் இங்கு வாசனைத் திரவியங்களைக் கொள்வனவு செய்யும் நோக்கில் கிட்டங்கித் துறைமுகத்திற்குக் கப்பலை செலுத்துவதும், கண்டியிலிருந்து கிட்டங்கித் துறைக்குக் கொண்டு வரப்படுகின்ற வாசனைத் திரவியங்களை எமன் தேசத்திற்கு எடுத்துச் சென்று செல்வமீட்டுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான். ஒரு தடவை மட்டக்களப்பு வாவி வழியாக கப்பல் கிட்டங்கித்துறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்ததும், நண்பர்களோடு ஊர் சுற்றிப் பார்ப்பதற்கென துறையின் கிழக்குப் பகுதியை நோக்கி படகு வழியாகச் செல்கிறான். அப்போது மருத மரங்கள் அடர்ந்த முனையொன்றைக் கண்டதும் படகினை முனைமரத்தில் கட்டி விட்டு காட்டு வழியே நடந்து சென்று அங்கிருந்த சைவக் குடி மனைகளைக் காண்கிறான். குடிமக்களின் அன்பு கலந்த விருந்தோம்பல் மாலிக்கை வெகுவாகக் கவர்ந்து விடுகிறது. அங்கு வாழ்ந்த மோகினி என்ற இளம் பெண் மீது மாலிக் கொள்ளும் காதல் அடுத்தடுத்த வரவுகளில் இறுக்கமாகி திருமணத்தில் முடிகிறது. தந்தை காலித், நண்பர்களான ஹஸன், அஸீஸ் ஆகியோரின் உதவியோடு மோகினியின் குடும்பம் இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ள மாலிக் - ஆயிஷா (மோகினி) குடும்பத் தோடு நண்பர்களும் திருமணமாகி வாழ்வதாகக் கதை நீண்டு செல்கிறது.

இருபத்தியேழு சிறுசிறு அத்தியாயங்களைக் கொண்ட இக்கதையில் மாலிக்கின் தந்தை ஹாலித்தினுடைய நெசவுத் தொழிற் தேர்ச்சியும் அப்பிரதேசத்தில் காணப் பட்ட இலவம்பஞ்சு முதலிய மூலப்பொருட்களின் செறிவும் நெசவுத் தொழிற்பேட்டைக்குக் களம் சேர்ப் பதையும் அதிலிருந்து மேலெழும் மருதமுனையின் படிப்படியான பொருளாதார முன்னேற்றத்தையும் ஆசிரியர் நாவலுக்குள் கொண்டு வந்திருப்பது சிறப்பம்ச மாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலவங்காய்கள் பறிப்பது அவற்றை உலர வைப்பது பின்னர் அவற்றின் விதைகளை வேறாகவும் பஞ்சை வேறாகவும் பிரித்தெடுத்து அவற்றை நூலாக நூற்றெடுப்பது, சாயமிடுவது, சாயமிடுவதற்குத் தேவையான மரப்பட்டைகள், காய்கள், செடி வகைகளைக் கொண்டு வந்து பின்னர் நூலினைப் பாவாக உருவாக்கி தறிகளில் பூட்டி நெய்வது, குறுக்கு நூல் அடிப்பதற்கான குழல், நாடா போன்றவற்றைச் செய்வது என கைத்தொழில் கிராமம் உருவானது மட்டுமல்ல வாராவாரம் அங்கு சந்திமணல் (மக்கள் மண்டபம் இருக்குமிடம்) கூடும் சந்தையில் உற்பத்திப் பொருட்களும் விற்பனை செய்யப் பட்டமையானது அயல் பிரதேச மக்களின் வருகையைப் பன்மடங் காக்கின."

இவ்வாறு நெசவுத்தொழிலில் முன்னேறிய நிலை காட்டப்படுகிறது. இப்புனைவில் மாலிக் - மோகினி பாத்திரங்களோடு ஹஸன், அஸீஸ், ஹாலித், சரீபா உம்மா, கந்தசுவாமி ஆகிய துணைநிலைப் பாத்திரங்கள் உலாவருகின்ற போதும் நாவலின் குறுக்கம் பாத்திரங் களின் சுதந்திரமான உரையாடலுக்கு தடையாக அமைந்திருக்கின்றதென்றே கூறவேண்டும். எதிர்நிலைக் கதை மாந்தர் எவரையும் ஊடாட விடாது போர்த்துக் கேயரின் அட்டகாசங்களையும் கடற்கொள்ளையர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிரட்டல்களையும் எடுத்துக்காட்டி தொடர்ந்தும் மருதமுனைப் பிரதேசத்திலேயே கதை மாந்தர்களை நிலைநிறுத்தியிருக்கிறார் ஆசிரியர்.

பாத்திரங்களை உரையாட விடாமல் கட்டுப்படுத்தி ஆசிரியரே கதைகூறிச் செல்கின்ற நிலையில் சரித்திர காலகட்டமாகிய ஐந்நூறு வருடங்களுக்கு முற்பட்ட மொழிநடை, பண்பாட்டம்சங்கள் முழுவதையும் தரிசிக்கும் வாய்ப்பு இல்லாத போதும் ஆசிரியர் கையாண்டிருக்கின்ற மொழிநடையில் விவரணம், இயற்கை வர்ணனை, அணிப்பிரயோகம், செறிவு முதலாம் அம்சங்கள் நயமுறக் காட்டப்படுகின்றன. குறிப்பாக மருதநிலக் காட்சிகள், நெய்தல் நில வனப்புகள், கிட்டங்கித் துறைமுகத்தின் பரபரப்பு என்பன உயிர்ப்பாக உள்ளன.

"வெண்மதியின் பால் ஒளி நீலக் கடற்பரப்பில் பட்டுத் தெறிப்பதுவும், காற்றின் தாக்கத்தினால் கடல்நீர் நடனமாடுவதும், பெரிய மீனினங்கள் விண்ணைப்பிடிப் பதற்காய் உயரப் பாய்வதுவும் கடலிலிருந்து குளிர்ந்த காற்று மேனியில் பட்டு இன்பக் களிப்பூட்டுவதுமான ஒரு சூழலை அனுபவித்துக் கொண்டிருந்த ஐவரும்....."

"அடம்பன் கொடிப்பற்றை, ராவண மீசை, நொச்சிப் பற்றைகள், எருக்கலம் பற்றைகள் என நிறைந்து காணப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. மணற்பரப்பும் இடையிடையே பற்றைகளும் காணப்பட்டன. ராவண மீசையிலிருந்து வேறுபட்ட அதன் கிளைகள் வீசும் காற்றின் திசையில் உருண்டு செல்வது நல்ல வேடிக்கையாகவிருந்தது..."

இவ்வாறு நெய்தல் நிலக் காட்சிகளை மனக்கண்முன்னே ஆசிரியர் விரியச் செய்கிறார் மருதமுனையின் தற்காலக் கடற்பரப்பில் அருகிப்போய்விட்ட அடம்பன்கொடி, ராவணமீசை, எருக்கலம் பற்றைகள், நொச்சிப் பற்றை என்பவற்றையும் மீன்வாடிகளையும் எவரும் மறக்க முடியாது.

ஊர்கள் ஒன்றுகூடி முடிவெடுக்கும் ஒற்றுமைப் பாங்கை பிரதேச வாழ் பழங்குடியினர் கைக்கொண்டிருந்தனர். இதனை 'உப்புத் தண்ணிக்கட்டு' உருவாக்கத்திலிருந்து அறியலாம். மட்டக்களப்பு வாவி நீர் உவர்நீராகக் காணப்பட்டமையால் அப்போது விவசாயத்திற்குப் பாதகமான சூழல் நிலவியிருந்திருக்கிறது. இதன்போது வயல் வெளியில் உவர்நீர் உட்செல்லாது தடுப்பு ஒன்றை ஏற்படுத்த மூன்று ஊராரும் கூடிப் பேசியிருக்கின்றனர்.

"இதுபற்றி துறைநீலாவணை, பெரியநீலாவணை மற்றும் மருதமுனை மக்கள் கூடி ஆலோசித்ததன் பெயரில் தடுப்புச் சுவர் ஒன்று வடக்கு தெற்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்புவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. பின்னர் அடுத்த மாரி வருவதற்குள் தடுப்புச் சுவரிட்டு உவர்நீர் புல்வெளி யினுட் புகுவதை தடுப்பது என்ற திட்டம் நிறை வேற்றப்பட்டது."

இதுபோன்ற அதிக செய்திகள் மூலம் தென்கிழக்கின் இணை இருப்பதையும் தமிழ்பேசும் மக்களிடம் விளங்கிய ஒற்றுமை யையும் ஏ.ஆர்.ஏ. சத்தார் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இந்நாவலின் கவனிப்புக்குரிய மற்றொரு விடயம் வரலாற்றுச்செய்திகளின் நிரப்பமாகும். துறைநீலாவணை, சேனைக்குடியிருப்பு, குறுமண்வெளி, மண்டூர், தம்பலகாமம், தம்பலவத்தை போன்ற கிராமங்களில் சீர்பாத குலம் பாரிய வரலாறு திமிலர்களை முஸ்லிம்கள் விரட்டியதோடு இந்துக்களுடன் ஒற்றுமை பூண்ட வரலாறு மட்டக்களப்பு முஸ்லிம்களின் தாய்வழி உறவினர்கள் இக்குலத்தினர் என்ற செய்தி ஒல்லாந்தரின் படை அதிகாரியாக வந்த அனஸ் மருதமுனையில் குடியேறி வசித்தல். அனுஸ்லெப்பை என்று அறியப் படுவர். அவர் தனது நண்பர்கள் சகிதம் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியமை. இதனால் இலங்கை தேசிய வீரர் பட்டி யலில் இடம்பிடித்துக் கொண்டமை, இந்தியா, மலேசியா, ஜாவா போன்ற நாடுகளிலிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல குடும்பங்கள் மருதமுனைக்கு வந்து குடியேறியமை, மூத்தவர் என்று அழைக்கப்பட்டவர் ஆங்கிலேயருக்குத் தங்கக்காசு நிரம்பிய செப்புக் கிண்ணத்தை வழங்கியதால் ஒரு தொகுதி நிலம் வழங்கப்பட்ட செய்தி, நெசவுத் தொழில் ஆரம்பித்ததன் பிற்பாடு ஓந்தாச்சிமடத்தில் வாழ்ந்த பல முஸ்லிம் குடும்பங்கள் மருதமுனைக்கு வந்து குடியேறுதல், துறைநீலாவணையிலுள்ள இபுறாகிம் புட்டி பற்றிய தகவல், உப்புத் தண்ணீர்க் கட்டு தோன்றிய வரலாறு, பொலிஸ் விதானைமார் நியமிக்கப்பட்ட கதை, அபூபக்கர் அலி, சேர்மன் முகம்மது ஹாஜி இருவரும் மருதமுனையின் நெசவு ஆசிரியர்களாக வந்த கதை, மருதமுனையின் முதற் பள்ளிவாசலான அவக்கலியப்பாப் பள்ளிவாசல் (மஸ்ஜிதுன் நூர்) அமைக்கப்பட்ட வரலாறு, எட்மன் துரையினால் மட்டக்களப்பு - கல்முனை வீதி மருதமுனையினூடாக அமைக்கப்பட்ட செய்தி போன்ற அநேக வரலாற்றுக் குறிப்புகள் இப்புனைவு வழி பரவிக் கிடக்கின்றன. அவ்வகையின் இன்றைய இளம்சந்ததியினர் கட்டாயம் வாசித்து உணர வேண்டிய வரலாற்றுத் தடயங் களைத் தாங்கிய நாவல் என்று மருதாபுரியைக் குறிப் பிடலாம்.

கட்டாயப்படுத்தப்பட்ட வெளியேற்றங்கள், நிலங்கள் தொடர்பான முரண்பாடுகள், சிறுபான்மையினர் தங்களது பூர்வீக நிலங்களிலிருந்து இல்லாது ஒழிக்கப்படும் அபாயம், பள்ளிவாசல்கள் தாக்கப்படுதல் எனத் தமிழ் பேசும் மக்கள் இன்று பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி, கலாசாரம் என்பவற்றால் திட்டமிட்ட வடிவில் சிதைக்கப்பட்டு நிர்க்கதியாக விடப்பட்டிருக்கும் நிலையில் எமது இளம் சந்ததியினரின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படாமல் தடுக்கும் வகையில் நமக்கான பண்பாட்டுக் கலாசாரங்களையும் விழுமியங்களையும் வளர்த்துப் பாதுகாக்க வேண்டிய தேவை ஒவ்வொருவருக்கும் உண்டு. அவ்வகையில் முன்னாள் வங்கியாளர் ஏ.ஆர்.ஏ. சத்தாரின் இப்புனைவு மூலம் ஒரு சரித்திரத்தின் மௌனம் கலைக்கப்படுகின்றதென்றே கூறவேண்டும். இக்குறு நாவலின் கதையும், கதைப்புணர்வும், சித்தரிப்புகளும் காட்ட வருகின்ற பண்பாட்டம்சங்களும், வாழ்க்கை ஒழுங்குகளும் வரலாற்றை மறைத்து வைத்திருப்போருக்கு ஒரு சவாலாக அமையுமென்பதில் ஐயமில்லை. ஆசிரியரின் கன்னி நாவல் இது என்பதால் முதல் நாவலுக்குரிய பலவீனங்கள் மருதாபுரியிலும் இருக்கவே செய்கிறது. அடுத்தடுத்த புனைவுகளில் அப்பலவீனங்களும் பூச்சியமாகிவிடும் என்ற நம்பிக்கையோடு தென்கிழக்குப் பிரதேச நாவலாசிரியர்களின் பட்டியலில் இடம்பிடித்துக் கொண்ட அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்களை உளப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

**கலாநிதி பிர்தௌஸ் சத்தார்** PhD (Sri Lanka)
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு சில வார்த்தைகள்...

நாவல் இலக்கியம் என்பது எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை இன்னும் வளர்ச்சி பெறாத நிலையே காணப்படுகிறது. குறிப்பாக மருதமுனையில் இத்துறை மற்றைய இலக்கியத் துறைகள் போல முன்னெடுக்கப் படவில்லை என்றே கூறவேண்டும். பொதுமக்கள் மத்தியிலிருந்து இவ்வாறான விடயங்களுக்கு போதிய உதவிகளும் ஆதரவுகளும் கிடைக்கப் பெறாமையே இதற்கு முக்கிய காரணங்களாகக் கூறமுடியும்.

எனது இளமைக்காலம் முதலே வாசிப்புப் பழக்கத்தை நான் கொண்டிருந்தமையானது எழுத வேண்டும் என்ற ஆசையினையும் ஆர்வத்தையும் வளர்த்திருந்தது. இருப்பினும் அதற்கான சந்தர்ப்பங்களும் சாத்தியப் பாடுகளும் அமையப் பெறவில்லையாயினும் சென்ற ஆண்டு பாரிய முயற்சியின் விளைவாக "மாண்புறும் மருதமுனை - வரலாற்றுப் பதிவுகள்" என்ற ஒரு ஆவணத் தொகுதியைத் தொகுத்து வழங்க முடிந்தமையானது என்னுள் ஒரு திருப்தியைத் தேடித் தந்திருந்தது. ஆயினும் அதனால் ஏற்பட்ட படிப்பினைகள் இன்றுவரை என்னால் மறக்க முடியாத சுகங்களாக சிலபோது றணங்களாக, சோகங் களாக, வேதனைகளாக ஏன் கழுத்தறுப்புக் களாகவும் பல தோற்றங்கள் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி எனக்குள் எத்தனை வடிவங்களைத் தோற்றுவித்தாலும், எட்டாம் நூற்றாண்டிலிருந்தே மருதமுனையில் குடியிருப்புக்கள் இருந்துள்ளன என்ற உண்மைகளை இதுவரை எவருமே எந்த வடிவிலேனும் சொல்லவில்லை என்ற சோகமும் என்னுள் இல்லாம லில்லை. முடிந்தவரை மருதமுனையின் எல்லாத் துறைகளினதும் வரலாறுகளைத் தொகுத்து வழங்கிய போதிலும் அவை தவிர்ந்த கிராமம் உருவான வரலாற் றையும் எழுத வேண்டும் என்ற எண்ணம் என்னை விடுவதாக இல்லை.

எழுத்து மூலமான ஆவணங்களோ, முதியவர்களின் கதைகள், உரையாடல்கள் மூலமோ கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் மருதமுனை உருவான வரலாற்றை எவ்வாறு கூறுவது என்ற என் ஆவலை நிறைவு செய்வதற்கான ஒரு துறையாக நாவல் இலக்கி யத்தைத் தெரிவு செய்தேன்.

நாவல் இலக்கியத்தில் எழுத்தாளரின் கற்பனைகளுடன் கலந்து வரலாற்று நிகழ்வுகளையும் வெளிக்கொணர முடியுமாகவிருக்கும் என்ற நம்பிக்கையின் வழி வந்தது தான் இந்த "மருதாபுரி" என்ற நாவல். இதை வரலாற்றோடு பின்னிப்பிணைந்த சமூக நாவலாக வடிவமைத்திருக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்தக் கதாபாத்திரங்களும் அவை நடமாடும் இடங்களும் நம் வாழ்வோடு ஒன்றாகக் கலந்த பிரதேசங் களாகவும் பாத்திரங்களாகவும் இருப்பதைக் காண்பீர்கள்.

நாவல் துறையில் எனது கன்னி முயற்சி இது. பூரண ஆதரவு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

"மருதாபுரி" வெளிவருவதற்கு ஏதோ ஒரு வகையில் தமது ஒத்துழைப்பை நல்கிய அத்தனை உள்ளங்களுக்கும் என் நன்றிகள் என்றென்றும் தொடரும்.

***ஏ.ஆர்.ஏ. சத்தார் ஜே.பி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது
பெற்றோர்களுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● அத்தியாயம் ஒன்று

மேற்கே வானம் சிவந்து, ஆங்காங்கே கரு மேகக்கூட்டங்கள் அதன் மீது மெது மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. சூரியன் தனது ஓய்வை அறிவிப்பது போல இதுவரை தான் காட்டி வந்த உஷ்ணத்தைத் தணித்து மென்மை காட்டியது. மேற்கின் அழகினையும் வனப்பினையும் ரசித்துக் கொண்டிருந்த அந்த வாலிபன் ஏதோ நினைவு வந்தவனாக தன் பார்வையை மறுபக்கம் திருப்பினான்.

நீண்ட பெருமூச்சு அவனது அலுப்பைக் காட்டியது.

மாலை மூன்று மணிவாக்கில் அவ்விடம் வந்த அந்த வாலிபன் ஆறு மணிவரை காத்திருந்தும் பயனில்லையே என்று தன்னையே நொந்து கொண்டான். தன்னோடு உடன் வந்த நண்பர்கள் இருவரையும் சற்றுத் தொலைவில் தன்னந் தனியாய் விட்டுவந்த சோகம் அவனுக்கு.

சூரியன் மறைவதற்கு முன் நண்பர்களைக் காணவேண்டிய கட்டாயத்தில் அவன்.

பலமுறை இங்கு வந்ததனால் பிரதேசத்தைப் பற்றி அறிந்திருந்த அவனுக்கு தன்னோடு புதிதாக இம்முறை வந்த நண்பர்கள், தேடுவார்கள் என்ற கவலை தொற்றிக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற விடயங்களை நாளை பார்ப்போம் என்று நண்பர்களை நோக்கி மெதுவாக நடக்கலானான் அந்த வாலிபன்.

"என்ன மாலிக் விடயம் முடியவில்லையா?" என்று வினவினான் ஒரு வாலிபன்.

"இல்லை ஹஸன்" மெதுவாகக் கூறினானன் மாலிக்.

"நாளை முடியுமா மாலிக்" வினவினான் மற்ற வாலிபன்.

"நாளை அங்கு சென்ற பின்புதான் நிலைமை புரியும் அஸீஸ்" பதிலளித்தான் மாலிக்.

"என்ன செய்வது, வந்த வேலை முடியாமல் போகவும் முடியாது. நாளை பார்ப்போம்" என்று கூறியவாறு தம்மோடு கொண்டு வந்திருந்த ரொட்டி, பால், பழங்களை இரவுணவாக உண்டனர். பல விடயங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே மூவரும் கண் அயர்ந்து தூங்கி விட்டனர். பிரயாணக் களைப்பும், வாவி நீரின் குளிர்மையும், மெதுவாக வீசும் காற்றின் அரவணைப்பும் அவர்களை அயர்ந்த தூக்கத்தில் ஆழ்த்தியது.

## அத்தியாயம் இரண்டு

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு முதல் பழம்பெரும் சரித்திர நகரான சம்மாந்துறை வரை பரந்து விரிந்து கிடக்கிறது மட்டக்களப்பு வாவி. சம்மாந்துறையை அண்மியதாக கிட்டங்கித்துறை அமைந்திருந்தது.

மேற்கே வயல் வெளிகளும், கிழக்கே அடர்ந்த காடுகளும் இடையிடையே சிறிய பற்றைகளும், வடக்கே கண்களுக்கெட்டிய தூரம் வரை மட்டு வாவியும் பரவிக் கிடக்கிறது. கிழக்கே அமைந்துள்ள காடுகளிலிருந்து எழுப்பப்படும் பறவைகளின் ஓசைகளும் அவை தன்னிடம் விலகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரை தேடுவதற்காகத் தன் இறக்கைகளைப் படபடவென அடித்தவாறு புறப்படும் சப்தங்களும், இடைக்கிடையே விலங்கினங்களின் அலறல்களும் ஒரு வகையான பீதி நிலையை ஏற்படுத்தினாலும் மேற்கே தெரியும் பச்சைப் பசேலென்ற புல்வெளியின் இதமான தோற்றம் மனதில் ஒரு மெல்லிய சந்தோசத்தைத் தருகிறது.

காலை வெயிலின் பொன்னிறக் கதிர்கள் வாவியில் பட்டு பொற் கம்பிகளை சிதறுவது போலவும், அக்கம்பிகள் தனது கப்பலில் பட்டு தெறிப்பது போலவும் ஒரு ரம்மியமான காட்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர் அந்த மூன்று வாலிபர்களும். நண்பர்களுடன் இயற்கையின் அழகினை ரசித்தவாறே இன்றைய வேலைகளை எவ்வாறு செய்வது என்ற திட்டத்தை தன் உள்ளத்தில் பதியவைத்துக் கொண்டான் மாலிக்.

எப்படியாவது வாசனைத் திரவியங்களான ஏலம், கறுவா, சாதிக்காய் மற்றும் யானைத்தந்தம், பாக்கு என்பவற்றைக் கொள்வனவு செய்து துறைமுகத்திலிருந்து நாடுதிரும்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

பத்துக்கும் அதிகமான வணிகக் கப்பல்கள் நங்கூரமிட்டிருப்பதைக் கண்ட மாலிக் எவ்வாறு தனது கொள்வனவை செய்து முடிக்கலாம் என்ற நினைப்பிலேயே நண்பர்களையும் புறப்படுமாறு கூறி தானும் புதிய ஆடைகளை அணிந்து கொண்டான்.

எமன் நாட்டிலிருந்து வணிக நோக்கில் பலமுறை இங்கு வந்து வாசனைத் திரவியங்களை வாங்கி மேல்நாடுகளுக்கு விற்று விடும் தொழிலில் ஈடுபட்டான் மாலிக். அவனது பரம்பரைத் தொழிலாக இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால் மேற்படி தொழிலில் மிகவும் தேர்ச்சி பெற்றவனாகவும் அவன் காணப்பட்டான். பலமுறை இப்பிரதேசத்திற்கு வந்து நல்ல அனுபவங்களைக் கொண்டிருந்த மாலிக் இம்முறை தன்னுடன் அவனது நண்பர்கள் இருவரையும் அழைத்து வந்திருந்தான்.

இருபத்தைந்து வயதை எட்டாத அழகிய தோற்றமும் கூரிய பார்வையும் ஆறடிக்குச் சற்று குறைவான உயரமும் உள்ள ஒரு வாலிபனாகக் காணப்பட்ட மாலிக் மிகவும் துணிச்சலும் புத்திக் கூர்மையும் உள்ளவன்.

சொந்தமாக ஒரு வணிகக் கப்பலை வைத்திருந்த மாலிக் கப்பல் செலுத்துவதிலும் அதீத திறமை பெற்றிருந்தான். வரும்போது துணி வகைகள், கருவாடு போன்ற வற்றைக் கொண்டு வந்து இலங்கையின் மேற்குப் புறமாகவுள்ள கற்பிட்டித் துறைமுகத்தில் விற்பதன் மூலம் அதிகளவு இலாபம் ஈட்டுவதுடன் கிழக்கின் மட்டு வாவியில் பயணம் செய்து கிட்டங்கித் துறையை அடைவதும் அங்கிருந்து வாசனைத் திரவியங்களை மேலை நாடுகளுக்கு கொண்டு செல்வதன் மூலமும் பெரியளவு இலாபமீட்டினான் மாலிக். இப்பயணமும் இந்த நோக்கத்தைக் கொண்டதாகவே அமைந்திருந்தது.

வழமைக்கு மாறாக இம்முறை கிட்டங்கித் துறையில் அதிகளவு வணிகக் கப்பல்கள் நங்கூரமிட்டிருப்பதும், கொள்வனவு செய்ய வந்த பொருட்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதும் அவனுக்கு பெருவியப்பை அளித்தது. இதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று தனது உள்ளத்தில் பலவாறு சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டான்.

கிட்டங்கித் துறையை மூவரும் அடைந்தனர். பல பண்டக சாலைகள் அங்கு காணப்பட்டன. அப்பண்டக சாலைகளில் மூட்டை மூட்டைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுவா, ஏலம், சாதிக்காய், பாக்கு என நிறைந்து காணப்பட்ட போதிலும் அவைகள் தனக்கு முன்னர் துறைமுகத்தை வந்தடைந்த வணிகக் கப்பல காரர்களுக்குப் போதுமானதாக வில்லை. பொருட்கள் பேரம் பேசப்படுவதும் தொழிலாளர்கள் விலை தீர்மானிக்கப்பட்ட பொருட்களை கப்பலில் ஏற்றுவதுமாக ஒரே பரபரப்பாகக் காணப்பட்டது. துறையடி நிலைமையை அவதானித்த மாலிக் தனது கப்பலில் ஏற்றுவதற்கான பொருட்கள் கிடைக்க வாய்ப்பில்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

வெறும் கப்பலோடு திரும்பவும் அவன் விரும்பவில்லை. என்ன செய்வது என்று சிந்திக்கையிலேயே அவனது கண்கள் யாரையோ தேடுவது போலிருந்தது. சற்றுத் தொலைவிலிருந்து ஒருவர் முறுவலித் தவாறு மாலிக்கை நெருங்கினார். மாலிக்கின் முகம் சந்தோசமடைந்தது. குசலம் விசாரித்தவாறே வந்து மாலிக்கின் கையைப் பற்றிக்கொண்ட அம்மனிதர் இம்முறை அதிக கப்பல்கள் வந்ததால் பண்டக சாலையில் பொருட்களின் தட்டுப்பாடு நிலவுகிறது. அடுத்தவாரமளவில் தான் கண்டியிலிருந்து பொருட்கள் வந்து சேரும் வாய்ப்பிருக்கிறது என்று நிலைமையை விபரித்தார்.

மாலிக்கின் தந்தையோடு நட்புக் கொண்டிருந்த அம்மனிதர் மாலிக்கின் கப்பல் வந்தவுடன் அவனுக்குத் தேவையான பொருட்களை ஏற்பாடு செய்து கொடுத்து விடுவார்.

இம்முறை மாலிக்கின் கப்பல் தாமதமானதனால் தேவையான பொருட்களை வழங்குவதிலும் சிக்கல் ஏற்பட்டுவிட்டது. தனது மனவேத னையை வெளிக் கொணர்ந்த அம்மனிதர் என்ன செய்வதாக உத்தேசம் என்று மாலிக்கை வினவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை நான் நண்பர்களுடன் வந்திருக்கிறேன். பொருட்களை வாங்காமல் செல்லும் உத்தேசமும் எனக்கில்லை. நண்பர்களுக்கு இப்பிரதேசங்களை சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையும்கூட. எனவே பொருட்கள் வரும்வரை நாங்கள் காத்திருக்கிறோம் என்று கூறிவிட்டு விடைபெற்றான் மாலிக்.

- அத்தியாயம் மூன்று

மாலிக் நண்பர்களுடன் கப்பலை வந்தடைந்தான். உரிய வேளையில் பொருட்கள் கிடைக்கவில்லையே என்ற கவலை இருந்தாலும் நண்பர்களுக்கு இப்பிரதேசங்களை சுற்றிக் காண்பிக்கலாம் என்பதுடன் தானும் இதுவரை கப்பல் துறைமுகம், பிரயாணம் என்று இருந்து விட்டதையும் நினைத்துப் பார்த்தான். நண்பர்களுடன் சில நாட்கள் சந்தோசமாகக் களிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தீர்மானித்துக் கொண்டான் மாலிக். தான் வழமையாக வாடகைக்கு அமர்த்தும் வள்ளக்காரரைக் கண்டு விடயங்களைக் கூறி தன்னோடு சில நாட்கள் உதவிக்கு வரலாமா என்று கேட்பது என்ற முடிவில் அவரிடம் பேசினான். அந்த ஓடக்காரரும் முழு மனதோடு ஏற்றுக்கொண்டார். நல்ல வருமானம் கிடைக்கும் என்ற சந்தோசம் அவருக்கு.

வள்ளக்காரரிடம் பணம் கொடுத்து தேவையான உணவுப் பொருட்களை வாங்கி நாளை அதிகாலையிலேயே வந்து விடுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தான். நேரம் மெது மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. கப்பலில் இருந்தவாறே மாலைக் காட்சிகளையும், பறவைகள் தமது இருப்பிடங்களை நோக்கி விரைவதையும் மட்டு வாவியில் மீன்கள் துள்ளி விளையாடுவதையும், கிழக்கே உள்ள காட்டுப்பகுதியில் இருந்து வரும் மிருகங்களின் வாத்தியங்களும் அவர்களை வெகுவாகக் கவர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை விடிந்ததும் நண்பர்களுடன் காட்டுப் பகுதிக்குள் நுழைவது என்றும், அங்குள்ள மிருகங்கள் பற்றி அறிவதும், அப்பகுதியில் சன நடமாட்டங்கள் இருக்கின்றனவா, அவர்களது வாழ்க்கை முறை என்பன பற்றியும் அறிய வேண்டும் என்று தனக்குள் ஒரு திட்டத்தினை வகுத்துக் கொண்டான் மாலிக்.

மாலைக் கதிரவன் தனது கடமை நேரம் முடிந்துவிட்டது என்று கூறுமாப் போல மேற்கு வானிலிருந்து வயல் வெளிகளின் பாகங்களில் வீழ்ந்து மறைந்து போனது. நங்கூரமிட்டுக் கிடந்த கப்பல்களில் விளக்குகள் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன.

மாலிக் தனது கப்பலுக்கு எதுவித ஒளியும் ஏற்றாமல் கிழக்கிலிருந்த வானில் மெதுவாக தலைநீட்டும் பூரண சந்திரனின் வரவை எதிர்பார்த் திருந்தான். கிழக்கின் அடிவானிலிருந்து வெளிக்கிழம்பி வரும் சந்திரனின் அழகை ரசித்த அவ்வாலிபர்கள் பூரண நிலவின் ஒளியிருக்க வேறு ஒளி எதற்கு என்று இருந்துவிட்டனர். நேரம் போவதே தெரிய வில்லை. ரொட்டி, பழங்களை உண்டவாறே நிலவின் அழகினை இரசித்துக் கொண்டிருந்த மாலிக்கின் எண்ண அலைகள் எமன் நாட்டையும் தனது பெற்றோரையும் நோக்கிப் பயணித்தது.

மிக நீண்ட காலமாகவே ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் ஈடுபட்டு வந்த தனது தந்தை அவரது ஐந்து ஆண் மக்களையும் அவரது வர்த்தகத்திற்குப் பொறுப்பாக்கி விட்டு ஓய்வுபெறும் நோக்கில் தனது மனைவியுடன் ஓமான் சென்றுவிட்டார். அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த அவரது வர்த்தகத்தை மாத்திரம் கவனிப்பதுடன் தனது அலுவல்களைச் சுருக்கிக் கொண்டாலும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை எமன் வந்து தனது பிள்ளைகளின் வியாபாரம் எப்படி நடக்கிறது, அவர்களது குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி இருக்கிறது, ஆலோசனைகள் தேவையாயின் அவைகளை வழங்குவது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி விட்டுப் போய் விடுவார்.

மாலிக் மாத்திரம் இன்னும் திருமணமாகாத கடைசிப் பையன். பெற்றோர்கள் பலமுறை அவனது திருமணம் பற்றி பேசினாலும் மாலிக் திட்டவட்டமாக தனது பெற்றோர்களிடம் எனது திருமணம் பற்றி நான் கூறும்போது மாத்திரம் நீங்கள் பார்த்துக்கொண்டால் போதும் என்று சொல்லியிருந்தான். அதனால் சற்று மனவருத்தமும் கூட அவனுடைய பெற்றோருக்கு.

எல்லா மக்களையும் குடும்பமாகவும் அவர்கள் மிகவும் சந்தோசமாக பிள்ளை குட்டிகளுடன் இருக்க இவன் மட்டும் இதுவரை திருமண மாகாமல் இருக்கிறானே என்ற கவலை அவருக்கு.

மாலிக் தனது திருமணம் தொடர்பில் ஒரு திட்டவட்டமான முடிவில் இருப்பதனால் தனது அன்பு மகனிடம் கடிந்துகொள்ளவும் அவரால் முடியவில்லை. இம்முறை வரும்போதுகூட எமன் வந்திருந்த அவனது பெற்றோர் பட்டும் படாததுமாக திருமணம் பற்றி பேசியிருந்தனர்.

வந்து பார்க்கலாம் என்ற ஒரே செய்தியைக் கூறிவிட்டு வந்திருந்தான் மாலிக். அது பற்றியே அவனது எண்ணங்கள் அசைபோடத் தொடங்கியது.

நாடு சென்றதும் பெற்றோர்கள் ஏதாவது திருமணப் பேச்சு வார்த்தைகள் வைத்திருப் பார்களோ என்ற எண்ணம் அவனைக் குடைந்தது. அந்த எண்ணங்களுடனேயே நண்பர்கள் மூவரும் தூங்கி விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையிலேயே எழுந்து காலைக் கடன்களை நிறைவேற்றி பிரயாணத்திற் கேற்றாற் போல் ஆடைகளும் அணிந்து நண்பர்கள் மூவரும் படகோட்டியின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

சிறிது நேரத்தில் படகோட்டியும் அழகிய சிறிய படகொன்றில் உணவுப் பொருட்கள் சகிதம் வந்து சேர்ந்தார். நால்வரும் மட்டு வாவியின் வடக்கே சற்று தூரம் சென்றனர்.

நெடிதுயர்ந்த மரங்களும் பச்சைப் பசேலென்ற பற்றைகளும் நிறைந்த ஒரு தீவு போல் காணப்பட்டது அக்கிராமம். தூரத்தே நின்று அவதானித்ததில் வாவியின் கரையோரத்தில் சில கொட்டில்கள் தெரிவதும் அதற்குப் பக்கத்தில் சிலர் நடமாடுவதும் இவர்களின் கண்களில் பட்டது.

மெதுவாக கரையை நோக்கிப் படகைச் செலுத்தினர். படகை அவதானித்த அக்குடிசையுள் இருந்தவர்கள் மெதுவாக வெளியே வந்தனர். புது முகங்களாக இருந்தாலும் அரேபிய தீபகற்பத்தைச் சேர்ந்த வாலிபர்கள் மூவரையும் உற்று நோக்கினர் அவர்கள்.

பரஸ்பரம் அறிமுகங்களின் பின்னர் அமர்ந்து அளவளாவினர். இடையே இளநீரும் தாகத்துக்காகப் பரிமாறப்பட்டது. குடிசையில் இருந்தவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் அரேபியாவிலிருந்து வந்தவர்கள் என்றும், தற்போது இங்கு குடிபதிகளாக வாழ்வதாகவும் இவர்கள் தமது மனைவி, மக்கள் என அறிமுகம் செய்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இவ்விடத்தில் ஓய்வுக்காக தங்கியதாகவும், கப்பலில் வந்த உடமையாளர்கள் தங்களை விட்டுவிட்டு திரும்பி வருவதாகக் கூறிச் சென்றதாகவும் பல நாட்கள் அவர்கள் திரும்பி வராமையினால் தாங்கள் இங்கே தங்க வேண்டி ஏற்பட்டதாகவும், நாட்கள் செல்லச் செல்ல இங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் சீபாத குலத்தினர் இந்துக்களாக இருந்தனர் என்றும், தமிழ்மொழியை அவர்கள் பேசியதாகவும் நாங்களும் தற்போது தமிழ்மொழியையே சரளமாகப் பேசுவதாகவும் விபரம் கூறினார்.

வாழ்வாதாரத்துக்காக மீன்பிடி, தோட்டம், நெசவு போன்றவற்றைச் செய்வதாகவும், கிராமத்தின் மத்தியில் பெருமளவு இந்துக்கள் வாழ்வதாகவும், எமது மனைவி மக்கள் நமது இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களாக வாழ்கின்றனரென்றும் இன்னும் எம்மைப்போல சிலர் குடும்பங்களாக இப்பிரதேசத்தில் வாழ்கின்றனரென்றும் கூறினர்.

மாலிக்கும் தான் வந்த நோக்கம் தாமதமானதன் காரணமாக இடங்களை நண்பர்களுடன் சுற்றிப்பார்க்கவும் வந்ததாகக் கூறினான். பல்வேறுபட்ட சமாச்சாரங்கள் பேசிக் கொண்டிருந்தனர் நேரம் போவது தெரியாமல்.

மட்டு வாவியில் வலைவீசி பிடிக்கப்பட்ட மீன்கள் சுடப்பட்டு பரிமாறப் பட்டது. மாலிக்கும் நண்பர்களும் வயிராற உண்டனர். மாலை நேரமும் நெருங்கியது. மீண்டும் சந்திக்கலாம் என்று கூறி விடைபெற்ற நால்வரிடமும் ஒரு குலை இளநீரை அன்பளிப்பாக வழங்கி அனுப்பி வைத்தனர் அக்குடிசையில் இருந்தவர்கள். கப்பலை வந்தடையும் போது பொழுது சாய்ந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாளில் ஏற்பட்ட அனுபவத்தை நண்பர்கள் தங்களுக்கிடையில் பகிர்ந்து கொண்டனர். மாலிக்கின் உள்ளத்திலும் எம்மைச் சேர்ந்த பலர் இங்கேயே குடிபதிகளாகி விட்டனர் என்ற விடயத்தை நேரிலேயே கண்டதனால் இவ்வாறான ஒரு வாழ்க்கை தனக்கும் அமைந்தால் நன்றாகவிருக்குமே என்று ஒரு கணம் நினைத்துக்கொண்டான். நண்பர்கள் மூவரும் அளவளாவிக் கொண்டிருப்பதை மிகக் கவன மாகக் கேட்டுக்கொண்டிருந்தார் படகோட்டி.

மாலிக்கும் பலமுறை இங்கு வந்தபடியால் துறைமுகத்தில் பேசப்படுகின்ற தமிழ் சொற்களில் அதிகமானவற்றைத் தெரிந்திருந்தான்.

நேரம் போவதே தெரியாமல் அளவளாவிக் கொண்டிருந்த நண்பர்கள் கண்களில் தூக்கம் மெதுமெதுவாக ஆட்கொள்ளத் துவங்கிய சிறிது நேரத்தில் அந்த நால்வரும் உறங்கிப் போயினர்.

காற்றின் வேகத்தால் அலைக்களிக்கப்பட்ட வாவி நீர் ஆடி அசைந்து கப்பலில் மோதும் சத்தம் சல்...சல்... என்று கேட்கிறது. எங்கோ ஒரு மூலையில் நரியின் ஊளைச்சத்தம் கேட்கிறது. இடைக்கிடையே டனார்... டனார்... என்ற கோயில் மணி ஓசை ஒலிப்பதுவும் மெலிதாகக் கேட்பதற்கும் காலைச் சூரியன் கிழக்கிலே தலை நீட்டுவதற்கும் சரியாகவிருந்தது.

"ஹசன், அஸீஸ் எழும்புங்கள். விரைவாக வெளிக்கிடுங்கள்" என்று நண்பர்களைத் தட்டி விட்டான். மாலிக் படகோட்டி ஏற்கனவே எழுந்து பயணத்திற்குத் தான் தயார் என்று கூறுவதைப்போல வாலிபர்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

மாலிக்கின் மனதில் எங்கோ ஒலித்த மணி ஓசை இப்பகுதியிலும் குடியிருப்புக்கள் இருக்கலாம் என்று தீர்மானிப்பதற்கு ஏதுவாகவிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது இன்றைய பயணம் மணி ஓசை வந்த திக்கில் செல்வதுதான் என்று தனக்குள் திட்டமிட்டுக் கொண்டான்.

நால்வரும் படகில் ஏறிக்கொண்டனர். கிழக்கை நோக்கி படகைச் செலுத்துமாறு மாலிக் வேண்டிக் கொண்டான். தரையை நெருங்க நெருங்க மாலிக்கின் ஆர்வமும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

உயர்ந்து பரந்து கிளைபரப்பி தலை நிமிர்ந்து நின்றன பல மதுர மரங்கள். காரைப் பற்றைகள் தனி முள்ளாடைகளை அணிந்து பாதுகாப்புக் கவசமாய் சடைத்து மலர்ந்திருந்தன. இடையிடையே பற்றைக் காடுகள் முயல்களின் தங்குமடங்களாக விளங்கின. வாவிக் கரைகளிலே அடர்ந்து மலர்ந்திருந்த பிரப்பம் பற்றைகளிலிருந்து வெளிவருவதும், இரை தேடியபின் உட்செல்வதுமாக வயல் கோழிகள் நடைபயின்று கொண்டிருந்தன. நிழற்சோலையாகக் காட்சி தந்த அங்கு தென்னை

மரங்கள் நெடிதுயர்ந்து பாளைகள் தள்ளியதாகவும் குலை குலையாய் தேங்காய்கள் குலைகுலையாகக் காய்ததனவாகவும் இருந்த அங்கு ஒரு வகையான நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. இடையிடையே நின்ற மகிழ மரத்தின் பூவிலிருந்து வரும் அந்த வாசனை நுகர்வோரைக் கிறங்க வைக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படி ஒரு வாசனை. படகிலிருந்து நால்வரும் இவற்றை அண்டிய பிரதேசத்தில் இறங்கிய பின் தான் அக்காட்டின் உள்ளே போக்குவரத்து செய்வதற்கேற்றாற்போல் ஒரு நடைவழிப் பாதை தென்பட்டது.

மாலிக்கிற்கு ஒரு வகை மகிழ்ச்சி. இங்கு யாரோ மனிதர்கள் குடியிருக்கின்றனர் என்று அவன் திடமாக நம்பினான். மாலிக்கும் மற்றவர்களும் அந்த நடைவழிப் பாதையால் காட்டினுள் நுழைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் வரவைக் கண்டு அங்குமிங்கும் ஓடித்திரிந்த முயல் களெல்லாம் பற்றையினுள் ஓடி ஒழிந்து கொண்டன. சற்றுத் தொலைவில் மேய்ந்து கொண்டிருந்த இரண்டு மான்கள் தலைநிமிர்ந்து பார்த்தது தான் தாமதம் தலைதெறிக்க ஓட்டமெடுத்தன. வனத்தின் நிழலும் செழுமையும் அங்கு வீசிய மெல்லிய காற்றும் அதனூடே பரவி வந்த அநத மகிழம்பூ வாசமும் மாலிக் மனதில் ஏற்கனவே அவனுள் முளைவிட்டிருந்த "வாழ்ந்தாலே இங்குதான் வாழ வேண்டும்" என்ற ஆசையை மேலும் உறுதி செய்ய வைத்தது.

மரங்களுக்கிடையில் பரணமைத்து தானும் தன் துணைவியும் எவருடைய நெருக்குதல்களுமின்றி தனிமையில் வாழ்வதாக கற்பனை செய்துகொண்டான்.

ஒற்றையடிப் பாதை சென்ற வழியே நால்வரும் நடந்தனர். ஒரு நூறு மீட்டர் தூரம் சென்றிருப்பர் அங்கே நாலைந்து பேர் நின்று ஏதோ செய்துகொண்டிருப்பதைக் கண்டனர். அவர்களை நெருங்கிய மாலிக் கையசைத்து வணக்கம் சொல்வது போல பாவனை செய்தான். பதிலுக்கு அவர்களும் பாவனை செய்தனர்.

மாலிக் குழுவினரைக் கண்ட அவர்களுக்கு ஆச்சரியம் என்று கூறுவதற்கில்லை. வனாந்தரத்தின் மேற்குப் பகுதியில் அடிக்கடி கப்பல்கள் வருவதும் போவதும் சில வேளைகளில் பல நாட்கள் நங்கூரமிட்டு நிற்பதும் அவர்கள் அறிந்து வைத்திருந்த விடயங்கள். அப்படி வந்தவர்களாகவே இவ்விளைஞர்கள் இருப்பார்கள் என்று ஊகித்துக் கொண்டனர் அக்கூட்டத்தினர். படகோட்டியின் துணையோடு அவர்களைப் பற்றி அறிந்து கொண்டனர் அம்மூன்று வாலிபர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நாட்களாக தாங்கள் இங்கு வசித்து வருவதாகவும் மட்டு வாவியில் மீன் பிடித்தும், வீட்டுத் தோட்டங்கள் செய்வதன் மூலமும் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதாகவும், இக்காட்டுப்பகுதியில் தேவையான அளவு பழ வகைகள் கிடைப்பதாகவும், தாங்கள் சீர்பாததேவி குடும்பத்தின் வழி வந்தவர் களாகவும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

நாலைந்து குடும்பமே இங்கு வாழ்வதாகவும், பரந்தளவில் அதிக குடும்பங்கள் இங்கிருந்து இரண்டு மைல்களுக்குள் நீலாவணையில் வசிப்பதாகவும் இவ்விடத்தை சந்திமணல் என்று அழைப்பதாகவும் விபரித்தனர். மேலும் இங்கிருந்து கிழக்கே மேலும் ஒரு மைல் சென்றால் வங்காள விரிகுடா கடலைக் காணலாம் என்று கூறினர்.

அவர்கள் விபரிக்க விபரிக்க இவற்றையெல்லாம் பார்க்க வேண்டும் என்றே மாலிக்கின் மனம் துடித்தது. பழகுவதற்கு இனியவர்களாகவும், உபசரிப்பில் உயர்ந்தவர்களாகவும் காணப்பட்ட அவர்கள் விருந்தாளி களை உபசரித்த விதம் மாலிக்கையும் நண்பர்களையும் பெரிதும் கவர்ந்தது.

காட்டினுள் சென்று வீரப்பழும், பாலைப்பழம், அண்ணமுனாப்பழம், பலாப்பழம் என ஒரு படையலே செய்து விட்டார்கள். இளநீர் பறித்து, வந்தவர்களின் தாகம் தீர்த்தார்கள். மீன்பிடித்து வறுவல் செய்து உண்ணக் கொடுத்தார்கள். இவர்களின் உபசரிப்பால் திக்குமுக்காடிப்போன விருந்தினர்கள் பிரிய மனமின்றி மேலும் பல இடங்களைப் பார்க்க வேண்டியதனால் அவர்களில் ஒருவரை வழிகாட்டியாகக் கேட்டுப் பெற்றுக்கொண்டனர். ஐவரும் கிழக்கு நோக்கி நடந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றைகளை அகற்றி முட்புதர்களில் இருந்தும் தம்மைப் பாதுகாத்து கையிலிருந்த தடிகளின் உதவியால் மெல்ல வழியை ஏற்படுத்தியவாறு நடந்தனர் ஐவரும். காரை மரங்களும், கூழா மரங்களும், மஞ்சவொணா, புனைமுருக்கு, புளியமரம் எனப் பல மரங்கள், வேம்பு, பனை, தென்னை போன்ற நெடிதுயர்ந்த மரங்களும் அதிகளவு பருத்தி, இலவ மரங்களும் அவ்வனத்தில் நிறைந்து காணப்பட்டன. பருத்தி மரத்தின் பழங்கள் வெடித்துச் சிதறி அப்பகுதிகள் எங்கும் வெண்மை படரச் செய்திருந்தது. பலா மரமொன்று காய்த்துப் பழுத்து தேடுவாரற்றுக் கிடந்தது. பலாப் பழங்கள் எல்லாம் கனிந்து வெடித்தாற் போல், கைக்கெட்டிய தூரத்தில் இருந்தது. அதில் ஒரு பழத்தைப் பறித்து உண்டவாறே நடையைத் தொடர்ந்தனர்.

ஒரு நூறு மீட்டர் சென்றிருப்பார்கள் குறுக்கே ஒரு பெரிய கேணியும் அதன் பின்னால் பெரிய காடும் காணப்பட்டது. கேணியில் மீன்கள் சுதந்திரமாக ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. பிடிப்பதற்கு யாரும் இல்லையென்ற சந்தோசம் அவைகளுக்கு.

கேணியின் பின்னாலுள்ள காட்டில் தாராளமாகவே நரிகளும், ஓநாய்களும், மான், மரை, முயல் போன்ற மிருகங்களும் நடமாடின.

கேணியைத் தாண்டினால்தான் தொடர்ந்து பயணிக்க முடியும். கேணியின் ஆழத்தை அறிந்தால் மறுகரை சேர்ந்துவிடலாம். உதவிக்கு வந்தவர் ஒரு நீண்ட கம்பை எடுத்துக்கொண்டு மெல்ல மெல்ல கேணியின் ஆழத்தைப் பரிசோதித்தபடி சென்றார். மற்றவர்களை பின்னால் வருமாறு கூறினார். அவர்கள் எதிர்பார்த்ததை விட ஆழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாகவே இருந்தது. ஆழம் அவர்களின் இடுப்பு வரை மட்டுமே இருந்தது. வற்றுக்காலம் ஆகையால்தான் இந்த நிலை. மழை காலங்களில் இருபது முப்பது அடிவரை ஆழம் இருப்பதற்கான சாத்தியங்கள் காணப்பட்டன. ஒருவாறு ஐவரும் மறுகரையை அடைந்து விட்டனர். சூரியன் மறைவதற்கு இன்னும் ஒரு மணிநேரமே இருக்கிறது. கேணியைக் கடந்து அடர்ந்த காட்டையும் கடக்க வேண்டியிருந்தது. கூழா மரங்களின் வேர்கள் அழுகி ஒருவகை மணத்தைப் பரப்பிக் கொண் டிருந்தது. மரவள்ளிக் கிழங்கை அவித்தால் என்ன மணம் வருமோ அவ்வாறானதொரு மணம்.

புதிதாக மனிதர்களைக் கண்டதாலோ என்னமோ வனவிலங்குகள் யாவும் தங்களை காட்டுக்குள் மறைத்துக் கொண்டன. பறவைகளின் நாதங்கள் பரவலாக ஒலித்த வண்ணம் இருந்தன.

மெது மெதுவாக கிழக்கு நோக்கி முன்னேறினர். வழியில் பனை மரம் ஒன்று நுங்குக் குலைகளைப் பெருவாரியாகக் தள்ளியிருந்தது. புளிய மரமொன்று காய்த்து ஒலித்து அவற்றின் பழங்கள் எல்லாம் கீழே கொட்டிக் கிடந்தது. அவற்றிலும் சிலதைப் பொறுக்கிக் கொண்டனர். உண்மையில் சாப்பாட்டுப் பிரச்சினைகள் ஏதுமின்றி நடந்தனர்.

கடலின் இரைச்சல் அவர்களது செவிகளில் தெளிவாக ஒலித்தது. கடலை அண்மித்து விட்டோம் என்ற குதூகலத்தில் அவர்கள். சூரியனும் தனது அன்றைய பயணத்தை முடித்துக் கொண்டு விடைபெற்றுச் சென்றது. முழு மதியின் ஒளி பிரதேசங்களை இருள் திரையின் மடியிலிருந்து விடுவித்துக் கொண்டிருந்தது. மேலும் தொடர்ந்து நடப்பது புத்திசாலித் தனமல்ல. அறிமுகமில்லாத பிரதேசம் ஆகையால் வெள்ளை மணலில் ஆற அமர அமர்ந்தனர் அந்த ஐவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்மதியின் பால் ஒளி நீலக் கடற்பரப்பில் பட்டுத் தெறிப்பதுவும், காற்றின் தாக்கத்தினால் கடல் நீர் நடனமாடுவதும், பெரிய மீனினங்கள் விண்ணைப் பிடிப்பதற்காய் உயரப் பாய்வதுவும் கடலிலிருந்து குளிர்ந்த காற்று மேனியில் பட்டு இன்பக் களிப்பூட்டு வதுமான ஒரு சூழலை அனுபவித்துக் கொண்டிருந்த ஐவரும் நாளை பொழுது புலர்வதற்கு முன் தமது பயணம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

இடையில் பறித்தெடுத்த பழங்களும், தம்மோடு கொண்டு வந்திருந்த ஆகாரங் களையும் உண்டு களித்தனர். அந்த ரம்மியமான சூழ்நிலையில் அவர்கள் சங்கமமாகியிருந்தனர்.

மாலிக்கின் எண்ணங்கள் எல்லாம் தாய்நாட்டைத் தரிசிப்பதற்காகச் சென்றது. தனது பெற்றோர்களைத் தன்னோடு வைத்துக்கொள்ள வேண்டும் என்பது அவனது ஆசை. ஓமானில் அவர்கள் தனித்திருப்பதில் அவனுக்கு உடன்பாடில்லை. நான்கு சகோதரர்களும் அவர்களது வணிகம், குடும்பம் எனத் திரிவதனாலும் குடும்பத்துடன் சில நாட்களைக் கழிப்பதற்கே நேரமில்லாமல் திண்டாடும் வாழ்க்கையும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

உழைத்த செல்வங்களைச் செலவு செய்வதற்கே வழியின்றி தவிக்கும் நிலையும் அவனுக்கு வெறுத்துவிட்டது. புத்தி தெரிந்த காலமிருந்து கடலும் கப்பலும், பிரயாணமும் பார்த்த அதே முகங்களும் என வாழ்க்கையே அலுத்துபோகும் நிலைக்கு வந்துவிட்டது. இதற்கு மாற்றுவழி என்னவென்பதை அடிக்கடி சிந்திக்கத் தலைப்பட்டான் மாலிக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மாலிக் ஆழ்ந்த சிந்தனைபோல" நண்பன் அஸீஸின் குரல் கேட்ட பின்தான் மாலிக் சுயநினைவுக்கு வந்தான்.

தூக்கம் பிடிக்கவில்லை. எப்போது பொழுது விடியும் என்று ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கையிலேயே தூக்கத்தின் அரவணைப்பில் மெல்ல மணல் வெளியில் சாய்ந்து கொண்டனர்.

கடலின் அடியிலிருந்து செந்தணலாய் சூரியன் தனது பயணத்தைத் துவங்கும் காட்சி பார்ப்பதற்கு பரவசமாகவிருந்தது. உற்சாகமாக எழுந்து காலைக் கடன்களை அங்கு காணப்பட்ட பற்றைகளிலும் கடல் நீரினதும் உதவியில் செய்து முடித்தனர். மீதமிருந்த ஆகாரங்களைப் புசித்துவிட்டு தங்களது பயணத்தைத் தொடங்கினர் மாலிக்கும் மற்றவர்களும்.

கடற்கரைப் பிரதேசங்களில் அடம்பன் கொடிப்பற்றை, இராவண மீசை, நொச்சிப் பற்றைகள், எருக்கலம் பற்றைகள் என நிறைந்து காணப்பட்டன. மணற்பரப்பும், இடையிடையே பற்றையும் காணப்பட்டன. பிராமண மீசையிலிருந்து வேறுபட்ட அதன் கிளைகள் வீசும் காற்றின் திசையில் உருண்டு செல்வது நல்ல வேடிக்கையாகவிருந்தது. மணற் பரப்பெங்கும் கடற் பயத்தையும் ஒருவகைக் கயிறு போன்ற கொடிகளும் நிறைந் திருந்தன.

குறுக்கும் நெடுக்குமாக எலிகள் ஓடியோடி விளையாடின. நண்டுகள் அப்பிரதேசங் களில் தமது பொந்துகளிலிருந்து வெளிவருவதும் உட்செல்வதுமாகவிருந்தன. கடலிலே தெரியும் மீன்களைக் கவ்விச் செல்வதற்காக புள்ளியினங்கள் சந்தர்ப்பம் பார்த்து வட்டமிட்டன. இவைகளை எல்லாம் இரசித்த வண்ணம் ஐவரும் மெது மெதுவாக நடந்தனர். சுமார் ஒரு மைல் அளவில் நடந்திருப்பர். மேற்குப் புறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசும்புல் தரையொன்று தென்பட்டது. நீர் நிறைந்து காணப்பட்ட சிறிய சிறிய தடாகங்கள் போல் தூய நீர் அதன் மத்தியில் தாமரை, ஆம்பல், ஒல்லி எனப பல தாவரங்கள் பூத்திருந்த காட்சி அவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தன.

இந்தப் பசுமையான பிரதேசத்தில் முன்னர் ஒரு சமூகம் வாழ்ந்திருக் கலாம் என்ற ஒரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தி நின்ற அதேவேளை, ஆங்காங்கே காணப்பட்ட கருங்கற்களினால் செதுக்கப்பட்ட பாத்திரங்கள், தளபாடங்கள், கட்டில்கள் போன்றவற்றை ஒத்த உருவங்கள் யாவும் அவற்றை உறுதிப்படுத்துவதாக அமைந்தன. மேலும் இதனை அண்டிய பிரதேசங்களில் குடியிருப்புக்கள் பரவலாக வாழ்ந்து வந்தமையும் இவற்றை மேலும் மேலும் வலுப்படுத்துவதாகவே அமைந்தன. மாலிக்கின் மனதிற்கு இந்த இடமும் அதன் அழகிய பசுமையான சூழ்நிலையும் கடலிலிருந்து வீசிவரும் குளிர்ந்த காற்றும் வெய்யிலின் உஷ்ணத்திலிருந்து பாதுகாப்பளிக்கும் நிழல் மரங்களும் தாமரை, ஆம்பல் அல்லி போன்ற தாவரங்கள் நிறைந்த நீர் நிலைகளும் மிகவும் பிடித்துப் போய்விட்டது. நண்பர்களிடம் தனது சந்தோசத்தை பார்வை யினால் பகிர்ந்து கொண்டான்.

மேலும் சற்று முன் சென்று பார்த்த போது அங்கே ஒரு மரமுந்திரிகை மரம் நிறைந்த காய் கனிகளுடன் காணப்பட்டது. தாராளமாகப் பறித்து உண்டனர். மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்றைய இரவை இங்கேயே கழிப்போமே என்று மாலிக் சொன்னதும் மற்றவர் களும் உடன்பட்டனர். அதற்கொரு காரணமும் இருந்தது. தாங்கள் இருந்து வந்த இடத்தை அடைவதற்கு முன்னர் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களைக் கண்டு அவர்களின் வாழ்க்கை முறைகள் பற்றி அறிய வேண்டும் என்று எண்ணியிருந்தான் மாலிக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலிக் குழுவினர் அதிகாலையிலேயே விழித்து தமது பிரயாணத்தை ஆரம்பித் தனர். அயல் பிரதேசமான நீலாவணை மக்களைக் கண்டு அளவளாவி அவர்களின் வாழ்க்கை முறைகளை அறிவதற்காக கிராமத்தினுட் பிரவேசித்தனர் ஐவரும். ஆங்காங்கே குடில் அமைத்து குடும்பம் குடும்பமாக மக்கள் வாழ்ந்து கொண்டிருந் தனர். நூறு மீட்டர் நூற்றைம்பது மீட்டர் என ஒவ்வொருவரது குடில்களுக்கும் இடைப்பட்ட தூரகமாவிருந்தது. சில தினங்களில் எல்லோரும் ஒரே இடத்தில் கூடி சமயக் கடமைகளில் ஈடுபடுபவர்களாகக் காணப்பட்டனர்.

அன்றும் அப்படியான ஒரு நாளாகவிருந்ததனால் எல்லோரையும் ஒரே இடத்தில் சந்திக்கக் கிடைத்தது. மாலிக் மெதுவாக அங்கு காணப்பட்ட வர்களில் பெரியவர் எனக் குறிப்பிடக்கூடிய ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தான். அந்தப் பெரியவர் சிரித்த முகத்துடனேயே வந்தவர்களை அமருமாறு கூறிவிட்டு தனது பேச்சை ஆரம்பித்தார்.

தென்னிந்தியாவில் செழுமை பெற்றுக்காணப்பட்ட சோழப் பேரரசானது கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும் எட்டாம் நூற்றாண்டுக்குமிடையில் நலிவடைந்து, பல சிற்றரசுகளாக மாறின. அதன் காரணமாக சோழ மன்னன் குமராங்குசன் என்பான் கி.பி. 831இல் பழையாறை எனுமிடத்தை தலைநகராகக் கொண்டு அரசோச்சினான். அம்மன்னனின் ஆட்சியின் பின்னரே சோழப் பேரரசு புத்துயிர்பெற்று கடல் கடந்து வியாபிக்கத் தொடங்கியது. இந்நிலையில் இலங்கையைச் சேர்ந்த இளவரசன் வாலசிங்கன் (ஜயதுங்க பரராசசிங்கன்) என்பான், குமராங்குசனின் புதல்வி சீர்பாததேவி என்பாளை தென்னிந்தியாவில் வைத்துத் திருமணஞ் செய்துகொண்டான். இளவரசி சீர்பாததேவிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கணவனின் விருப்பப்படி ஈழத்தில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதையுணர்ந்த மன்னன் குமராங்குசன் கப்பற்றொகுதி யொன்றில் தனது புதல்வியுடன், அரச குலத்தினர், அந்தணர், வேளாளர், வணிகர் ஆகிய நான்கு குலத்தினரையும் அடக்கி, இலங்கைக்கு அனுப்பினான். அக்கப்பற்றொகுதி வங்கக்கடலின் கிழக்குப் பக்கமாகப் பயணித்து திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தினை வந்தடைந் துள்ளது.

இளவரசி சீர்பாததேவி தனது கணவனின் ஆளுகைக்குட்பட்டிருந்த பிரதேசங்களைச் சுற்றிப்பார்க்க அவாவுற்றாள். அதற்கு ஒருப்பட்ட இளவரசன் வாலசிங்கம், கடல் மார்க்கமாக மட்டக்களப்பை வந்தடைந்து, தனது கப்பற் றொகுதியை மட்டுவாவியின் தென்புலம் நோக்கிச் செலுத்துமாறு கப்பலோட்டிகளுக்கு ஆணையிட்டான். அக்கப்பற்றொகுதி, மட்டு வாவியினூடாகப் பயணித்து. அதன் அந்தத்திலுள்ள வீரமுனையில் "மணற்றிடர்" எனுமிடத்தில் தரைதட்டியது. அப்பொழுது அப்பிரதேசத்தில் மனித சஞ்சாரமும் அரிதாகவே காணப்பட்டது. இளவரசன் வாலசிங்கன் அச்சூழலிலுள்ள மக்களின் அனுசரணையுடன் விநாயகர் ஆலய மொன்றினை அமைத்துள்ளான். தன்னுடன் பயணித்து வந்த நான்கு குலத்தினரையும் அங்கு குடியேற்றி, வர்க்கபேதமற்ற ஒரே குலமாகப் பிரகடனஞ் செய்துள்ளான். அப்புதிய கூட்டுக் குலத்தினருக்கு தனது மனைவியின் மீதிருந்த வாஞ்சையினால் "சீர்பாதகுலம்" என நாமமிட்டுள்ளான். இந்நிகழ்வு கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்டதாக நம்பப்படுகின்றது.

வீரமுனையில் கால்பதித்த சீர்பாத குலத்தினர் பிற்காலத்தில் பல்கிப்பெருகி, மட்டுவாவியின் கரையோரக் கிராமங்களான துறைநீலாவணை, சேனைக்குடி யிருப்பு, நாவிதன்வெளி, குறுமண்வெளி, மண்டூர், மகிழூர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலவத்தை, கரையாக்கன் தீவு முதலான இடங்களில் தங்களது குடியேற்றங்களை அமைத் துள்ளனர். அவ்வாறானதொரு குடியேற்றமே ஆரம்ப காலத்தில் நீலாவணையிலும் இடம்பெற்றதாக நம்பப்படுகின்றது. பெரியவர் சொன்ன அத்தனை விடயங்களையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மாலிக் குழுவினர் மேலதிக விடயங்களை அறிவதற் காகப் பிறிதொரு நாள் வருவதாகக் கூறி வெளியேறினர்.

நேரம் போய்க்கொண்டிருந்ததாலும், கப்பலுக்கு இன்று போய்விட வேண்டும் என்ற அவசரமும் அவர்களைப் பற்றிக்கொண்டது. மட்டுமன்றி கப்பலில் ஏற்றுவதற்கான பொருட்களை வாங்கி அவற்றைக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியு மிருந்தது.

- அத்தியாயம் எட்டு

நண்பர்களுடன் கப்பலுக்கு வந்து சேர்ந்த மாலிக் நாளை செய்ய வேண்டிய வேலைகளை நிரல்படுத்திக் கொண்டான். காலையில் எழுந்து நண்பர்களுடன் பண்டகசாலையை அடைந்தான். ஏற்கனவே நங்கூரமிட்டிருந்த கப்பல்கள் பல சென்றிருந்தன. அவசர அவசரமாக பொருட்களுக்கான விலைகள் தீர்மானிக்கப்பட்டு செலுத்தப்பட்டன. கூலித்தொழிலாளர்கள் உற்சாகமாக பொருட்களைக் கப்பலில் ஏற்றிக் கொள்வதற்கேதுவாக உரிய இடத்தில் கப்பல் கொண்டுவரப்பட்டது. பொருட்கள் எல்லாம் ஏற்றி முடிய மாலையாகிவிட்டது.

அறிமுகமானவர்களிடம் விடைபெறும் போதே தனது நண்பர்களையும் அறிமுகம் செய்து வைத்தான் மாலிக். தன்னைப்போல எனது நண்பர் களையும் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு மரபுக்காகச் சொல்லி வைத்தான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிரவு வேளை கப்பல் நகரத் துவங்கியது. வடதிசை நோக்கி காற்று சற்றுப் பலமாக வீசியது. கப்பல் பயணத்திற்கு சாதகமாக அமைந்தது.

சில வாரங்களில் எமனை அடைந்த மாலிக்கிற்கு பேரதிர்ச்சி ஒன்று காத்திருந்தது. தனது மூத்த சகோதரனின் வணிகக் கப்பல் கடற் கொள்ளையர்களால் வழிமறிக்கப்பட்டு அத்தனை பொருட்களும் பறிக் கப்பட்டதுடன் அங்கு நடந்த சண்டையில் அவனும் மேலும் இருவரும் கொல்லப்பட்டதுடன் கப்பலும் கடலில் மூழ்கடிக்கப்பட்டதான செய்தி அவனைப் பெரிதும் பாதித்தது. இதைக்கேட்ட தாயாரும் நோய் வாய்ப் பட்டவராகி விட்டதைக்கண்ட மாலிக் மிகவும் மனவேதனைக்குள்ளானான்.

தான் மிக அதிகமாக நேசித்த மூத்த சகோதரனின் இழப்பும், தாயாரின் சோகமும், தந்தையை இழந்த சகோதரனின் மக்களும் மனைவியும் மனமுடைந்து போய்விட்ட காட்சிகளும் மாலிக்கைப் பெரிதும் பாதித்தது. அந்தக் குடும்பத்தையும் ஒரு நிலைக்குக் கொண்டுவர வேண்டிய பாரிய பொறுப்பும் அவனிடமே சாட்டப்பட்டு விட்டது.

தனது தந்தையுடனும், மற்ற சகோதரர்களுடனும் கலந்துரையாடினான். இறந்து போன சகோதரனின் குடும்பத்தைப் பராமரிக்கும் பாரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

சகோதரனின் பிள்ளைகள் மூவரையும் தனது வியாபாரத்தின் பொறுப்பாளர்களாக ஆக்கிவிட்டு அவற்றை மேற்பார்வை செய்து அவர்களை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என திடசங்கற்பம் பூண்டுகொண்டான். அடுத்த இலங்கைப் பயணத்தில் நண்பர்களையும் தனது பெற்றோர்களையும் சகோதரனின் குடும்பத் தினரையும் கூட்டிச்செல்ல திட்டமிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தவர்கள், உறவினர்கள் எனப்பலர் வந்தனர். பலவிதமான ஆலோசனை களையும் ஆறுதல் வார்த்தைகளும் கூறிச்சென்றனர். ஏற்றிவந்த பொருட்கள் அனைத்தையும் உரிய முறையில் விற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட மாலிக் அடுத்த இலங்கைப் பயணத்திற்கான திட்டங்களை வகுத்தான்.

தனது பெற்றார் இறந்துபோன சகோதரனின் குடும்பம் மற்றும் தனது நண்பர்களான அஸீஸ், ஹஸன் ஆகியோர்களுடன் செல்வதற்கான நாளையும் நிர்ணயித்துக் கொண்ட மாலிக் சகலரையும் பிரயாணம் மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறும் வேண்டிக் கொண்டான்.

இத்திட்டத்தில் மாலிக்கின் தந்தையாருக்கு சற்று விருப்பக் குறைவாக விருந்தாலும் தனது மனைவியின் சோகத்திற்கு ஒரு மாற்று மருந்தாக இப்பயணம் அமைய வேண்டும் என்று நினைத்திருந்தார்.

ஓமானில் அவரது வர்த்தக நடவடிக்கைகளில் சற்று தொய்வுநிலை கண்டதினாலும், மகனின் மறைவினாலும் அவரும் ஒரு மாற்றத்தை விரும்பியவர்தான். எனவே நடப்பது நடக்கட்டும் என்பது போல இலங்கைப் பயணத்திற்கான தனது விருப்பத் தினையும் தெரிவித்தார்.

வழமையாக மாலிக் தனது விற்பனைப் பொருட்களான உப்பு, கருவாடு, துணி போன்றவற்றை இலங்கையின் மேற்கே அமைந்திருந்த புத்தளம், கற்பிட்டி மற்றும் கிழக்கே இயற்கையாய் அமைந்திருந்த கொட்டியாரம் ஆகிய துறைமுகங்களில் விற்றுவிட்டு ஏலம், கராம்பு, சாதிக்காய் மற்றும் யானைத்தந்தம், பாக்கு போன்றவற்றை ஏற்றிச் செல்வது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையும் போதியளவு பொருட்களைக் கொள்வனவு செய்த மாலிக் நண்பர்கள் இருவர் தனது பெற்றோர் மற்றும் சகோதரனின் புதல்வர்கள் மூவருமாக எட்டுப் பேரும் கப்பல் செலுத்துனர், பணியாட்கள் என அறுவருமாக மொத்தம் பதினான்கு பேர்கள் இலங்கைக்கான தமது வர்த்தகப் பயணத்தை ஆரம்பித்தனர்.

- அத்தியாயம் ஒன்பது

உப்பு, கருவாடு, துணி வகைகள் மற்றும் ஒரு தொகைக் குதிரைகளுடன் இரண்டு படகுகளையும் கப்பலில் ஏற்றிக்கொண்ட மாலிக் குழுவினர் கற்பிட்டி துறைமுகத்தை வந்தடைந்தனர். கடல் கொள்ளையர்கள் கடும் காற்றின் பாதிப்புக்களிலிருந்து அவர்களின் பிரயாணம பாதுகாப்பாக இருந்தமையினால் எதிர்பார்த்த நாளைவிட ஒரு நாள் முன்னதாகவே வந்துவிட்டனர்.

கற்பிட்டித் துறையில் கொடுக்க வேண்டிய பொருட்கள் யாவும் இறக்கப்பட்ட பின் புத்தளம் துறைமுகம் செல்ல வேண்டியிருந்தது. கொண்டு வந்திருந்த குதிரைகளை அங்கு நல்ல விலைக்கு விற்று உரிய பணத்தையும் பெற்றுக்கொண்டனர்.

மாலிக்கின் எண்ணங்கள் யாவும் கிட்டங்கி துறையைச் சுற்றியே வட்டமிட்டன. பொருட்களை எத்தனை விரைவாக விற்பனை செய்ய முடியுமோ அத்தனை சீக்கிரமாக முடித்துவிட்டு முதற்பயணத்தில் பார்த்த இடங்களை தனது பெற்றோர் களுடன் சென்று பார்ப்பதும் சில நாட்கள் அங்கு கழிப்பதும் அவனது திட்டமாக இருந்தது.

புத்தளத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த் மாலிக்கின் வணிகக் கப்பல் கொட்டியாரம் துறைமுகம் சென்று அங்குள்ள விடயங்களையெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்துவிட்டு மட்டு வாவியூடாகப் பயணத்தை மேற்கொண்டு கிட்டங்கி துறையை அடைந்தனர்.

அன்றைய பொழுது முழுவதும் பண்டகசாலையிலேயே கழிக்க வேண்டியதாயிற்று. நீண்ட நாட்களின் பின் மாலிக்கின் தந்தையைக் கண்ட நண்பர்கள் பலர் அவரோடு நீண்ட நேரம் அளவளாவியதுடன், அவரது மூத்த மகனின் சேதிகேட்டுத் தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டதுடன் அவரது மூன்று ஆண் பிள்ளைகளையும் கண்டதனால் அவர்கள் ஒருவரையும் இலகுவில் விடுவதாக இல்லை. அன்றிரவே இரவு விருந்துக்கான ஏற்பாடுகள் நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் தடபுடலாக விருந்தும் நடைபெற்றது. விருந்தினர் களை அன்பு வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டனர் அவர்கள்.

ஒருவாறு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறவும், கப்பலில் இருந்த பொருட்கள் இறக்கி முடிவதற்கும் சரியாகவிருந்தது. நேரமும் இரவு பன்னிரண்டையும் தாண்டி விட்டது.

பண்டகசாலையின் அருகே அமைந்திருந்த அதிகாரிகளின் இல்லம் ஒன்று அவர் களுக்காக ஒதுக்கித் தரப்பட்டு அதிலேயே அன்று அவர்கள் தங்க வைக்கப்பட்டனர். வேறு வணிகக் கப்பல்கள் அன்று இல்லாத காரணத்தினால் பண்டகசாலை இரைச்சல்கள் கெடுபிடிகள் ஓய்ந்து ஒரு அமைதியான சூழல் அங்கு காணப்பட்டது. பிரயாணக் களைப்பு ஒரு பக்கம் உண்ட மயக்கம் எல்லாம் சேர்ந்து அவர்களை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தியது.

பொழுது புலர்வதும் வாகனங்களின் நடமாட்டங்களும் மாலிக் குழுவினரை விழித்தெழச் செய்தது. ஆற அமர காலைக் கடன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து சிற்றுண்டியும் பரிமாறப்பட்ட பின்னர் மாலிக் மற்றவர்களை கப்பலுக்கு அனுப்பி வைத்தான்.

மாலிக் கப்பலை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை வெகு துரிதமாகச் செய்து முடித்த பின் கப்பலுக்குச் சென்று மற்றவர்களையும் படகு மூலம் மற்றைய இடங்களைப் பார்வையிடவும் சில நாட்கள் அங்கு தங்கு வதற்குமாக வகுத்திருந்த திட்டத்தை ஆரம்பித்தான்.

முற்பகல் வேளை மாலிக் தன் நண்பர்கள் இருவருடனும் தனது குடும்பத்தினருடனும் வழிகாட்டி மற்றும் பணியாட்களுடன் படகுகள் இரண்டிலும் பயணிக்க ஆரம்பித்தான்.

ஏற்கனவே மாலிக் தனது நண்பர்களுடன் துறையின் வடக்கே ஒரு தீவு போல் அமைந்திருந்ததும் அரேபியப் பிரதேசங்களில் இருந்து பல வருடங்களுக்கு முன்பிருந்து குடிபதியாகவிருந்தவர்களையும் காண் பதற்காக தனது குழுவினரை அழைத்துச் சென்றான்.

என்ன ஆச்சரியம். அங்கு குடிபதிகளாக இருந்தவர்களில் சிறுவர்கள், பெண்களைத் தவிர ஏனைய பெரியவர்கள் மாலிக்கின் தந்தையை அறிந்திருந்தார்கள். முன்பொரு காலத்தில் அவரிடம் பணியாட்களாக வேலை செய்த நினைவுகளையெல்லாம் மீட்டிப் பார்த்தனர். அவருடைய மகன் தான் மாலிக் என்பது கண்டு அவர்கள் அடைந்த சந்தோசத்திற்கு அளவே இல்லை.

பரஸ்பரம் பழைய நினைவுகள் பரிமாற்றங்களுடன் பலவிதமான விருந்தும் படைக் கப்பட்டது. இளநீர், நுங்கு என விருந்தாளிகளை திக்குமுக்காட வைத்து விட்டனர் அந்த குடியிருப்பாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாவியில் மீன்பிடிப்பதுவும், தோட்டங்கள் செய்வதுவும் நூலினாலான பல வகையான ஆடை வகைகளைக் கைவினையாகச் செய்வதன் மூலமும் அவர்களது ஜீவனோபாயம் நடந்து கொண்டிருப்பதை விருந்தினர்கள் அவதானித்தனர்.

விடைபெறும் நேரம் நெருங்கியது. மாலிக் குழுவினர் தம்மோடு கொண்டு வந்திருந்த கோதுமை, திராட்சை, பேரீச்சம் பழங்களில் ஒரு தொகுதியை அவர்களுக்கு அன்பளிப்புச் செய்துவிட்டு விடைபெற்றனர்.

அவர்களது பேச்சுக்களின் மத்தியில் இக்கிராமம் துறைநீலாவணை என்றும் இங்கு மிக நீண்டகாலமாக சீர்பாத குலத்தினர் இந்து மதத்தவர்களாக வாழ்கின்றனர் என்றும் வணக்கஸ்தலங்களான கோயில்கள் பல அமைந்திருப்பதாகவும் அவற்றில் குளுத்திக்கோயில் பிரதானமானதென்றும், தாங்கள் இருக்கும் இடம் இபுறாகீம் பிட்டி என்றழைக்கப்படுவதாகவும் தெரிந்துகொண்டனர்.

- அத்தியாயம் பத்து

மாலிக் குழுவினர் மீண்டும் கப்பலுக்கு வந்து சில நாட்களுக்குத் தேவையான கோதுமை மற்றும் பழவகைகளில் ஒரு தொகுதியை ஏற்றிக்கொண்டு துறையின் கிழக்கே தமது பயணத்தை மேற்கொண்டனர்.

தரை நெருங்க நெருங்க எல்லோரது கவனமும் எதிரே மலர்ந்து விரிந்து கிடக்கும் வனாந்திரத்தின் அடர்த்தி செழுமையினை ரசிப்பதிலேயே இருந்தன. உயர்ந்து நிழற்சோலையாய் காட்சிதரும் அவ்விடத்தை நோக்கிய மாலிக்கின் தாய் வியப்புடன் "நாம் எங்கே செல்லப் போகிறோம்" என்பது போல மகனை நோக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரின் எண்ணத்தைப் புரிந்துகொண்டவனாய் மதுர மரங்கள் வளர்ந்திருந்த வாவியின் கரையை நெருங்குகையில் தான் நாங்கள் இங்குதான் இறங்கப் போகிறோம் என்று கூறினான்.

அந்த மதுரமுனைக்கா என்று ஆச்சரியம் ததும்பக் கேட்டார் மாலிக்கின் தந்தையார். எல்லோரும் படகிலிருந்து இறங்கி ஒரு மரத்தில் இரு படகு களையும் கயிறு கொண்டு கட்டினார்கள். ஆளுக்கொரு பைகளாக அவர்கள் கொண்டு வந்திருந்த உணவுப் பொருட்களை எடுத்துக் கொண்டு அங்கு ஏற்கனவே மாலிக் பயணித்த அந்த ஒரு வழிப்பாதை வழியாக காட்டினுள் நுழைந்தனர். இதமான காற்றும் மகிழம் பூவின் சுகமான நறுமணமும் அவர்களை அன்போடு வரவேற்றது.

ஆங்காங்கே மேய்ந்து கொண்டிருந்த மான்களும் முயல்களும் காணக்கூடாத வற்றைக் கண்டுகொண்ட பாவனையில் மறைவிடம் நோக்கி ஓடி மறைந்தன. சற்று உள்ளே நுழைந்ததும் அங்கு குடியிருந்த குடிசை வாசிகளும் ஏற்கனவே அறிமுகமான மாலிக்கைக் கண்டதும் வருபவர்கள் அவனது குடும்பத்தவர்களாகத் தான் இருக்க வேண்டும் என்று உறுதிசெய்து கொண்டனர். முதற்தடவை மாலிக் மற்றும் நண்பர்களுக்கு உதவியாகச் சென்றவர் கடந்த அனுபவத் தினாலும் மாலிக் குழுவினரின் பண்பினாலும் பெரிதும் கவரப்பட்ட வராதலால் அவர்களின் வருகையை தனது புன்னகை மூலம் ஆமோதித்தார்.

பரஸ்பரம் அறிமுகங்களும், உணவுப் பரிமாறல்களும் நடந்தன. நேரத்தை மறந்து மதியம் வரை பேசிக்கொண்டிருந்தனர். பகல் போசனத்தை விருந்தாளிகளுக்கு வழங்க வேண்டும் என்ற ஆசை அந்தக் குடிசை வாசிகளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நினைத்தபடி பகல்வேளை நெருங்கவும் சமுளை இலைகளில் வைக்கப்பட்ட பலாப்பழங்கள், நாவல் பழங்கள், வாழைப் பழங்கள் எனப் பல வகையான கனிகளும்; மீன்வறுவல், முயல் கறி, ஒரு வகையான சம்பல் என கமகம என்ற மணத்துடன் உணவுக்காகப் படைக்கப்பட்டவைகள் வாயூற வைத்தன. எல்லோரும் சம்பாசனை களுடன் சேர்ந்து உணவுகள் உட்கொண்டனர்.

இவ்வேளையில் குடிசையின் பின்புறமிருந்து "அம்மா" என்று ஒரு குரல் வந்ததும் "வாறன் பிள்ளை" என்று கூறியவாறு அவளை நோக்கி நடந்தாள் அவளது தாயாகிய இப்பெண். வெற்றிலை பாக்கு நிரம்பிய தட்டமொன்றை நீட்டியவாறு நின்ற அவ்விள நங்கையை மாலிக் கண்டுகொண்டான்.

முதன் முதலாக அப்பெண்ணைக் கண்ட அவனது உள்ளம் பல வகையான வினாக்களை எழுப்பியது. யார் இந்தப் பெண்? சென்ற முறை நான் காணவில்லையே. எங்கிருந்து வந்திருக்கிறாள் என்பன போன்ற கேள்விகளுக்கு விடை காணாமல் தவித்தான் மாலிக்.

மாலிக்கின் தவிப்பைக் கண்ட அப்பெண்ணின் அப்பா மாலிக்கிடம், அது எனது ஒரே மகள் மோகினி. சென்ற முறை நீங்கள் வந்தபோது குறுமண் வெளியில் எங்களது உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தவர் இன்று காலை தான் வந்து சேர்ந்தார் என்று கூறினார்.

இந்தக் குடிசையிலும் இப்படி ஒரு அழகு தேவதையா? வியந்தான் மாலிக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்டு வடிக்கப்பட்ட சிலை போல் அங்க அவயவங்கள் யாவும் அளந்து வைத்தாற்போலிருந்த அம்மங்கையை தனது முதற் பார்வை யிலேயே அளவிட்டுக் கொண்ட அவன் எண்ணங்கள் கனவுலகில் சங்கமித்தன.

தானும் அவளும் பூந்தோட்டங்களில் பாடி மகிழ்ந்தது போன்றோர் உணர்வு. சில நிமிடங்கள் தன்னை மறந்தவனாக, வைத்த கண்களைப் பின்வாங்காமல் தவித்து நின்றான் அந்த அழகு வாலிபன் மாலிக்.

நிலைமையை ஓரளவு புரிந்துகொண்ட நண்பன் அஸீஸ் பலமுறை மாலிக் என்று அழைத்தது கூட அவனது சிந்தனையில் படவில்லை.

"என்ன மாலிக் அடுத்து நாம் எங்கே போகப்போகிறோம்" என்ற தனது தந்தையின் குரல் கேட்ட பின்தான் தனது நிலை உணர்ந்து மாலிக் ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தந்தையின் கேள்விக்குப் பதிலளித்தான்.

பழுத்த அனுபவசாலியான மாலிக்கின் தந்தை தனது மகனின் மனவோட்டத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டார். அடுத்த நமது பயணத்தை ஆரம்பிக்கலாமே என்று கூறியதன் மூலம் தனது மகனை இவ்வுலகிற்குக் கொண்டு வந்த தந்தையின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்ட மாலிக் நாம் தொடர்ந்து செல்ல வேண்டிய இடங்கள் சற்று சிரமமாகவுள்ளதை மனதில் நினைத்தவனாக தனது தாயிடம் விடயங் களைக் கூறி அவரது விருப்பத்தையும் கோரி நின்றான்.

ஏற்கனவே களைப்படைந்திருந்த அவர் "நான் இங்கேயே இருந்து கொள்கிறேன் நீங்கள் சென்று வாருங்கள்" என்று கூறியதுடன் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன்மாரில் இளையவனையும் தன்னோடு விட்டுச் செல்லுமாறும் ஆலோசனை கூறினார். அவனும் ஏழு எட்டு வயது சிறுவனாதலால் தாயாரின் யோசனை மாலிக்கிற்கு நல்லதாகவே பட்டது.

அடுத்த சில நொடிகளில் அவர்கள் பற்றைகள் மரம் கொடிகளை அகற்றி மோகினியின் அப்பாவுடன் பயணித்தனர். முன்பொரு முறை சென்ற அதே வழியினைப் பின்பற்றினர்.

- அத்தியாயம் பதினொன்று

மிகக் கவனமாகவும் முட்புதர்களிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டும் பயணித்த அவர்களில் அனுபவசாலியான மாலிக்கின் தந்தையின் சிந்தனை அப்பிரதேசங் களின் அழகை ரசித்தது மட்டுமல்லாமல் மரச்செடி கொடி பற்றைகள் யாவும் வெண்மையான ஏதோ ஒன்றினால் நிறந்தீட்டப்பட்டது போல் காணப்படுவது என்ன என்பதை உற்று நோக்கினார். ஆடைகள் மற்றும் துணி வகைகள் ஏற்றுமதி வியாபாரத்தில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்த அவர் அவற்றின் கொள்வனவுக்காகப் பலமுறை அத்தொழிற்சாலைகளுக்கும் சென்றிருக்கிறார். அவரது எண்ணங்கள் பருத்திப் பஞ்சுகள் எல்லாம் இவ்வாறு வீணாகிப் போகிறதே என்று கவலையடைய வைத்தது.

எவ்வாறாயினும் இவற்றைப் பிரயோசனப்படுத்தினால் நல்ல வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகளும் உண்டு என்று எண்ணிக்கொண்டார். இவ்வாறான நினைப்புகளுடனும் சென்றமுறை ஏற்பட்ட அனுபவங்கள் போன்றவற்றை அளவளாவிக் கொண்ட அவர்கள் கேணியை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேணிக்குக் கிழக்கே உள்ள பெரிய மரங்களும் முட்புதர்களும் பற்றை களும் பார்ப்பதற்கு அழகிய தோற்றத்தை வழங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்த மாலிக்கின் தந்தை இங்கும் ஒரு விடயத்தை உற்று நோக்கினார். அங்கே நெடிதுயர்ந்து வளர்ந்திருந்த கனி மரங்கள் மட்டுமல்லாது நூலுக்காக நிறமூட்டத் தேவையான ஒலிய மரங்கள் நிறைந்து காணப்படுவதும் அவரது கூடிய கவனத்திற்குள்ளானது.

ஒலிய மரத்தின் பட்டைகளைச் சாயமூட்டப் பாவிப்பது பற்றி அறிந்திருந்த அவருக்கு இடையிடையே நறுவிலி மரம் கள்ளிச் செடிகளின் பழங்களும் சிவப்பு நிறத்தைப் பெறுவதற்காக உபயோகிப்பதையும் நன்கறிந்திருந்தார்.

பயணத்தின் ஒவ்வொரு நகர்வும் அவருக்கு ஒவ்வொரு புதிய புதிய சிந்தனை களையே தோற்றுவித்துக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் ஒரு தொழில் குறிப்பாக நெசவுத் தொழிலை ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடுகள் இப்பிரதேசங்களில் காணப்படுவதை அறிந்துகொண்டார்.

கேணியைத் தொடர்ந்து பின் காடு, கடற்கரை என எல்லா இடங்க ளையும் கடந்து ஒல்லிக்கேணியை அடைவதற்கும் மேற்கே சூரியன் மறைவதற்கும் சரியாகவிருந்தது.

சென்ற பயணத்தில் ஒரு இரவைக் கழித்த அதே இடத்தில் அனைவரும் அமர்ந்து கொண்டனர். அன்றைய பயணம் அவர்களை நன்கு களைப்படைய வைத்திருந்தது. வழியில் பறித்தெடுத்த பலாப்பழம், நாவல்பழம், முந்திரிகைப்பழம் போன்றவற்றுடன் அவர்கள் எடுத்து வந்த பேரீச்சம்பழம், திராட்சைப்பழம் போன்றவற்றை உண்டு மகிழ்ந்தனர்.

சுத்தமான நீர் அங்குள்ள நீர் நிலைகளில் காணப்பட்டதால் அவர்களது பாத்திரங்களில் தூய நீரையும் நிரப்பிக்கொண்டனர். மோகினியின் தந்தை தீமூட்டி பசும்பால் காய்ச்சி வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் தங்களது அனுபவங்களையும் தாங்கள் கண்டவை களையும் பிரதேசத்தின் அழகினையும் வியந்து வியந்து நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்தனர். பூரண நிலவு மரங் களினூடாக தனது ஒளியினைப் பாய்ச்சி அங்கு ஒருவரை ஒருவர் முகம் பார்த்துப் பேசக்கூடிய சூழலையும் ஏற்படுத்தியிருந்தது.

மாலிக் தனது தந்தை பாரிய சிந்தனையில் ஆழ்ந்திருப்பதையும் தீவிரமாக எதையோ திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதையும் தெளிவாகப் புரிந்துகொண்டான்.

அவனது எண்ணங்கள் யாவும் தனது தாயார், அண்ணனின் மகன் ஆகியோர் களுடன் மோகினி எப்படி நடந்து கொள்கிறாளோ, எவ்வாறு ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வார்களோ எனப்பலவாறு சிந்திக்கத் துவங்கியது. இச்சிந்தனைகளில் வயப்பட்ட மாலிக் பிரயாணக் களைப்பில் கண்ணயர்ந்து விட்டான்.

- அத்தியாயம் பன்னிரெண்டு

மோகினியின் குடிசை வீட்டிற்கு அருகில் நன்கு கிளை பரப்பி உயர்ந்து வளர்ந்த மதுர மரம் ஒன்று நின்றது. அம்மரத்தில் பத்துப் பதினைந்து அடி உயரத்தில் ஒரு பறண் அமைக்கப்பட்டிருந்தது. நீர் நிலைகளிலிருந்து வீசும் காற்றின் இதமான சுகத்தினை அனுபவிப்பதற்காக அதில் ஏறி அமர்ந்துகொள்வது வழக்கம்.

மாலிக்கின் தாயாரைத் தமது பொறுப்பில் விட்டுச் சென்றுவிட்டதனால் அவரது அன்பையும் நன்மதிப்பைப் பெறுவதிலும் கூடிய அக்கறை எடுத்தனர் மோகினியும் அவளது தாயாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சிய பாலுடனும் கனி வகைகளுடனும் வெற்றிலை பாக்குத் தட்டத்துடனும் மோகினியுடன் மாலிக்கின் தாயாரையும் அவரது பேரனையும் அப்பறனில் போய் அமருமாறு வேண்டிக்கொண்டனர் மோகினியின் அம்மா.

எப்படியும் இரண்டு நாட்களாவது சென்ற பின்தான் மாலிக் குழுவினர் வந்து சேர்வார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இக்கால இடைவெளிக்குள் எதுவித குறைகளும் ஏற்பட்டு விடாமல் விருந்தினர் களைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் கூடிய அக்கறை எடுத்த மோகினியும் தாயாரும் அன்பு வெள்ளத்தில் மாலிக்கின் தாயாரை மூழ்கடிக்கச் செய்துவிட்டனர். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு மொழிகூட ஒரு பிரச்சினையாகத் தெரிய வில்லை அவர்களுக்கு. அவர்கள் அதிகமாக பாவனைகள் மூலம் பேசிக்கொள் வதும் ஒரு அமைதியான விடயம்தான். இங்கு என்ன நடைபெறுகிறது, என்ன கதைக்கிறார்கள் என்பது ஒன்றும் புரியாமல் சிரிப்பதும் கனி வகைகளைச் சுவைப் பதுமாக இருந்தான் சிறுவன்.

இதனிடையே முதன் முதலாக மாலிக்கைக் கண்ட மோகினி அவனது அழகையும் கம்பீரத்தையும் கண்டு தன்னையே ஒரு கணம் மறந்து நின்றவள் அவனைப் பற்றிய எண்ணங்களிலிருந்து இதுவரை மீள முடியாதவளாகக் காணப்பட்டாள். இனம் புரியாது ஒரு உறவும் அந்த உறவைப் பெற்றெடுத்த இந்தத் தாயை பொறுப்புடன் பார்த்துக்கொள்வது தனது கடமை என்றும் நினைக்கத் தலைப்பட்டாள்.

இந்தக் காட்டுப் பிரதேசத்தில் இவர்கள் எங்கே தங்கப் போகிறார்கள்: மேலைநாட்டு வாழ்க்கை முறை, செல்வம் நிரம்பப் பெற்றவர்கள், கப்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தக்காரர்கள் என்றெல்லாம் சம்பந்தம் சம்பந்தமில்லாமல் எண்ணத் தலைப்பட்டாள். ஏதாவது குறைகண்டு நம்மை ஏசி விடுவார்களோ, கோபித்துக் கொள்வார்களோ என்றெல்லாம் எண்ணினாள்.

ஒரு கணம் நாம் ஏன் இவர்கள் மீது இவ்வளவு கரிசனை காட்டுகிறோம் என்றெல்லாம் நினைப்பாள்.

இவற்றையெல்லாம் விட இரவும் நெருங்கிக் கொண்டிருந்ததால் பஞ்சணையில் துகில்கொள்ளும் இவர்கள் இந்தக் குடிசையில் இவ்வாறு உறங்குவார்கள் என்று நினைப்பதே அவளுக்குச் சுமையாகவிருந்தது.

மோகினியும் தாயாரும் தம்மை விழுந்து விழுந்து உபசரிப்பதும், அதீத அன்பு காட்டுவதும், தமக்கும் பேரனுக்கும் ஏதாவது குறை வந்து விடக்கூடாது என்பதில் அவர்கள் எடுக்கின்ற கூடிய கவனமும் அக்குடும் பத்தின் மீது மாலிக்கின் தாயாருக்கு ஒரு அன்பையும் மரியாதையையும் ஏற்படுத்தியது. வாணிபம், கடற்பயணம், சொகுசான வாழ்க்கை முறை, சுற்றவரப் பணியாட்கள் என வாழ்ந்த அத்தாய்க்கு இப்படி தன்னை விழுந்து விழுந்து உபசரிக்கும் பெண்களைக் காண்பது ஒரு புதிய அனுபவமாக விருந்தது.

நகர வாழ்க்கை முறைக்கும் கிராமிய வாழ்க்கை முறைமைக்கும் இடையே உள்ள பாரிய வேறுபாட்டை அத்தாய் மிகத்தெளிவாகப் புரிந்துகொண்டார். கடமைக்காகப் பணிபுரிபவர்களுக்கும், கள்ளம் கபடமில்லாத தூய அன்போடு பணி புரிபவர்களுக்கும் எத்தனை வேறுபாடு. பொய்மைக்கும் உண்மைக்கும் இடையேயுள்ள தூரத்தை அந்தத் தாய் அனுபவ ரீதியாக அறிந்துகொண்டிருப்பது அவரை ஒரு புதிய உலகத் துக்கே கொண்டு சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை நாம் ஏன் நம்முடன் அழைத்துச் செல்லக்கூடாது என்று கூட நினைத்த அவர் இச்சூழல் வாழ்க்கை முறை என்பனவற்றை நமது வாழ்க்கை முறையுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். எவ்வளவோ நிம்மதியான இயந்திரமற்ற இவ்வாழ்க்கையைத் துறந்து இவர்கள் நம்மோடு வருவார்களா என்ன என்று மறுகணம் தன்னைத் தேற்றிக்கொள்வார்.

தனது இந்த அனுபவத்தை தனது கணவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என அவரது வருகையை எதிர்பார்த்திருந்தார் மாலிக்கின் தாயார்.

• • • •

ஒல்லிக்கேணியில் அன்றிரவைக் கழித்த மாலிக் தனது தந்தை மற்றவர்கள் எல்லாம் காலைக் கதிரவனின் இளம் சூட்டின் ஸ்பரிசத்தினால் விழித் தெழுந்தனர். அன்றிரவு களைப்பும் அலுப்பும் அவர்களை நல்ல தூக்கத்தில் ஆழ்த்தியிருந்தது.

காலை எழுந்தவுடன் தாமரை, அல்லி, ஆம்பல்கள் பூத்துக் குலுங்கி பல நிறங்களில் காட்சிதரும் அழகும் அதை ஏந்தி நின்ற நீர் தடாகங்கள் போன்ற நீர் நிலைகளும் தங்களைப் பிடிப்பதற்கு யாருமே இல்லை என்ற இறுமாப்பில் சுதந்திரமாக ஓடி விளையாடும் மீன்களும் அவை நீரில் எழுப்பும் குமிழிகளும் அவர்களைப் பரவசப்படுத்தின.

பச்சைப் பசேலென்ற புல்வெளியில் பனித்துளிகள் கதிரவன் வரவு கண்டு படிப்படியாக புல்வெளிகளின் கீழ் ஒழிந்து கொள்வதும் உயர வளர்ந்த பனை, தென்னை மரங்களிலிருந்து காக்கைகள் பறந்து செல்வதும் அங்கு பல மரமுந்திரி மரங்களைக் கொண்ட தோட்டம் ஒன்றில் காய்கள், கனிகள் நிறைந்து காண்பதும், ஆல மரங்கள் பல கிளை விரித்து பரந்து செழிப்புடனும் அவைகள் தாடி வைத்தாற் போல் விழுதுகளை நிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்து விழுதுகள் தான் மரத்தைத் தாங்கி நிற்கிறதோ என்று எண்ணத் தோன்றும் வகையில் காட்சி தந்தன. அங்கு காணப்பட்ட பழைய பாத்திரங்கள், அடுப்பு, உரல் போன்றமைந்திருந்த கல்வெட்டுக்கள், எகிப்திய மம்மிகள் போன்று அவை அமைந்திருக்கிறதே என்று வியந்து கொண்டார். நிச்சயமாக இங்கு ஒரு சமூகம் வாழ்ந்திருக்கிறது எனத் திடமாக நம்பினார். இங்கு பார்க்க வேண்டிய பல விடயங்கள் இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் மோகினியின் அப்பாவிடம் வினவினார். இது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமாவென்று.

எனக்கு இது பற்றி அவ்வளவாகத் தெரியாது. ஆனால் நீலாவணையில் ஒரு முதியவர் இருக்கிறார். அவர் இது பற்றி அறிந்திருக்கலாம் என்று மேற்கே கை நீட்டிக்காட்டினார். மேலும் சென்ற முறை தம்பி மாலிக்கும் அவரிடம் பல விடயங் களைக் கேட்டறிந்து கொண்டார்கள் என்று கூறி முடித்தார்.

நிச்சயமாக அவரைக் காணவேண்டும். அவரிடம் பல விடயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் அவரைப் பற்றிக் கொண்டது.

ஒல்லிக் கேணியின் பசுமையும் வனப்பும் அவரைப் பெரிதும் கவர்ந்ததுடன் மர நிழலின் கீழ் அமர்ந்து சில மணி நேரம் ஓய்வெடுக்க வேண்டும் என மனம் விரும்பியது மகனிடமும் தனது விருப்பத்தைக் கூறினார்.

யார் மறுக்கப் போகிறார்கள்?

மனைவி தன்னோடு இங்கு வந்திருந்தால் அவரின் சோகத்துக்கு இச்சூழல் மருந்தாக அமைந்திருக்கலாம் என்றும் அவர் நினைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியும் பிற்பகல் வரை இங்குதான் இருக்கப் போகிறார்கள் என்பதறிந்த மோகினியின் அப்பா விரைவாகக் காரியத்தில் இறங்கினார்.

இதோ வருகிறேன்... என்று கூறிவிட்டுச் சென்ற அவர் சிறிது நேரத்தில் வயற்கோழி, காடை எனப் பல பறவைகளுடனும், முந்திரிப் பழங்கள் நிறைந்த ஒரு பையுடனும் வந்தார்.

முந்திரிகைப் பழங்களை விருந்தாளிக்கு உண்ணக் கொடுத்த அவர் அதன் விதைகளை வேறாக்கி நெருப்பு மூட்டி அதில் போட்டு சுட்டபின் உள்விதையை அவர்களுக்கு உண்ணக் கொடுத்துவிட்டு பறவை களைச் சமையல் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

முந்திரிப் பருப்பில் தமது கவனத்தைச் செலுத்திய விருந்தினர்கள் அதன் உருசியிலும், சுவையிலும் மயங்கிப் போய்விட்டனர். மதியம் நெருங்கு வதற்கும் பகலுணவுகளின் ஏற்பாடுகள் நிறைவுறுவதற்கும் சரியாக விருந்தது. எல்லோரும் அமர்ந்து உணவுண்டனர்.

மோகினியின் அப்பாவுக்கு நன்றி கூறியதோடு மட்டுமல்லாமல் இந்த அனுபவத்தை மறக்கவே முடியாது என்று வாய்விட்டுக் கூறினார் மாலிக்கின் தந்தை.

மாலிக்கின் தந்தை காலித் அவர்களும் மோகினியின் தந்தை கந்தசுவாமியும் மிகவும் அந்நியோன்யமாகப் பழகிய விதம் மாலிக் மனதில் ஒரு உவகையை ஏற்படுத்தியது. இவ்வாறு பெரியவர்கள் நெருங்கிப் பழகுவது கண்டு அவன் பெரிதும் வியப்புற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தந்தையுடன் அதிகமானவர்கள் இவ்வாறு மிகவும் நெருக்கமாகப் பழகுவதை அவன் கண்டதில்லை. எல்லோரும் வியாபாரம், பயணம், முதலாளி, தொழிலாளி எனப்பட்டும் படாமலும் பழகுவதையே அவன் கண்டிருக்கிறான். இருந்தாலும் தன் தாயாரிடம் தந்தை மிகவும் பாசமாகவும் அன்பாகவும் அவரது மனம் நொந்து கொள்ளாமலும் பழகுவதை அவன் மறக்கவில்லை.

அதே போன்றதொரு பரிவு பாசத்துடன் கந்தசுவாமியும் தனது தந்தையும் பழகுவது அவனுக்கு பேரானந்தம் என்பதைவிட தனது மனதில் படிப்படியாய் துளிர்விட்டு வரும் மோகினி மீதான அன்பு காதலாக விரிவதை தன் பெற்றோரிடம் தெரிவித்து அவர்களின் சம்மதத்தினை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று திடமாக நம்ப வைத்தது.

## ● அத்தியாயம் பதின்மூன்று

பெரியநீலாவணையில் ஒரு முதியவருடன் பிரயாணிகள் பேசிக் கொண்டிருந்தனர். அந்தப் பெரியவர் தன்னை தம்பியப்பா என்றும், ஐம்பது வருடங்களாகத் தான் இங்கு குடும்பமாக வசித்து வருவதாகவும், தாம் சீர்பாததேவியின் வாரிசுகள் என்றும், தமது உறவினர்கள் பலர் மண்டூர், மகிழூர், குறுமண்வெளி போன்ற இடங்களில் இருப்பதாகவும் அறிமுகம் செய்துகொண்டார்.

ஒரு காலத்தில் திமிலர்கள் என்ற ஒரு குழுவினர்கள் வாழ்ந்து வந்ததாகவும் அவர்கள் கொள்ளைகளில் ஈடுபட்டதாகவும் கிராமங்களுட் புகுந்து அட்டகாசம் செய்து வந்ததாகவும் அவர்களின் கொடுமைகள் தாங்காது வியாபாரத்திற்காக மட்டு வாவியினூடாக கிட்டங்கித் துறைக்கு வருகின்ற அரேபியர், வர்த்தகர்களிடம் திமிலர்களின் அட்டகாசங்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு விண்ணப்பித்ததாகவும், இதையேற்று வணிகர் குழுவினர் ஆயுதங்களுடன் வந்து அவர்களை விரட்டி அடித்த தாகவும் கூறினார்.

இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த இந்துக்கள் இதற்கு மாற்றீடாக தமது பெண் மக்களைத் திருமணம் செய்து கொடுத்ததாகவும் அவர்களில் சிலர் பல காலம் ஒல்லிக்கேணியில் குடிபதிகளாக வாழ்ந்ததாகவும் பின்னர் புத்தளம் கற்பிட்டி, குதிரைமலை போன்ற பிரதேசங்களுக்கு குடிபெயர்ந்து விட்டதாகவும் கூறினார்.

காலித் அவர்களுக்கு ஒல்லிக் கேணியில் தான் கண்ட தடயங்களுக்கான பதிலை தம்பியப்பா அவர்களின் விளக்கத்திலிருந்து தெளிவாகியது. அங்கு மரமுந்திரிகை ஒழுங்குபடுத்தப்பட்ட தோட்டமாகவும் நீர் நிலைகள் யாவும் சீர்படுத்தப்பட்ட அமைப்பிலும் தோட்டச் செய்கைகளில் ஈடுபட்டதற்கான அறிகுறிகளும் ஒரு குழுவினர் ஒல்லிக்கேணியில் வாழ்ந்ததற்கான ஆதாரங்களாக அமைந்தன.

கிட்டங்கித் துறைக்கும் ஒல்லிக் கேணிக்கும் இடையே பாரிய தூரம் இல்லை என்பதனாலும் இப்பகுதியில் ஒரு பசுமையான சூழ்நிலையாக அப்பகுதி காணப் பட்டன. குடியிருப்புக்கான வாய்ப்பினை வழங்கியது மட்டுமல்லாமல் இடைப்பட்ட வனப்பிரதேசங்களில் மிருகங்களின் தொல்லைகள் இருந்தமையும் காரணமாயின.

மேற்படி விடயங்களையெல்லாம் கணக்குப் போட்ட மாலிக்கின் தந்தை காலித் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக தன் தலையைப் பலமாக ஆட்டிக்கொண்டார். உரையாடல்கள் ஒருவாறு முடிவுற்றது. இளநீரும் பரிமாறப்பட்ட பின் குழுவினர் விடைபெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மனைவியைக் கண்டு தனது எண்ணங்கள், விருப்பங்கள் மட்டுமல்லாமல் மாலிக்கின் நடவடிக்கைகளிலிருந்து அவர் தெரிந்து கொண்ட அவதானிப்புக்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொல்ல வேண்டும் என்று எண்ணிக்கொண்டார். மனைவியுடன் விட்டுவந்த பேரனின் நினைவும் அவருக்கு வந்தபடியால் வேக வேகமாக பயணிக்கு மாறு மற்றவர்களைப் பணித்ததுடன் அவரும் வேகமாக நடக்கத் துவங்கினார்.

மான்களும் முயல்களும் அங்குமிங்கும் பாய்வதை ரசித்தவாறு மோகினியின் குடிசையை அடைவதற்கும் மாலைச் சூரியன் மேற்கு வானில் மறைவதற்கும் சரியாகவிருந்தது.

எல்லோரும் களைப்புடன் வந்திருப்பதை அறிந்த மோகினியும் அவளது தாயாரும் அவர்களை வரவேற்று உணவு பரிமாறினர். நாளை எவ்வாறாயினும் கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்து கப்பலில் ஏற்றி முடிக்க வேண்டியிருப்பதனாலும், நாளை மறுதினமாவது தமது கப்பல் பயணிக்க வேண்டும் என்று முடிவெடுத்த மாலிக் சற்று ஆறுதலாக அமர்ந்து உணவருந்திவிட்டு தனது நண்பர்கள் அஸீஸ், ஹஸன் ஆகியோருடன் இரு படகுகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு பண்டகசாலை நோக்கி விரைந்தான்.

அன்றிரவு முழுவதும் மாலிக்கும் நண்பர்களும் கண்ணயரவே இல்லை. இரவோடிரவாக பண்டகசாலையில் உள்ள பொருட்கள் விலை தீர்மானிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டன. துறைமுக வழமையான காரியாலய பத்திரங்கள், முறிகள் என எல்லாம் பெற்றதும் கூலியாட்களை அழைத்து பொருட்களைக் கப்பலில் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. கூலியாட்கள் பொருட்களைக் கப்பலில் ஏற்றத் துவங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு பண்டகசாலையை விட்டு வெளியேறிய மாலிக் நண்பர்களுடன் படகேறி மோகினியின் குடிசையை நோக்கி விரைந்தான்.

அங்கு எல்லோரும் கூடி சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டிருந்தனர். மாலிக்கைக் கண்ட மோகினி மான் எனத் துள்ளி எழுந்தாள். நாணம் மேலீட்டால் குடிசைக்குள் சென்று மறைந்து கொண்டாள்.

மாலிக்கின் பெற்றோர்கள் மனதுள் சிரித்துக் கொண்டதுடன் ரசித்தும் கொண்டனர். எவற்றையும் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

மாலிக்கும் ஒரு வகை சங்கடத்துடன் கப்பலில் பொருட்கள் ஏற்றியாகி விட்டது. பிரயாணத்துக்கு ஆயத்தமாக நிற்பதனால் "நாம் புறப்பட வேண்டியிருக்கிறது" என்று தந்தையிடம் கூறினான்.

"ஆமாம் ஆமாம் நாங்களும் ஆயத்தமாகத்தான் இருக்கிறோம்" என்று கூறியவாறு கந்தசாமியை நோக்கி, "நாங்கள் சென்று வருகிறோமே" என்று கூறினார்.

குடிசையின் உள்ளே இருந்து ஒரு தேவதையின் குரலொப்ப "மதிய உணவு செய்து கொண்டிருக்கிறோம். சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டும்" என்று மோகினி கூறினாள்.

மோகினியின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேச யாருமில்லை. எல்லோரும் ஒருமித்து தலையாட்டியதன் மூலம் மோகினியின் கோரிக்கைக்கு சம்மதித்தனர்.

மான் இறைச்சிக் கறியும், ரொட்டியும் பகலுணவாகப் பரிமாறப்பட்டன. பழ வகை களுக்கும் பஞ்சமில்லை. எல்லோரும் ருசித்துச் சாப்பிட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலிக் சாப்பிடுவதை மறைந்து நின்று பார்த்துக் கொண்டு நிற்பதை மாலிக். கடைக் கண்ணால் பார்த்து ரசித்தான். மோகினி ஏதோ சாடை காட்டுவது போல் மாலிக் உணர்ந்தான்.

ஏதோ ஒரு சாக்கைச் சொல்லி குடிசையின் பின்புறம் சென்றான். அங்கே பரணில் மோகினி கண்ணீர் கசிந்த வண்ணம் நிற்பதைக் கண்டு கதிகலங்கிப் போனான் மாலிக். என்ன செய்வது என்றும் புரியவில்லை. எப்படி ஆறுதல் சொல்வது என்றும் தெரியவில்லை. ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்ட மாலிக் நான் மிக விரைவில் திரும்பி வருவதாகவும், வந்த பின் நான் இங்கேயே தங்கிவிடுவேன் என்றும் தட்டுத்தடுமாறி கூறி வைத்தான்.

உண்மையில் மாலிக் நிலைமையைச் சமாளிப்பதற்கும், அவளது கண்ணீரைத் துடைப்பதற்காகவுமே அவ்வாறு சொல்லி வைத்தான்.

படிப்படியாக அவளது அழுகை நின்று முகத்தில் புன்னகை படரத் தொடங்கியது. தொடர்ந்தும் பல ஆறுதல் வார்த்தைகள் கூறிய மாலிக் முன்புறம் வந்து எல்லோருடனும் படகில் ஏறி கப்பலை அடைந்தான். இங்கு மோகினி அவனுடைய வருகைக்கான நாளை எண்ணி எண்ணிக் காத்திருந்தாள்.

- அத்தியாயம் பதின்நான்கு

மாலிக்கின் கப்பல் புத்தளம் துறைமுகத்தை வந்தடைந்தது. எமனிலிருந்து வரும் போது புத்தளத்தில் விற்கப்பட்ட குதிரைகளின் பெறுமதிக்கான முத்துக்களைப் பெற வேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக நீண்ட நாட்களின் பின்னர் தமது பழைய நண்பர் காலிதைக் கண்ட பலர் அவரைக் கட்டிப்பிடித்து ஆலிங்கனம் செய்தனர். குசலம் விசாரித்தனர். தந்தையைப் போன்று மகன் மாலிக்கும் நேர்மை யானவர், நம்பிக்கைக்குரியவர் என்று பாராட்டுக்களும் தெரிவித்தனர். இவற்றையெல்லாம் கண்டு கேட்ட பெற்றோருக்குத் தன் மகன் மீது மேலும் அன்பு அதிகரித்தது.

பழைய நண்பர்கள் கூடிவிட்டால் கேட்கவும் வேண்டுமா?

புத்தளப் பிரதேசத்தில் குஞ்சாலி மரைக்கார், வாப்பாச்சி மரைக்கார் போன்றவர்கள் மிகவும் பிரசித்தமானவர்கள். முத்துக்குளிப்பு இவர்களது பிரதான தொழிலாகவும் அதன் ஏற்றுமதி மூலம் பெருமளவு இலாபம் ஈட்டுபவர்களாகவும் இருந்தனர். இவர்களுடன் நெருக்கமான உறவைக் காலித் வளர்த்திருந்தார். அவரது ஓய்வின் பின் வியாபாரத்தைத் தனது மக்களிடம் ஒப்படைத்திருந்தார்.

தற்போது தனது ஆத்ம நண்பர்களான குஞ்சாலி மரைக்கார் மற்றும் வாப்பாச்சி மரைக்கார் ஆகியவர்களுடன் அளவளாவிக் கொண்டிருக்கும் போது முஸ்லிம்கள் வர்த்தகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் பேசிக்கொண்டனர்.

புத்தளம், கற்பிட்டிப் பிரதேசத்தில் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்தவர்கள் முஸ்லிம்கள். இவர்களிடம் அறாபிய வர்த்தகர்கள் மிகவும் நெருக்க மாகவும் அதிகமான வர்த்தக ஏற்றுமதி இறக்குமதியிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வேளையில் தான் சென்ற மாதம் போர்த்துக்கீசர் இலங்கையில் கால்பதித்தார்கள். இயல்பிலேயே முஸ்லிம்களை தமது பரம எதிரியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்ற இவர்கள் இப்பிரதேசங்களில் முஸ்லிம்கள் வர்த்தக நடவடிக்கைகளில் சிறந்து விளங்குவது கண்டு பொறாமை கொண்டனர். எவ்வாறாயினும் வர்த்தகம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கை களைப் படிப்படியாகச் செய்தனர்.

இந்த வகையில்தான் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் வர்த்தகர்களுக்கும் அவர்களது வணிகக் கப்பல்களுக்கும் பல இடைஞ்சல்கள், கட்டுப்பாடு களை ஏற்படுத்தினர்.

தாங்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி குஞ்சாலி மரைக்கார், ஹாலித், மாலிக் ஆகியோர்களுக்கு விபரித்தார்.

எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த ஹாலித் ஆறுதல் வார்த்தைகள் கூறினார். எல்லாம் விதிப்படிதான் நடக்கும். நமக்கென்று இறைவனால் ஒதுக்கப்பட்டதை யாராலும் தட்டிப்பறிக்க முடியாது. நாடியது நடக்கட்டும் என்று கூறியவாறு நண்பர்களிடமிருந்து விடைபெற்றார்.

மாலிக்கின் கப்பல் பயணிக்கத் துவங்கியது. ஏற்கனவே அடிக்கடி சந்திக்கின்ற கடற்கொள்ளையர்களின் பிரச்சினை, காற்றின் வேகத்தால் திசைமாறிப் பல நாட்கள் கடலிலேயே அலைந்து திரிய வேண்டிய பிரச்சினைகளுடன் தற்போது பறங்கியர் களின் தொல்லைகளும் சேர்ந்து கொண்டன.

மேற்சொன்ன பிரச்சினைகளில் எல்லாம் இருந்து பாதுகாக்கப்பட்ட மாலிக்கின் கப்பல் நாடு போய் பத்திரமாகச் சேர்ந்து விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாட்களின் பின்னர் முஸ்லிம்களின் பல வணிகக் கப்பல்கள் பறங்கியர் களால் விரட்டியடிக்கப்பட்டதாகவும் கடல் பிரதேசம் யுத்த களமாகக் காணப்பட்டதாகவும் வணிகப் பொருட்கள் கொள்ளையிடப் பட்டதாகவும் சேதிகள் வந்தன.

மீண்டும் வர்த்தகத்தில் ஈடுபடுவதா? அல்லது தொழிலை மாற்றிக் கொள்வதா? என்பது பற்றி தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தான். மாலிக் தனது தந்தையிடம் இதுபற்றி கலந்தாலோசனை செய்தான்.

இடையிடையே மோகினியின் உருவமும் அவன் கண்முன் தோன்றுவதும், மறைவதுமாக இருந்ததை அவனாலேயே நம்ப முடியவில்லை. நான் பிரிந்து வரும்போது அவள் அழுததை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவளைச் சமாதானப்படுத்துவதற்காக நான் மீண்டும் வருவேன் என்று சொன்ன வார்த்தைகள் அவனை அலைக்கழித்தன.

எவ்வாறாவது மோகினியைப் பார்க்க வேண்டும். ஆகவே மீண்டும் இலங்கைக்குச் செல்வது என்று தீர்மானித்து தீவிரமாகப் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டான். தேவையான பொருட்கள் வாங்கப் பட்டன. யார் யார் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

தன்னோடு நண்பர்கள் ஹஸன், அஸீஸ், மூத்த சகோதரனின் மூத்த மகன் ஆகியோர்களுடன் தனது தந்தையினால் பரிந்துரைக்கப்பட்ட இருவர்களுடன் மாலுமி, பணியாட்கள் என முடிவாகியது.

இறுதியில் தனது தந்தையாரும் வரவேண்டும் என்று கூறியதால் தனது தாயாரை மரணித்த அவனது சகோதரனின் மனைவியுடன் விட்டுச்செல்வது என்று முடிவாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அதிகளவான துணி வகைகள், உப்பு, குதிரைகள் சகிதம் பயணிக்கத் துவங்கினர். இம்முறை அதிகளவான புரவிகளுக்கான கேள்வி இருந்தபடியால் அதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. மேற்படி குதிரைகள் புத்தளம் துறைமுகத்தில் இறக்கப்பட வேண்டியவை.

புத்தளத்தில் அலுவல்கள் யாவும் முடிவுற்ற பின் கிட்டங்கித் துறையை அடைந்தது. மாலிக்கின் கப்பல் எவ்வளவு விரைவாக பொருட்களை இறக்கி உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து முடித்தான் மாலிக்.

- அத்தியாயம் பதினைந்து

மோகினியின் குடிசையின் முன்னால் மாலிக், தந்தை, நண்பர்கள், சகோதரன் மகன் மற்றும் இருவரும் மோகினியின் அப்பாவும் உரையாடிக் கொண்டிருக்கையில் அவித்த சோளன் ஆவி பறக்கப் பறக்க அவர்கள் முன்வைக்கப்பட்டது. ஆசையுடன் அதை உருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் மாலிக்கின் கண்கள் மோகினியைத் தேடியது. தனது மகனின் எண்ண ஓட்டங்களைப் புரிந்துகொண்டவர் போல காலித் அவரது நண்பர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு குடிசையின் வடக்குப் புறத்தில் இருந்த காட்டினுள் புகுந்தார்.

காலித் என்ன திட்டத்துடன் வந்திருக்கிறார் என்பது இப்போதுதான் மெல்ல மெல்ல விளங்கியது. அவரது முதல் பயணத்தில் அவர் அறிந்துகொண்ட பல விடயங்கள் இங்கு நெசவுத் தொழில் செய்வதற்கான அத்தனை வாய்ப்புக்களும் அமையப் பெற்றுள்ளன என்பதனால் அத்தொழில் பற்றி நன்கு அறிந்த அந்த இருவரையும் காரணத்தோடுதான் அழைத்து வந்திருந்தார் காலித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே காட்டினுள் அதிகளவாக உயர வளர்ந்திருந்த இலவ மரம். அவற்றின் காய்கள் வெடித்து காற்றில் அதன் பஞ்சுகள் யாவும் பற்றைகள் செடி கொடிகளில் படிந்து வெண்மையாகக் காட்சி தருவது. அவற்றுக்கான சாயமூட்டுவதற்குத் தேவையான பட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒலிய மரம், கள்ளிச் செடிகள், நறுவிலி மரம் போன்றவற்றை நண்பர்களிடம் காண்பித்தார். காலித் இது தவிரவும் ஏற்கனவே கைப்பின்னல்கள் மூலம் துறைநீலாவணையில் ஐந்தாறு குடும்பங்கள் துணி வகைகளைச் செய்கிறார்கள் என்றும் இங்கு அவர்களைக் கொண்டு துணி வகைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தனது திட்டத்தை விளக்கினார் காலித்.

மேலும் அண்மிய பிரதேசங்களில் காணப்படுகின்ற சமுளை, ராணை, முதிரை மரங்கள் மட்டுமல்லாது நாணல் புற்கள், மூங்கில் பிரம்புகள் போன்றவற்றைக் கொண்டு நெசவு செய்வதற்கான உபகரணங்களைச் செய்துகொள்ள முடியும் என்று கூறினார்.

வந்தவர்கள் மனதில் காலித் அவர்களின் திட்டம் சாத்தியமானதுதான் எனப்பட்டது. மேலும் விரிவாக இதுபற்றி பேசலாம் என்று கூறி மீண்டும் குடிசைக்கு வந்து சேர்ந்தனர்.

பகல் போசனத்திற்கான ஏற்பாடுகள் யாவும் நடைபெற்றுக் கொண் டிருந்தன. மோகினிக்கு மாலிக்கைக் கண்டதில் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. ஒரு வகையான பதட்டம். படபடவென்று தாயுடன் சமையல் வேலைகளில் சேர்ந்து விரைவாக முடித்துவிட்டால் மாலிக்குடன் ஆறுதலாகப் பேசமுடியும் என்ற தவிப்பில் அவள்.

சாப்பாடும் முடிந்தது. தந்தையாருடன் மற்றவர்களையும் மோகினியின் அப்பா கந்தசாமியையும் பிரதேசங்களைப் பார்த்து வருமாறு கூறிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலிக் தான் சற்றுக் களைப்படைந்திருப்பதாகவும், பரணில் சற்று நேரம் ஓய்வெடுத்த பின் தங்களுடன் இணைந்துகொள்வேன் என்று கூறி ஒருவாறு தனிமையை ஏற்படுத்திக்கொண்டான்.

மற்றவர்களும் நிலைமையை ஓரளவு புரிந்துகொண்டு ஒரு சில மணி நேரங்கள் இயற்கை வனப்புக்களை இரசித்துவிட்டு வரலாம் என்று கிளம்பி விட்டனர்.

மாலிக் பரணில் ஏறி தூங்குவது போல் பாசாங்கு செய்தான். இளசுகளின் மனதைப் புரியாதவளா என்ன மோகினியின் தாய். அவளும் குடிசையே தஞ்சம் என ஒழிந்து கொண்டாள்.

பரணில் இதமான காற்றின் ஸ்பரிசம். இருவரும் தனித்திருப்பதில் ஒரு வகையான இன்பம். எதைப் பேசுவது என்று இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் மௌனமாக இருந்தனர்.

மோகினியின் கண்களில் நீர் கசிவது கண்டு பதறிப் போனான் மாலிக். "ஏன் மோகினி அழுகிறாய்?" என்று வாய்விட்டுக் கேட்டுவிட்டான். மேலும் அவள் அழுகை கூடியதே தவிர குறைந்தபாடில்லை.

"என்ன மோகினி சொல்லிவிட்டு அழேன்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான் மாலிக்.
கண்கள் சிவந்த அந்தக் காரிகை திக்கித் திணறிப் பேசலானாள். "மாலிக் நீங்கள் சென்ற நாளிலிருந்து என்னால் உறங்க முடியவில்லை. கண் மூடினால் நீங்களே வந்து என்னை முத்தமிடுவதாகவும், ஆறத்தழுவு வதுமாகவே தெரிகிறது. வெளியில் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் நான் தவித்த தவிப்பை நான் யாரிடம் சொல்ல" ஒருவாறு சொல்லி முடித்தாள் மோகினி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை தனது ஆசைகளையெல்லாம் மனதில் பூட்டி வைத்திருந்த அந்த இளம் காளை பேசத்துவங்கியது...

"அன்பே... உனக்கு மட்டுமா இந்த நிலை, எனக்கும்தான். எதைத் தொட்டாலும் உனது ஸ்பரிசமாகவே உணர்கிறேன். உன்னைவிட்டுப் பிரிந்திருந்த இவ்வளவு நாட்களும் நான் பட்ட வேதனைகளை நான் எவ்வாறு எடுத்துரைப்பேன். நான் ஒரு ஆண் என்ற படியால் என்னால் கண்ணீர் சிந்த முடியவில்லை அன்பே..." என்று தனது தவிப்பையும் ஒப்புவித்தான் மாலிக்.

"வாழ்ந்தால் உன்னோடுதான் வாழ்வேன் அன்பே என் வாழ்க்கை..." என்று அவன் உறுதியளித்த பின்னர்தான் அவளது மதிவதனம் புன்னகை காட்டியது.

நேரம் மறந்து சுற்றம் மறந்து இரண்டு இளசுகளும் நீண்ட நேரம் தத்தமது மனவோட்டங்களையும் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி எல்லாம் பேசிக்கொண்டிருந்தனர். மற்றவர்கள் குடிசையை நெருங்கும் வரை.

## அத்தியாயம் பதினாறு

பின்னிலவுக் காலம். ஆமணக்கு எண்ணெய் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. குடிசைக்கு வெளியில் விரிக்கப்பட்டிருந்த பாயில் எல்லோரும் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

"நாளை ஒருநாள் எனக்காக ஒதுக்கி விடுங்கள்" என்று காலித் வேண்டிக் கொண்டார். அவருடைய மனதில் ஏதோ ஒரு திட்டம் உருவாகியிருந்தது.

கந்தசாமியை நோக்கிய காலித் "இங்கு யாராவது தச்சர்கள் கிடைக்குமா?" என்று வினவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக்குதித்த கந்தசாமி பக்கத்துக் கிராமம் பெரியநீலாவணையில் ஒரு நல்ல தச்சன் இருக்கிறார். அவர்தான் கொட்டில்கள் அடிப்பது, கோயில் களுக்குத் தேவையான சிலைகள் செய்வது, கதவு நிலைகள் செய்வது போன்றவைகளைச் செய்கிறார். சில நாட்கள் அவருக்கு உதவியாளராக நானும் இருந்திருக்கிறேன் என்று கூறியதும் காலிதுக்கு ஏற்பட்ட சந்தோசத்திற்கு அளவேயில்லை.

"கந்தசாமி அவரை நாளை காலை எப்படியாவது நாங்கள் காண வேண்டும் முடியுமா?" என்று காலித் வினவினார்.

பல திசைகளில் கதைகள் சென்று கொண்டிருந்தது. நேரமும் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. எப்போது விடியும் என்ற ஆவல் காலிதுக்கு. எப்போது இவர்கள் தூங்குவார்கள் என்ற கவலை மாலிக், மோகினிக்கு. சற்று நேரத்தில் நான்கு கண்களைத் தவிர மற்றையவைகள் எல்லாம் தூக்கத்தில் துவண்டு விட்டன. வெண்ணிலவு வெளியில் தலை காட்டினான்.

பரணில் போய் தஞ்சமடைந்தனர் இளசுகள் இரண்டும்.
சில நாட்கள் பிரிந்திருந்த ஏக்கம், கொட்டித் தீர்த்தனர் இருவரும். நேரத்தை மறந்தனர். சுற்றத்தை மறந்தனர். விடியப்போகிறது என்பதைக்கூட அறியாமல் மடிமேல் தலைவைத்துப்படுத்திருந்தனர். இவ்வாறே இருந்துவிடக் கூடாதா? என்று ஆசைப்பட்டனர், அவாவுற்றனர்.

காலம் பிந்துமா இவர்களுக்காக. இல்லையே. சூரியன் மெல்ல தலை காட்டத்துவங்கியது. மெதுவாகத் தங்களைச் சுதாகரித்துக்கொண்டு பரணிலிருந்து கீழிறங்கினர் அவ்விருவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையிலேயே நீலாவணைக்குச் சென்ற கந்தசாமி தச்சன் ஒரு உதவியாளருடன் வந்து சேர்ந்தார். காலித் தனது இரு நண்பர்களுடனும் நிலத்தில் குச்சி ஒன்றினால் படம்வரைவதும் பின் அழிப்பதும் மீண்டும் வரைவதுமாக ஏதோ ஒரு நீண்ட விளக்கமளித்துக் கொண்டிருந்தார்.

ஓடாவியாரைக் கண்டதும் பெரும் மகிழ்ச்சி அவருக்கு. அவரையும் பக்கத்தில் அமரச் செய்து அவரிடமும் பலவேலைகளை ஒப்படைத்தார்.

சிறிது நேரத்தில் கந்தசாமி மற்றும் மாலிக்கின் நண்பர்கள் மூவரையும் அழைத்து துறைநீலாவணைக்குச் சென்று தான் அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லி ஆண்களை அழைத்து வருமாறு பணித்தார்.

மதியமளவில் எல்லோரும் ஒன்று சேர்ந்தனர். உத்தரவிடும் படைத் தளபதியானார் காலித்.

முதலில் மரங்கள் வெட்டப்பட்டு பெரிய கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டது. மூங்கில் பிரம்பு, நாணல் எனப் பலவகை மரங்களும், புற்களும் கொண்டுவரப்பட்டன.

மறுபுறம் பிரதேசங்களில் படிந்து காணப்பட்ட பஞ்சுகள் ஒன்று சேர்க்கப் பட்டன. இலவ மரங்களிலிருந்து முற்றிய காய்கள் அனைத்தும் பறிக்கப் பட்டன. இவ்வாறு அதிகளவு பஞ்சுகள் சேகரிக்கப்பட்டன.

மூங்கில் பிரம்பு, நாணல் போன்றவற்றினால் அச்சி விழுதுகள் போன்றனவும், நாடா, குழல் ஆகியவையும் தயாராகின. ஒரு பெரிய தொழிற்சாலையே அங்கு நடைபெறுவதுபோல் பிரதேசமே களைகட்டி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கம் பக்கத்துக் கிராமங்களில் இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. சந்தி மணலில் அடிக்கடி சந்தை கூடுவதனால் இவ்விடயம் இலகுவாக மக்கள் மத்தியில் பெரிய பரபரப்பாகிவிட்டது. புதினம் பார்க்கவென்றே பலர் வந்து போகலாயினர். ஒரு வாரம் கடந்துவிட்டது.

பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையே மோகினியின் குடிசைக்கருகில் உருவாகி விட்டது.

வேலைப்பழுவில் மோகினியையோ மாலிக்கையையோ கவனிப்பதற்கு நேரமில்லை. அந்த இளசுகள் தங்கள் ஆசைகள் தீரமட்டும் ஓடி ஆடி சுற்றித் திரிந்தனர். ஒரு முறை படகில் ஏற்றிக்கொண்டு கப்பல் துறையடி, பண்டகசாலை முதலிய வற்றை அவளுக்கு காண்பித்தான்.

நூல் நூற்பதும், அதற்கான நிறமூட்டலும் காலித் அவர்களுடைய நண்பர்கள் மேற்பார்வையில் நடைபெற்றது. துறைநீலாவணையிலிருந்த ஆண்கள், பெண்கள் என எல்லோரும் அழைத்துவரப்பட்டனர். அவர்களைத் தங்க வைப்பதற்காகப் பல கொட்டில்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டன.

ஒரு பெரிய கிராமமே உருவெடுத்தாற்போல் பிரதேசம் மிகவும் சுறுசுறுப் பாகக் காணப்பட்டது. ஏற்கனவே இங்கு குடியிருந்த சில குடும்பங்கள் துறைநீலாவணை குடிசைகளைத் தமக்காகப் பெற்றுக்கொண்டு இவர்களது குடிசைகளை அவர்களுக்கு வழங்கினர்.

இரு மாதங்கள் முடிவதற்குள் பல நிறத்திலான துணி வகைகள் நெய்தெடுக்கப்பட்டது. இப்போது வேலைவாய்ப்புத்தேடி பலபேர் வரலாயினர். நெசவுத்தொழில் மிகவும் நேர்த்தியாகவும், குழித்தறி, நிலத்தறிகளில் மேற்கொள்ளப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களுக்குப் பஞ்சமில்லை. சாப்பாடு வகைகளுக்கும் தட்டுப் பாடில்லை. மட்டு வாவியில் தேவையான மீன் வகைகளும், வனத்தின் பழ வகைகளும் வீட்டுத் தோட்டங்களிலிருந்து சோளம், இறுங்கு, குரக்கன், மரவள்ளி மற்றும் காய்கறிகளும், மான், முயல் போன்ற வையும் தாராளமாகவும் இலகுவாகவும் கிடைத்தன.

- அத்தியாயம் பதினேழு

தான் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கியது மட்டுமல்லாமல் பிரதேச மக்களின் ஆடைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கி விட்ட திருப்தி மாலிக்கின் தந்தை காலிதுக்கு. இடைக்கிடையே மகனும் மோகினியும் அங்குமிங்கும் சுற்றித் திரிவதை அவர் கவனிக்காமலுமில்லை.

தான் நாட்டை விட்டு வந்து இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டதை அவரால் நம்பவே முடிய வில்லை. அவ்வளவு வேலைப்பழு. ஆனாலும் அவர் சந்தோசத்தில் நிறைந்து போயிருந்தார்.

அவருக்கு இதுவரை முடிவுறாமல் இருந்த ஒரேயொரு பிரச்சினை இளைய மகன் மாலிக்குடைய திருமணப் பிரச்சினைதான். மாலிக்கும் மோகினியும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர் என்ற விடயமும் அவருக்குத் தெரியாத ஒன்றல்ல.

அவர்கள் இருவரையும் இணைத்து வைப்பதற்குத் தடையாகவுள்ள மதப் பிரச்சினையைப்பற்றி சிந்தித்தார். எந்த வகையிலும் எமது மார்க்கத்தை விட்டுக் கொடுக்க முடியாது என்பதில் அவர் திடமாகவிருந்தார். எதற்கும


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதொரு சந்தர்ப்பம் பார்த்து மோகினியின் பெற்றோர்களிடம் தனது நிலைப்பாட்டைத் தெளிபடுத்துவதன் மூலம் நல்ல முடிவு கிட்டலாம் என்றும் நம்பிக்கை கொண்டார். இதற்கிடையில் பிரயாண ஒழுங்குகள் பொருட்கொள்வனவு போன்றவற்றைக் கவனித்து வரும்படி மகனுடன் அவனது நண்பர்களையும் அனுப்பி வைத்தார்.

எல்லா விடயங்களையும் ஒழுங்குபடுத்திய பின் சற்று ஓய்வெடுத்துக் கொள்வதற்காக பரணில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். பகலுணவுக்கான ஏற்பாடுகளை மோகினியின் தாயார் கவனித்துக் கொண்டிருக்கையில் மோகினியைத் தண்ணீர் கொண்டு வரும்படி காலித் வேண்டிக் கொண்டார்.

அவசர அவசரமாக தண்ணீர் பாத்திரத்துடன் மோகினி பரணை நோக்கிச் சென்றாள். பாத்திரத்தை கையில் வாங்கிக்கொண்ட காலித் மோகினியைப் பக்கத்தில் அமருமாறு வேண்டிக்கொண்டார். மிகவும் பணிவுடனும் மரியாதையுடனும் அவள் அமர்ந்து கொண்டதும் காலித் கூறினார். "நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவதை நான் அறிவேன் மோகினி. ஆனால் இருவரும் இரு வேறுபட்ட மார்க்கத்தில் இருப்பதனால்தான் இதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பதுதான் பிரச்சினை யாகவுள்ளது" என்று மெதுவாக அவளிடம் எத்தி வைத்தார். அவளுடைய எண்ணம் எவ்வாறுள்ளது என்பதனை நாடிபிடித்துப் பார்ப்பதுவே அவரது நோக்கமாகவிருந்தது.

ஏதோ பேச வாயெடுத்த மோகினி சட்டென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நாணம் மேலீட்டால்.அப்பா என்ற ஒற்றை வார்த்தையுடன் மெதுவாகக் கீழே இறங்கி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு அவளது சம்மதத்தை மௌன மொழிகளினால் புரிந்துகொண்ட காலித் அன்றிரவே கந்தசாமியிடமும் அவன் மனைவியிடமும் விடயத்தைக் கூறியது மட்டுமல்லாமல் புனித இஸ்லாத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வதன் மூலம் மட்டுமே இதற்கான தீர்வு கிட்டும் என்று விபரம் கூறினார்.

அவர் இவ்வாறு இலகுவாக இருக்கும் என்று கனவிலும் நினையாத அளவிற்கு அவர்களின் பதில் அமைந்திருந்தமை காலித் அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. அப்பா, அம்மா, மகள் ஆகிய மூவருமே புனித இஸ்லாத்தில் இணைவதற்குப் பூரண சம்மதம் தெரிவித்தனர்.

அன்று பின்னிரவு நேரத்தில் மாலிக் நண்பர்களுடன் குடிசைக்கு வந்து சேர்ந்தான். இரவு வேளைகளில் வெளியிறங்குவதற்குச் சற்றுத் தயங்கிய நிலைமாறி பிரதேசத்தின் பல இடங்களில் குடில்களும், பெரிய கொட்டிலும் அங்கே ஏற்றப்பபட்டிருந்த விளக்குகளும் அந்தப் பிராந்தியத்தை மாற்றியிருந்தது.

பெற்றார்கள் பேசிக்கொண்ட விடயத்தை மாலிக்கிடம் சொல்வதற்காகத் துடித்துக் கொண்டிருந்தாள். மோகினி சாப்பாடு வைக்க ஆயத்தமான மோகினியின் தாயாரைத் தடுத்த மாலிக் தாங்கள் பண்டகசாலையிலேயே உணவை முடித்துக்கொண்டோம் என்று கூறினான்.

தனக்காகக் காத்திருக்கும் மோகினியின் முகம் அந்த இருட்டிலும் பிரகாசமாகத் தெரிந்தது. அவளது முக பாவத்திலிருந்து அவள் தனக்காக ஏதோ சேதி வைத்திருக் கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட அவன், நண்பர்களைப் படுக்கைக்காக அனுப்பிவிட்டு நாளை சந்திப்போம் என்று கூறி பறனை நோக்கிச் சென்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறணில். காதலர் இருவரும் அமர்ந்ததும் மோகினி மாலிக்கின் கையைப் பிடித்து முத்தமிட்டவாறே கூறினாள். நம்மைப்பற்றி நமது பெற்றோர்கள் இன்று பேசினார்கள் என்று. அவர்களின் முடிவு என்னவாகவிருந்திருக்கும் என்பதை அவளது உற்சாகமும், துள்ளலும் மாலிக்கிற்கு தெட்டத்தெளிவாகப் புரிந்தது. அவனது சந்தோசமும் எல்லை கடந்ததாயிற்று.

இளசுகளின் மனங்களில் எவ்வளவு சந்தோசம் தாண்டவமாடியதோ அதே சந்தோசத்துடன் காலைச் சூரியன் தனது செங்கதிர்களைப் பரப்பியவனாக பூமித் தாயை முத்தமிட்டான். இன்று பிற்பகல் வேளையில் பிரயாணம் செய்வது என்ற முடிவை ஏற்கனவே காலித் அறிவித் திருந்தார்.

மதியவேளை நெருங்கியதும் எல்லோரையும் அழைத்த மாலிக்கின் தந்தை காலித் பிரயாணத்தை யார் யார் மேற்கொள்வது என்று அவர் அன்றிரவு போட்டு வைத்திருந்த திட்டத்தை வெளியிட்டார்.

தனது இரு நண்பர்களிடமும் நெசவுத் தொழிலில் மேலும் பல விடயங்களைத் தொழிலாளர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டி யிருப்பதால் மேலும் சில மாதங்கள் இங்கே இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். தன்னோடு தனது பேரன் மற்றும் மாலிக்கின் நண்பர்களில் ஒருவரான அஸீஸ் ஆகிய இருவர் மட்டுமே வருகிறார்கள் என்று கூறியதும் மாலிக்கிற்கேற்பட்ட சந்தோசத்தை எப்படிக் கூறுவது. அதே நிலையில்தான் மோகினியும் காணப்பட்டாள். எல்லோரிடமும் விடைபெற்ற காலித் தனது மகனை அழைத்து காதில் ஏதோ ஒரு விடயத்தைக் கூறிவிட்டதும் அவனது அந்த வெண்முகம் நாணத்தால் சிவந்தே விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டங்கித் துறையிலிருந்து புறப்பட்ட கப்பல் புத்தளம் துறைமுகத்தை அடைந்து அங்குள்ள நிலுவைகளைப் பெற்றுக்கொண்ட பின் தனது தாய்நாடு நோக்கி பயணிக்க ஆரம்பித்த போதுதான் மன்னார், கற்பிட்டி, புத்தளம் கடல் பிரதேசங்களில் போர்த்துக்கேயரின் அட்டகாசங்களை எதிர்த்து குஞ்சாலி மரைக்காரின் நாற்பது போர்க்கப்பல்கள் போராடிக் கொண்டிருந்தன.

இச்சந்தர்ப்பத்தில் எமன் தேசத்திற்குச் செல்வது உசிதமானதல்ல என்று நண்பர் களால் காலிதுக்கு எடுத்துரைக்கப்பட்டதனால் அவர் சில நாட்கள் புத்தளத் திலேயே தங்கி மீண்டும் தமது கப்பலை கிட்டங்கித் துறைக்குச் செலுத்துமாறு மாலுமியைப் பணித்தார். அதன்படி யாழ்ப்பாணம் கொட்டியாரம் மட்டக்களப்பு வாவி ஊடாக கிட்டங்கித் துறையை கப்பல் வந்தடைந்தது.

இதே நிலையில் போர்த்துக்கேயரிடம் குஞ்சாலி மரைக்காரின் படைகள் தோல்வி யுற்று பின்வாங்கியதாகவும் பறங்கியர்கள் புத்தளத்தின் தெற்கேயுள்ள கொழும்புத் துறைமுகத்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டதாகவும் அவர்களுடன் சிங்கள மன்னன் ஒருவன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள தாகவும் முஸ்லிம்களின் ஆதிக்கத்திலிருந்த முத்து, பாக்கு, யானை வியாபாரங்களைத் தன்வயப் படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் செய்திகள் எட்டின.

இது தவிர கொழும்பு காலி பிரதேசங்களில் பல்லாண்டு காலமாக வாழ்ந்த முஸ்லிம்களை விரட்டியடித்ததாகவும் அவர்கள் கண்டி மன்னன் செனரத்திடம் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் கசப்பான செய்திகள் வந்தன. அத்தோடு கொழும்புத் துறையூடாகவே பொருட்கள் யாவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் மாற்று வழிகளைப் பயன்படுத் துவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு களைப் பறங்கியர் விடுத்துள்ளதாகவும் மீறினால் கடுமையான தண்டனைக்குள்ளாவர் என்றும் அறிய முடிந்தது.

இவ்வாறான செய்திகளின் உண்மைத் தன்மையை அடுத்த சில நாட்களில் காலித், மாலிக் ஆகியோர்கள் அறிந்துகொண்டனர். வழமையாகத் தமக்குப் பொருட்கள் வழங்கும் சில நண்பர்களைப் பண்டகசாலையில் கண்டு அவைகளை அறிந்துகொண்டதுடன் எதிர்காலத்தில் இங்கு பொருட்கள் கொண்டுவருவதிலுள்ள சிரமங்கள் தடைகளையும் எடுத்தியம்பினர்.

நண்பர்களின் செய்திகளைக் கேட்டறிந்து கொண்ட காலித் இனிமேல் கிட்டங்கித் துறையின் வியாபார முக்கியத்துவம் குறைவடையவோ அல்லது முற்றாக இல்லாமலோ ஆகப்போகிறது என்பதனைப் புரிந்துகொண்டார்.

மாலிக்கும் தந்தையாரும் தமது கப்பலில் நிறைந்திருந்த ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை எப்படியாவது எமனுக்கு கொண்டு சேர்க்க வேண்டியும் இருந்தது.

அடுத்த சில நாட்களில் செனரத் மன்னன் போர்த்துக்கேயரால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களை கண்டியின் கிழக்கேயுள்ள கரையோரப் பிரதேசத்தில் குடியேற்ற ஏற்பாடுகள் செய்வதாகவும் பெரும்பாலும் அவை மருதமுனையின் தெற்கில் அமைந்துள்ள பிரதேசங்களாக அமையலாம் என்ற கதைகளும் அடிபட்டன. தினம் தினம் புதுப்புதுக் கதைகளும் சேதிகளும் வந்துகொண்டிருப்பதனால் காலித் அல்லது மகன் பண்டசாலைப் பக்கம் சென்று செய்திகளை அறிந்து வந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் விழுகின்ற கிடைக்கின்ற செய்திகள் யாவும் துக்ககரமான செய்திகளாகவும் முஸ்லிம்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி யுள்ளனர் என்று தெட்டத்தெளிவாகவே கூறின. தாம் கேள்வியுற்ற விடயங்களை உண்மைப்படுத்தும் வகையில் பல குடும்பங்கள் தமது பிரதேசத்திற்கு தமது பெட்டி படுக்கைகளுடன் வந்தனர். வந்தவர்களை ஆறுதல் வார்த்தைகள் கூறி உபசரித்த காலித், மாலிக் மோகினி குடும்பத்தினர் நடந்த விடயங்களைக் கேட்டறிய ஆவலாயிருந்தனர்.

பறங்கியர்களால் தமக்கேற்பட்ட கொடுமைகள் விரட்டியடிக்கப்பட்ட விதம் அதனால் செனரத் மன்னனிடம் தஞ்சம் கோரியமை, அவர் தங்களை உபசரித்து சில நாட்களின் பின்னர் இப்பகுதிகளில் குடியமர்வதற்கான ஏற்பாடுகள் செய்தமை போன்ற சகல விடயங்களையும் விபரித்தனர்.

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இது தங்களைப்போல வந்துள்ள தாகவும் அவர்கள் அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, இறக்காமம், சம்மாந்துறை மற்றும் காத்தான்குடி போன்ற பகுதிகளுக்கு அனுப்பப் பட்டிருந்ததாகவும் மன்னனின் பணியாட்கள் பலர் உதவிகள் செய்வதற்காக வருகை தருவார்கள் என்றும் கூறினர்.

எல்லா விடயங்களையும் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த காலித் அவர்களின் மனதில் ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. யாரிடமும் எதுவும் கூறாமல் வந்தவர்களை ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு பணித்து விட்டு மோகினியின் அப்பா கந்தசாமியை அழைத்துக்கொண்டு பறணில் ஏறினார்.

தனது பக்கத்தில் கந்தசாமியை அமரச் சொன்ன காலித் தாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன. உங்களது உதவி தேவை என்று விண்ணப்பித்தவாறே விளக்கத் துவங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்ததும் அகதிகளாக வந்திருக்கின்ற பக்கத்து குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு நாம் ஒல்லிக்கேணி செல்ல வேண்டும். அங்கு சென்றதும் நீங்கள் நிலாவணை சென்று நமது ஓடாவி அவரது உதவியாளர்களை அழைத்து வரவேண்டும். அங்கு நாம் இவர்களுக்கான குடிசைகளை அமைத்து குடிபதிகளாக அமரச் செய்வதன் மூலம் அவர்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த முடியும். நமது நெசவுத் தொழிலுக்கும் இவர்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமாக இருக்கும் என விபரித்தார்.

- அத்தியாயம் பதினெட்டு

திட்டமிட்டபடி விடிந்ததும் அகதிகளையும் கந்தசாமி மற்றும் மாலிக்கின் நண்பர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு காலித் ஒல்லிக்கேணி நோக்கிப் புறப்பட்டார். அவ்விடத்திற்குச் சென்றதும் அகதிகளின் முகத்தில் சந்தோசம் களைகட்டியது. பட்ட துன்பங்களுக்கெல்லாம் ஒரு முடிவு வரப்போகிறது என்று படைத்தவனுக்கு நன்றி கூறியதுடன் காலித் அவர்களை தமது வழிகாட்டியாகவும் தலைவராகவும் மதித்தனர்.

கந்தசாமி பெரியநீலாவணைக்குச் சென்று ஓடாவி மற்றும் உதவியாளர் களுடன் வந்து சேர்ந்தார். ஒரு புதிய கிராமம் அங்கு உருவாகிக் கொண்டிருந்தது.

தனது தந்தையார் பிரயாணத்தைத் தொடர முடியாமல் திரும்பவும் இங்கு வந்தது ஒரு வகையில் மாலிக்கிற்கு சந்தோசத்தைக் கொடுத்தாலும் தனது தாயார் கணவனையும் தன்னையும் காண மிகவும் ஆசையாகவிருப்பார் என்பதை நினைத்து கவலையடைந்ததுடன் மாதங்கள் இரண்டு கடந்து விட்டதை எண்ணி ஏதாவது சங்கடங்களில் மாட்டிக்கொண்டார்களோ என்று வேதனைப்பட்டுக் கொண்டிருப்பர் என்பதை எண்ணி மனம் வருந்தினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெசவுத் தொழிலாளர்கள் யாவரும் அவனுடன் அன்பாகவும் மிக்க மரியாதையுடனும் பழகினர். மோகினியை மாலிக்குடைய மனைவி யாகவே பார்த்தனர். மோகினியும் தாயாரும் தொழிலாளர் தேவையறிந்து அவர்களுக்கு, நீர், இளநீர், பழ வகைகள் எனப் பரிமாறினர்.

தொழிலாளர்கள் அனைவரும் அவர்களுக்காக அமைக்கப்பட்ட குடிசைகளில் சமைக்கவும் அவற்றை தொழில் நிலையத்திற்கு கொண்டு வந்து சாப்பிடுவதும் நாளாந்த நடவடிக்கைகளாயின் சில வேளைகளில் மாலிக்கும் மோகினியும் யாராவது ஒருவருடைய சாப்பாட்டில் இருந்து சிறிதளவு எடுத்துச் சாப்பிடுவார்கள். இது அந்தத் தொழிலாளர்களை மிகவும் கவர்ந்திருந்தது. இன்று நமது சாப்பாட்டில் இவர்கள் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளமாட்டார்களா என்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள்.

இதற்கிடையில் ஒந்தாச்சிமடத்தில் வாழ்ந்து வந்த ஏழெட்டு முஸ்லிம் குடும்பங்களும் இங்கு வந்து சேர்ந்தனர். தங்களுக்கெனக் கொட்டில்களும், குடிசைகளும் அமைத்துக் கொண்டனர்.

பல கிராமங்களிலிருந்து வேலைதேடி இங்கு பலர் வந்தனர். வேலை களுக்கும் குறை விருக்கவில்லை. மாலிக்கும், மோகினியும் ஓடியோடி வேலைகளைப் பார்த்தனர். மேலதிகமாகவும் பல கொட்டில்கள் அமைக் கப்பட்டு உற்பத்திப் பொருட்கள் தனியாகவும் மற்றப் பொருட்கள் வேறாகவும் வைக்கப்பட்டன. குறுகிய காலத்தினுள் ஒரு தொழிற் பேட்டையே உருவானது.

இலவ மரம் பரவலாக எங்கும் நடப்பட்டு அவைகளால் பராமரிப்பதற் கென்று சிலர் நியமிக்கப்பட்டனர். இலவங்காய்கள் பறிப்பது அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலர வைப்பது பின்னர் அவற்றின் விதைகளை வேறாகவும் பஞ்சை வேறாகவும் பிரித்தெடுத்து அவற்றை நூலாக நூற்றெடுப்பது, சாயமிடுவது, சாயமிடுதற்குத் தேவையான மரப்பட்டைகள், காய்கள், செடி வகைகளை கொண்டுவருவது பின்னர் நூலினைப் பாவாக உருவாக்கி தறிகளில் பூட்டி நெய்வது குறுக்கு நூல் அடிப்பதற்கான குழல், நாடா போன்றவற்றைச் செய்வது இவ்வாறு ஒரு கைத்தறிக் கிராமம் உருவானது மட்டுமல்ல வாரா வாரம் அங்கு சந்திமணலில் கூடும் சந்தையில் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமையானது அயல் பிரதேச மக்களின் வருகையைப் பன்மடங்காக்கின.

ஒரு கட்டத்தில் உற்பத்தியாகும் துணிகளின் அளவு விற்பதற்கும் போதுமானதாக இருக்கவில்லை. எல்லோரும் தத்தமது குடிசைகளுக்கு அருகாமையில் சிறுசிறு தோட்டங்கள் செய்து வந்ததனாலும், சோளன், குரக்கன், இறுங்கு போன்றனவும் மரவள்ளியும் தாராளமாகக் கிடைத்த தனாலும் வாவியில் வேண்டிய போது மீன்பிடிப்பதற்கு முடியுமாகவிருந்த தனாலும் முயல், மான், உடும்பு போன்றனவும் வயல்கோழி, காடை போன்ற பறவைகளும் நிறையவே கிடைத்ததனால் இந்த மக்களுக்கு சாப்பாட்டுப் பிரச்சினை இருக்கவில்லை.

அகதிகளாக வந்த முஸ்லிம்களும் ஒல்லிக்கேணியில் குடியமர்ந்து கொண்டனர். அவர்களுக்கான வருமானமும் நெசவுத் தொழில் மூலம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது.

சந்தி மணலில் இருந்து ஒல்லிக்கேணி வரை நூற்றுக்கும் அதிகமான குடியிருப்புக்கள் இப்போது உருவாகிவிட்டது. மருதமுனை என்றொரு அழகிய நெசவுக் கிராமம் எல்லோரது கவனத்தையும் ஈர்க்கத் துவங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கம் நெசவுத் தொழிற்சாலை, வாராவாரம் கூடும் சந்தை ஒரு பக்கம் தொழில்தேடி வருபவர்களும் பொருட்கள் கொள்வனவுக்காக வருபவர்களின் அதிக நடமாட்டம் காணப்பட்டது. ஓடாவிமார்கள் தங்களுக்குரிய வேலைகளைச் செய்வதற்காக ஒரு பெரிய இடத்தை உருவாக்கியிருந்தனர். அக்கம்மாலை இரவு பகலாக வேலைகளில் ஈடுபட்டு இருபத்துநாலு மணிநேரமும் விழித்திருக்கும் ஒரு கிராமமாக உருவெடுத்தது.

- அத்தியாயம் பத்தொன்பது

காலித் மனைவியைப் பற்றிய சிந்தனையோடு பறணில் சாய்ந்திருந்தார். மகனின் மறைவால் சோகமயமாகி காணப்பட்ட அவர் சென்ற முறை இப்பிரதேசத்திற்கு வந்ததனால் சற்று தேறியிருந்தார். இரண்டு மாதங்களாகியும் தனது கணவன் வரவில்லையே என்ற கவலை வாட்டி எடுத்துவிடும். ஆகவே விரைவாக நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று எண்ணியவராகத் தனது மகனை அழைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி வேண்டிக் கொண்டார்.

மேலும் கந்தசாமியை அழைத்து தான் ஏலவே கதைத்த விடயங்கள் தொடர்பில் அவரது கருத்தைக் கேட்டார். கந்தசாமி வெளிப்படையாகவே கூறினார். நாங்கள் உங்களோடு ஒன்றாய் கலந்துவிட்டோம். எங்களுக்கு இந்த விடயத்தில் ஆட்சேபனைகள் ஏதுமில்லை எனக்கூறினார்.

காலித் துரிதமாக அதற்கான எல்லா விடயங்களையும் மார்க்கப்படி செய்தார். இப்போது கந்தசாமி கலந்தர் என்றும் மோகினி ஆயிஷா என்றும் மோகினியின் தாய் பரீதாகவுமாக மாறிவிட்டனர். இப்போது மகனின் திருமணத்திற்கு தடையாக இருந்த ஒரு விடயமும் சரிசெய்யப்பட்டு விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் வந்ததும் அடுத்த நாளே திருமண ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறிவிட்டு வலிமா விருந்துக்காக உணவு தயாரித்து எல்லோரையும் அழைக்குமாறும் பணித்தார்.

ஆயிஷாவுக்கும் மாலிக்குக்கும் அளவு கடந்த சந்தோசம். விரைவாக குடியிருப்பாளர்கள் எல்லோரையும் திருமணத்திற்கும் வலிமா விருந் துக்கும் அழைத்தான். உரிய முறைப்படி மஹர் வழங்கி திருமணம் நிறைவேறியது.

விருந்துக்காக குடியிருப்பாளர்கள் அனைவரும் வந்திருந்ததுடன் அன்றைய சந்தைக்கு வந்தவர்களும் பண்டகசாலை நண்பர்கள் என ஒரு பெரிய திருவிழா வாகவே முடிவுற்றது.

தனது தாயார் இல்லையே என்ற கவலை தவிர மற்றபடி எல்லாம் சிறப்பாக நடந்து முடிந்த திருப்தி மாலிக்குக்கு.

அதே நேரம் தாய்நாடு சென்றால் மகனின் திருமணம் பிந்திவிடுவது மட்டுமல்லாமல் தனக்கு ஏதாவது நடந்தால் இரு உள்ளங்களின் பாவத்தை அள்ளிச் சுமக்க நேரிட்டு விடுமே என்ற பயம் அவருக்கு.

மனைவியை எவ்வாறாவது சொல்லி சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கையில் தான் மகனின் திருமணத்தை நடாத்தி முடித்தார் காலித்.

இந்தத் திருமணத்தின் மூலம் மற்றவர்கள் அடைந்த மகிழ்ச்சி ஆனந்தம் கண்டு காலித் நெஞ்சுருகிப் போனார். தன்மகன் மீதும் மருமகள் மீதும் இந்த மக்கள் இருக்கும் அன்பு பாசம் அவரை இன்னும் சில காலம் மகனுடன் வாழ்ந்து விடலாம் என்று எண்ணத் தோன்றியது. இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியையும் பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் முடியுமானால் விரைவில் மனைவியுடன் இங்கு வந்து நிரந்தர மாகவே தங்கிவிடலாம் என்று தன்னைத் தேற்றிக்கொண்டார்.

மறுநாள் காலையிலேயே பயணம் துவங்கியது. மகன் மருமகள் வழியனுப்பி வைக்க காலித் தனது பேரனுடனும் மாலிக்கின் நண்பன் ஹஸனுடனும் தனது பயணத்தை ஆரம்பித்தார்.

தன்னை அறியாமலே எல்லோருக்கும் வாழ்த்துக்கள் கூறியதுடன் தன் மகனை ஆறத் தழுவி மருமகளின் பெற்றோர் மற்றும் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து விடைபெற்றார்.

மருமகளிடம் எனது மகனை நன்றாகப் பார்த்துக்கொள் என்று கண்ணீருடன் கூறினார். பிரிய முடியாமல் பிரிவது என்பது இதுவாகத் தான் இருக்கும் என்று தொழிலாளர்கள் சிலாகித்தனர்.

"மாமா நீங்கள் மாமியை அழைத்துக்கொண்டு விரைவாக வரவேண்டும்" என்று மாமாவிடம் பணிவோடு வேண்டிக்கொண்டாள் ஆயிஷா.

● அத்தியாயம் இருபது

அதிகளவு பொருட்களுடன் தனது பிரயாணத்தை ஆரம்பித்த கப்பலை திருகோணமலை, யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் கற்பிட்டி துறை முகங்களுக்குச் சென்று தனது நண்பர்களிடம் பேரனை அறிமுகம் செய்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் காலித். இதற்கொரு காரணம் இருந்தது. தனது மகன் மாலிக் இனிமேல் கடல் வாணிபத்தில் ஈடுபடுவது சந்தேகம் என்பதுடன் அவனது வாழ்க்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை வேறு திசையில் செய்வதையும் அவர் அறிந்திருந்தனாலேயே பல நாட்கள் செலவிட்டு சிரமங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் துணி உற்பத்திக் கான ஒரு ஏற்பாட்டைச் செய்து முடித்தார். இயல்பிலே திறமைசாலியான மகன் மாலிக் இனிமேல் தடங்கல்கள் ஏதுமின்றி நன்கு திட்டமிட்டு அமைத்துக்கொள்வான் என்ற நம்பிக்கையும் இருந்தது.

அது மட்டுமல்லாமல் தனக்குச் சொந்தமான அக்கப்பலை தனது சகோதரனின் மக்களிடம் ஒப்படைத்து விடுமாறும் தந்தையிடம் கோரி யிருந்தான். மொத்தத்தில் மாலிக் கடல் வாணிபத்தைக் கைவிடுவதற் கான காரணமாக பறங்கியரின் அதிகளவான தலையீடும் அமைந்தது.

கடற் பிரதேசங்களில் அடிக்கடி சண்டைகள் நிகழ்வதும் கடற்கொள்ளை யர்களின் அட்டகாசங்கள் அதிகரித்திருப்பதும் மற்றொரு காரணமாக இருந்தது. ஆகவேதான் மகனின் விருப்பப்படி பேரர்களின் கையில் கப்பலையும் பொருட்களையும் ஒப்படைப்பதற்காகவும் தொடர்ந்து அவர்கள் வியாபாரம் செய்வதனால் நண்பர்களின் உதவியும் அறிமுகங்களும் அவசியம் எனக் கருதியே மேற்படி அவரது திட்டம் அமைந்திருந்தது.

அறிமுகங்கள் எல்லாம் திட்டமிட்டபடி முடித்துவிட்டு எமன் நோக்கிப் பயணம் ஆரம்பமாகியது. எதிர்பாராத விதமாக காற்றின் வேகம் பிரயாணத்திற்கு தடையாக இருந்தது மட்டுமன்றி கப்பலின் திசையையும் மாற்றுவதற்கான நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்தியது. இதன் காரணமாக பிரயாணத்தில் மேலும் சில நாட்கள் தாமதமாக வேண்டியதாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையான பயணம் காலித் அவர்களையும் அதன் மீது வெறுப்பையும் மகன் மாலிக்கின் தீர்மானம் சரியென்பதையும் அவருக்கு உணர்த்தியது.

இரண்டு மாதங்கள் தாண்டி மூன்றாவது மாதத்திலும் அதிக நாட்கள் கடந்த நிலையில் தான் சகல விடயங்களையும் முடித்து காலித் வீடு வந்து சேர்ந்தார்.

அங்கே அவருக்கு தனது மனைவி அதிகமாக நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கண்டு மிகுந்த மனக்கவலையை ஏற்படுத்தியது. இதுவரை எழுபது வயதையும் தாண்டிய அவர் ஓர் இளைஞன் போலவே ஈடுபட்டு வந்தார். மனைவியின் நிலை கண்டு காலித் முதன் முதலாகத் தனது வயதினையும் அதனால் ஏற்பட்டுள்ள தளர்ச்சியையும் உணரத் தலைப்பட்டார்.

ஆனாலும் ஒரு திருப்தி அவருக்கு. எல்லா மக்களும் நல்ல நிலையில் இருப்பதும் இறந்துபோன மகனின் குடும்பத்தாருக்கும் ஒரு ஏற்பாட்டைச் செய்துவிட்டதனால் அந்தத் திருப்தி ஏற்பட்டது.

நீண்ட நாட்களாகத் தனது கணவரை எதிர்பார்த்திருந்த காலிதின் மனைவிக்கு கணவரைக் கண்டதும் கண்ணீர்விட்டு அழத்துவங்கி விட்டார்.

என்னைவிட்டு இனிமேல் பிரிந்து செல்லக்கூடாது என்று கனிவுடன் வேண்டிக் கொண்டார். உண்மையில் இத்தம்பதியினர் இதுவரை எதுவித பிரச்சினைகளும் இன்றி வாழ்ந்து வருகின்றவர்கள். இருவரும் வசதி படைத்த பரம்பரை பரம்பரையாக வாணிபத்தில் கொடிகட்டிப் பறந்த குடும்பத்தின் வாரிசுகள் சுகபோகங்கள், வாழ்க்கை வசதிகள் எல்லாமே சிறப்பாகவிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வாரங்கள் பிரிந்திருப்பதைத் தவிர வேறெந்தக் குறைபாடுகளும் இல்லை. சிலபோது மனைவியைத் தன்னோடு அழைத்துச் சென்றுள்ள காலித் வழிப்பயம் காரணமாகத் தொடர்ந்தும் அவரை அழைத்துச் செல்வதைத் தவிர்த்து வந்தார்.

இம்முறை நாட்கள் வழமைக்கு மாற்றமாக நீடித்து விட்டதால் மனைவி பெருத்த மனக்கஷ்டத்திற்குள்ளாகி விட்டார் என்பதை நினைக்க அவருக்கு மனவேதனை தாங்க முடியவில்லை. மகனின் மனைவி பேரப்பிள்ளைகள் என்னதான் ஆறுதல் சொன்னாலும் தன் துணைபோல் வருமா என்ன?

இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து காலித் மகனின் திருமணம் நிறைவேறிய சங்கதியை மனைவியிடம் சொல்வதா வேணடாமா எனப் பலமுறை சிந்திக்க லானார். சேதி சொன்னால் அவரின் உடல் நிலை மேலும் மோசமடைந்து விடலாம் எனப் பயந்தார். இவற்றை யெல்லாம் சீர்தூக்கிப்பார்த்த காலித் மகனின் திருமணச் செய்தியை இப்போது சொல்வதில்லையென்றும் விரைவில் அவரையும் அழைத்துக் கொண்டு, மகனுடனேயே நிரந்தரமாகத் தங்கிவிடுவது என்ற தீர்மானத் துடன் மனைவியிடம் ஆறுதல் வார்த்தைகள் கூறி அமர்ந்து கொண்டார்.

மருமகள் வந்து சாப்பாட்டிற்கு அழைக்கும் வரை தனது மனைவியுடன் இருந்து ஆறுதல் வார்த்தைகளும், பிரயாண அனுபவங்களையும் சொல்லிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திமணல், ஆத்திமேடு, மதுரமுனை என்றெல்லாம் பலராலும் பலவாறாக அழைக்கப்பட்ட இப்பிரதேசம் இன்று "மருதமுனை" என்ற அழகிய பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. தற்போது மக்கள் மண்டபம் அமைந்திருக்கும் இடமே அன்றைய சந்திமணல் என்று அழைக்கப்பட்டது. இங்குதான் வாராந்த சந்தை கூடியது. பல பிரதேசங்களில் இருந்தும் இங்கு மக்கள் வந்து பொருட்கள் வாங்கிச் சென்றனர்.

ஒல்லிக்கேணி வரை பரந்து இருநூறுக்கும் அதிகமான குடியிருப்புக்கள் உருவாகியிருந்தன.

நெசவு செய்யப்படும் உற்பத்திப் பொருட்களை பொட்டணி வியாபாரிகள் வெளியூர் களுக்குச் சென்றும் விற்பனை செய்தனர். இவ்வியாபாரிகள் நடந்தும் புஸ்சைக்கிள் மாட்டு வண்டிகள் மூலமும் பயணித்தனர். மக்கள் அதிகரிப்பினால் கடைகள், ஹோட்டல்கள் சிலவும் உருவாயின.

உற்பத்திப் பொருட்களை அதிகரிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மாலிக் ஓடி ஓடிக் கவனித்தான். ஓய்வு நேரங்களைத் தன் மனைவி ஆயிஷாவுடன் சந்தோசமாகக் கழித்தான். சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதுகளில் வேறு பிரதேசங் களுக்கும் அழைத்துச் சென்றான்.

இப்போது கிட்டங்கித் துறைக்கு வணிகக் கப்பல்கள் வருவதும் பண்டகசாலையில் பொருட்கள் சேர்வதும் வெகுவாகக் குறைந்திருந்தது. இருந்தாற்போல் பாய்மரக் கப்பல்களில் சிலர் வந்து கிடைக்கின்ற சிறு தொகையான பொருட்களைச் ஏற்றிச் செல்வர். முன்னர் தாராளமாக இங்கு வந்த துணி வகைகள் தற்போது வருவதில் லையாதலால் மருதமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெசவு உற்பத்திப் பொருட்களுக்கு அதிக கிராக்கி ஏறின. பலர் வந்து முன்பணம் செலுத்தி துணி கேட்கலாயினர். இதனால் மேலும் தொழிலை விரிவுபடுத்த வேண்டிய கட்டாயத்தில் மாலிக் இருந்தான். மேலும் புதிய புதிய குடியிருப்புக்கள் உருவாகத் துவங்கியதனாலும் அவர்களுக்கான வேலை வாய்ப்பை வழங்குவது இவனது பொறுப் பாகவே பார்க்கப்பட்டது. அவனும் இன்முகத்துடன் இவ்விடயங்களைச் சளைக்காமலும் மற்றவர்களின் மனம் நோகாமலும் கருமமாற்றி வந்தான்.

நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங் களாகின. இரண்டு வருடங்கள் எவ்வாறு மறைந்தன என்று தெரிய வில்லை. இதற்கிடையில் ஆயிஷா ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றிருந்தாள்.

குழந்தையை ஆள்மாறி ஆள் தூக்குவதும் கொஞ்சுவதும் குழந்தையை தொழிலாளர்கள் போட்டிபோட்டு தூக்குவதும் வாடிக்கையாகின.

தந்தை காலிதின் நண்பர்கள் இருவரும் மாலிக்கிற்குப் பக்கத்தில் அழகாக அமைக்கப்பட்ட வீட்டிலேயே குடியிருந்தனர். அவர்களுட னேயே மாலிக்கின் நண்பன் அஸீசும் தங்கியிருந்தான்.

அதற்கு அருகாமையில் அதேபோலொரு வீடும் அமைக்கப்பட்டிருந்தது. அதில் மாலிக் மனைவியுடன் குடியிருந்தான். கலந்தர் பரீதா தம்பதி யினரான ஆயிஷாவின் பெற்றோர்கள் தங்களது பழைய குடிசையில் தங்கினாலும் உறங்கும் வேளை தவிர இவர்களுடனேயே இருந்தனர். தொழிலாளர்களை உபசரிப்பதும் இவர்கள் பொறுப்பிலேயே இருந்தது. பேரன் பிறந்தது மகிழ்ச்சி அவர்களுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இருக்கும் போதுதான் நீண்ட நாட்களின் பின்னர் ஒரு பாய்மரக்கலம் ஊருக்கு எதிரேயுள்ள மட்டு வாவிப் பிரதேசத்தில் நங்கூரமிட்டு அதிலிருந்து சிறு படகு மூலம் இருவர் வருவதை அவதானித்த சிலர் மாலிக்கிடம் விபரம் கூறினர்.

வழமையாக மாலிக்கின் படகு ஒன்று மதுர மரத்தில் கட்டி வைத்திருப்பது வழமை. அது அவனது பிரயாணத்துக்காக உபயோகப்படுத்தப்பட்டது.

படகடிக்கு வந்த மாலிக் தனது பெற்றோர்கள் வருவது கண்டு தன்னை அறியாமலேயே அம்மா அப்பா என்று கூவத் துவங்கிவிட்டான். அவனுடைய சப்தம் ஆயிஷாவின் செவிகளிலும் தெளிவாகக் கேட்டதனால் குழந்தை நாமிசையும் தூக்கிக்கொண்டு மாலிக்கிடம் வந்து சேர்ந்தாள்.

காலித் தமது பிரயாணத்தின் போது மாலிக்கின் திருமணம் தொழில் முயற்சி புதிய குடியேற்றங்கள் மற்றும் மூவரும் மாலிக்குடனேயே நிரந்தரமாகத் தங்கப்போகின்ற விடயம் எல்லாவற்றையும் விபரமாக தனது மனைவியிடம் ஒப்பிவித்திருந்தார். எல்லா விடயங்களும் அவருக்கு சந்தோசத்தைக் கொடுத்தாலும் மகனின் திருமணத்தின் போது தானில்லையே என்ற ஏக்கம் இல்லாமல் இல்லை.

எப்படியாகிலும் தனது மகன் மாலிக்கை நேரில் கண்டால் எல்லாம் மறந்துவிடுவாள் தன் மனைவி என்பது அவருக்குப் புரியாத விடயமல்ல.

பாய்மரக் கலத்திலிருந்து படகு கரையை நெருங்கியது. இதற்கிடையில் தொழிலாளர்கள் எல்லாம் சேதியறிந்து விருந்தினர்களைக் காண வந்துவிட்டனர். பெரியதோர் சனக் கூட்டமாகிவிட்டது அவ்விடத்தில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலித் மனைவியுடன் இறங்கியதுதான் தாமதம் தாயைக் கட்டியணைத்து ஆலிங்கனம் செய்து அவரது ஆசியையும் பெற்றுக் கொண்டான்.

அவளையடுத்து ஆயிஷா குழந்தையுடன் நிற்பது கண்டு ஒரு நிமிடம் திகைத்து விட்ட அவர்கள் தமது பேரனைக் கண்ட சந்தோசத்தில் தங்களையே மறந்து சூழலை மறந்து சிறுவர்கள்போல் துள்ளிக் குதித்தனர்.
படகிலிருந்து அப்பிள், திராட்சை, பேரீச்சம் பழம், கோதுமை போன்றனவும் வேறும் பல தின்பண்டங்களும் இறக்கப்பட்டன.

பேரனைக் கண்ட களிப்பில் அங்கிருந்த பழ வகைகளைக் கூடி நின்றவர்களிடம் மகிழ்ந்து வழங்கி அளவில்லா ஆனந்தத்தில் திளைத்தனர் அந்தப் பாட்டியும் பாட்டனும்.

- அத்தியாயம் இருபத்திரெண்டு

பேரனுடனும் குடும்பத்தவர்களுடனும் உரையாடிக் கொண்டிருக் கையில் காலித் மகனிடம் தொழிலாளர்கள் அனைவரையும் தான் சந்திக்க விரும்புவதாகவும் அவர்களிடம் சில விடயங்கள் பேசப்போவ தாகவும் அதற்கான ஏற்பாடுகள் செய்யும்படியும் கூறினார். உடனே தனது நண்பன் அஸீஸிடம் கண்ஜாடை செய்து அதன் மூலம் தனது தந்தையின் ஆசையை நிறைவேற்றுவமாறு வேண்டிக்கொண்டான்.

வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்ட சகல தொழிலாளர்களும் பிற்பகல் வேளையில் மாலிக்கின் வீட்டினருகிலுள்ள வெளியில் ஒன்று கூடினர். எல்லோருக்கும் சிற்றுண்டிகளாகப் பழங்களும் பருப்பு வகை களும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸலாம் கூறிக்கொண்டு காலித் எழும்பி நின்றார். முதலில் தொழி லாளர்கள் அனை வரையும் விழித்து எல்லோரையும் ஆசீர்வதித்து உங்கள் அனைவரது வாழ்வும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதாகவும், ஒற்றுமையுடன் இதுவரை செயற்பட்டமைக்காக நன்றியும் கூறிக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தை தான் கூட்டியதன் முக்கிய நோக்கம் எனது இந்த இரு நண்பர்களும் எனது வேண்டுகோளை ஏற்று இங்கு வந்து தாங்கள் கற்று அறிந்திருந்த நெசவுத்தொழிலை இங்கு அறிமுகம் செய்து உங்களுக்கெல்லாம் ஒரு வாழ்வா தாரத்திற்காக வழிசமைத் தனர். உண்மையில் இவர்கள் சமயப் பணிகளில் ஹமுற மௌத்தில் ஈடுபட்டிருந்த வேளையில்தான் சிலகாலம் என்று கூறி இங்கே அழைத்து வந்தேன். ஆனால் மூன்று வருடங்கள் நெருங்கிவிட்ட நிலையில் அவர்களது நிலைப்பாடு என்ன என்பது பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்பதனாலேயே இவ்வேற்பாட்டைச் செய்யுமாறு வேண்டினேன் எனக்கூறினார்.

மேலும் அபூபக்கர் அலி, சேமன் முகம்மது ஹாஜி என்பது இவர்களது நாமம் என்றும் முதன்முதலாக அவர்களது பெயர்களையும் வெளி யிட்டார். இதுவரை அவர்களது பெயர்களை அறியாதிருந்த அவர்கள் முகம்மத் என்று அழைப்பதையே வழமையாக்கிக் கொண்டிருந்தனர்.

சபையோர்களின் கருத்துரைக்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. எல்லோரும் மாலிக் ஆயிஷா, கலந்தர், பரீதா உட்பட அஸீஸ் மற்றும் இவ்விருவரையும் மிக்க நன்றியுடன் நோக்கியதன் வெளிப்பாடாகவே. அவர்களின் உரைகள் அமைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அபூபக்கர் அலி அவர்களுக்கான நேரம் வந்ததும் அவர் தனது பேச்சுக்களுக் கெல்லாம் மதிப்பளித்து இதுகாலவரை தம்முடன் ஒத்துழைப்பு வழுங்கிய தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் நன்றியும் வாழ்த்தும் தெரிவித்தார்.

மேலும் தனது நீண்டநாள் ஆசையொன்று இதுவரை நிறைவேறாம லேயே இருப்பது எனக்கு வேதனை தருகிறது என்று கூறியதும் மற்றவர்கள் அனைவரும் அதிர்ந்து போயினர். ஒருமித்த குரலில் என்ன என்ன என்று வினவினர்.

சற்று நிதானித்துவிட்டுக் கூறினார் அபூபக்கர் அலி. நம்மைப் படைத்து உணவளிக்கும் இறைவனை வணங்குவதற்காக ஒரு இடத்தைத் தேர்வு செய்து பள்ளி ஒன்று கட்டுவதே எனது ஆசை என்று கூறினார். மேலும் நாங்கள் இருவரும் இங்கு நிரந்தரமாக உங்களுடனேயே வாழ்வது என்றும் முடிவெடுத்துள்ளோம் என்று கூறியதுதான் தாமதம் எல்லோரும் சந்தோச மேலீட்டால் கைதட்டித் தமது உற்சாகத்தை வெளியிட்டனர்.

அடுத்த தினமே பள்ளி கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பமாகின. ஒரு வாரத்தில் தொழுவதற்கான சிறிய பள்ளிவாசல் ஒன்று சேமன் முகம்மது ஹாஜி அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டது. அவக்கலியப்பா பள்ளி உருவாகி விட்டது என்று மாலிக் உற்சாகத்தில் சத்தமிட்டதனால் அப்பெயரே அப்பள்ளிவாசலுக்கு வழுங்கப்படலாயிற்று. இப்பள்ளிவாசலே தற்போது "மஸ்ஜிதுன் நூர்" என்று அழைக்கப்படும் பள்ளிவாசலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலிக்கின் நெசவு உற்பத்திப் பொருட்கள் நாட்டின் பல பாகங்களிலும் பிரசித்தமாயிற்று. பிரதேசத்தில் குடியமர்ந்த பலரும் நெசவில் தத்தமது வீடுகளிலும் நெசவுத் தொழிலை ஆரம்பித்தனர். சந்திமணல் என்ற வாராந்தச் சந்தை தினமும் கூடும் சந்தையாக மாறியது. உற்பத்தி செய்யப்பட்ட சாரன் சாரிகளை பொட்டணிகளில் கட்டி வியாபாரம் செய்யப் பலர் தலைப்பட்டனர். வடக்கே மட்டக்களப்பு வரை கால் நடையாகச் சென்றும் பொட்டணி வியாபாரத்தில் ஈடுபட்டனர். தெற்கே பொத்துவில் வரை சென்றனர்.

இவர்களது பிரயாணப் பாதைகளாக மணற்பாதைகள் உருவாகின. வாகனங்களாக மாட்டு வண்டிகள், கரத்தைகள் என உருவாக்கப் பட்டன. குடியிருப்புக்கள் பரந்தளவில் ஐநூறையும் தாண்டிவிட்டன. அமைக்கப்பட்ட பள்ளிவாசலை நிருவகிப்பதற்கான குழுக்களும் கடமைக்காரர்களும் நியமிக்கப்பட்டனர். குழுக்களை வழிநடாத்துவதற் காகத் தலைவரும் தெரிவானார்.

அயற்கிராமங்களிலிருந்து தொழிலுக்காகப் பலர் வந்தனர். குடியிருப் பாளர்களின் உணவுத் தேவைகள் அதிகமாயின. குடியிருப்பாளர்கள் அனைவரையும் ஈடுசெய்யும் அளவில் நெசவுத்தொழில் போதுமான தாகவில்லை. அதனால் வேறு தொழில்களிலும் ஆர்வம் காட்டத் தலைப்பட்டனர்.

நெசவுத் தொழிலில் ஈடுபடாத பலர் வேறு தொழில்களில் ஈடுபடலாயினர். மாட்டுப் பண்ணை, ஆட்டுப்பண்ணை வளர்ப்பதில் ஒருசாரார் ஈடுபட லாயினர். விவசாயம் செய்வதில் பலர் ஆர்வம் காட்டினர். இன்னும் சிலர் தூர இடங்களுக்குச் சென்று புகையிலைச் செய்கையில் ஈடுபட்டனர். மேலும் சிலர் தும்பகஹாவெளி போன்ற பகுதிகளுக்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டப் பயிர்கள் செய்ய முற்பட்டனர். அங்கிருந்து தேவையான மரக்கறி, பழவகைகளை இங்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட பிரிவினர் அதன் மூலம் நல்ல வருமானம் ஈட்டுபவர்களாகக் காணப்பட்டனர். இதேவேளையில் பீடி சுற்றல் தொழிலும் அறிமுகம் செய்யப்பட்டு அதில் பலர் ஈடுபடலாயினர்.

கிராமத்தில் கடல்வளம் நன்கு காணப்பட்ட காரணத்தால் கடல் மீன்பிடியிலும் கவனம் செலுத்த் ஒரு குழுவினர் ஏற்பாடுகளை மேற் கொண்டனர். காலிப் பிரதேசத்திலிருந்து கொண்டோடி வலையுடன் கூடிய தோணிகள் வரவழைக்கப்பட்டன. பலர் கடல்மீன்பிடித் தொழிலில் ஈடுபடலாயினர். பெரியளவில் மீன்கள் பிடிபட்டதனால் மேலும் பலர் இத்தொழிலில் ஆர்வம் காட்டினர். மேலும் பல தோணி வலைகள் தருவிக்கப்பட்டன. தங்களது பொருட்கள், உபகரணங்கள் போன்ற வற்றைப் பாதுகாக்கவென கடலை அண்டிய பகுதிகளில் குடில்களை அமைத்தனர். இக்குடில்களுக்குப் பாதுகாப்பு வேலிகள் அமைத்தனர். நிழலுக்காக அடைக்கப்பட்ட பகுதிகளில் தென்னை மரங்கள் வைத்து அங்கேயே வாழவும் தலைப்பட்டனர். மேற்படி கடல்மீன் தொழில் செய்வதற்காக கூலித் தொழிலாளர்கள் துறைநீலாவணை, மணற் சேனை, சேனைக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் தொழிலாளர்கள் வந்தனர். தமிழர், முஸ்லிம் என்ற எதுவித வேறுபாடு களும் அவர்களிடம் காணப்படவில்லை. ஒரு தாய் பிள்ளைகளாக, நண்பர்களாகப் பழகினர்.

தேவைக்கதிகமான மீன்கள் பிடிபட்ட காலங்களில் அவற்றை உலர்த்தி கருவாடு களாக்கினர். சிலர் மீன்வியாபாரிகளாக மாறி வெளியூர் களுக்கும் மீன் கொண்டு சென்று விற்கலாயினர். நெசவுத் தொழி லாளர்கள் தேவையான மீன்கள் கிடைக்கப் பெற்றமையால் அவர்களது தொழில்களில் அதிகளவு கவனம் செலுத்தக் கூடியதாகவிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா, யாவா, மலேசியா போன்ற இடங்களிலிருந்து கற்பிட்டி, புத்தளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த சில குடும்பங்கள் இங்கு வந்து குடியேறின. இக்குடும்பங்களில் இந்தியாவின் அண்டக்குளம் என்ற இடத்திலிருந்து வந்த இஸ்மாலெப்பை என்பவர் ஒல்லிக்கேணியின் தெற்கே சுமார் இருநூறு மீட்டர் தொலைவிலுள்ள மரமுந்திரியின் கீழ் ஒரு குடில் அமைத்து வாழத்தொடங்கினர். வாழ்க்கைத் துணையொன்றையும் தேடிக்கொண்ட அவர் "அண்டக்குளத்தார்" என்றே மற்றவர்களால் அழைக்கப்பட்டார்.

எந்த நாட்டிலிருந்து வருகிறார்களோ அந்த இடத்தின் பெயர் கொண்டு அழைப்பது ஒரு மரபாகக் காணப்பட்டது.

அண்டக்குளத்தார் பறங்கியர்களுடன் இந்திய துறைமுகங்களில் வேலை பார்த்தனால் சற்று ஆங்கில அறிவும் பெற்றிருந்தார்.

- அத்தியாயம் இருபத்தி மூன்று

அன்று அந்தப் பிரதேசமே சோகத்தில் ஆழ்ந்திருந்தது. எந்தத் தொழிலும் நடைபெறவில்லை. தொழிலாளர்கள் அனைவரும் மாலிக்கின் வீட்டடியில் கூடியிருந்தனர். எங்கும் நிசப்தம், மௌனம் பரவியிருந்தது. வீட்டின் உள்யேயிருந்து ஒரு அழுகைக் குரல் வருவதும் அதை ஆறுதல் வார்த்தைகள் கூறி அடக்குவதுமாக இருந்தது. மாலிக் கண்கலங்கியவாறு அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். மாலிக்கின் தந்தை ஒரு மூலையில் தலையில் தனது இரு கைகளையும் வைத்தவராக அமர்ந்திருந்தார்.காலிதின் மனைவி சில நாட்கள் நோய்வாய்ப்பட்டு இன்று அதிகாலையில் இறையடி சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன். சாரா சாரா என்று தன் மனைவியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போடும் பாசத்தோடும் நேசித்து வந்த அவருக்கு அளவில்லா துன்பத்தைத் தந்தது. இறைவனின் நாட்டம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும் என்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையல்லவா? அவர் மட்டும் அதற்கு விதிவிலக்கல்லவே.

அவளது இறுதிக் காலத்திலாவது அவள் அதிகமாக நேசித்த தனது மகன மாலிக்குடன் வாழக்கிடைத்தமையை எண்ணி சற்று ஆறுதலடைந்தார் . காலித். மேலும் தனது பேரனுடன் கொஞ்சி விளையாடக் கிடைத்தமை ஒரு பேறு என்றும் தன்னைத் தேற்றிக்கொண்டார் அவர்.

எவ்வளவுதான் துக்கம், துயரம் என்றாலும் ஜனாஸாவை அடக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. குளிப்பாட்டி கபனிட்டு தொழுகை நடாத்தி நல்லடக்கம் செய்ய வேண்டும். அடக்கம் செய்வதற்காக மாலிக்கின் வீட்டிற்குக் கிழக்கே சற்றுத் தூரத்தில் ஒரு இடத்தைத் தேர்வு செய்தார்கள்.

நல்லடக்கம் செய்யப்பட்டது. எல்லோரும் துக்கத்துடன் இல்லம் ஏகினர். மூன்று நாட்கள் தொடர்ந்து எதுவித தொழிலும் நடைபெறவில்லை. நான்காம் நாள் பழைய படி வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டன. காலித், மாலிக் ஆகியோர்கள் நண்பர் களுடன் அடக்கஸ்தலம் சென்று பிரார்த்தனைகள் செய்து திரும்புவார்கள். இதுவே பிற்காலத்தில் "சரிபா உம்மாட கபுறடி" என்று அழைக்கப்பட்டு வந்தது.

நாட்கள் செல்லச் செல்ல வழமை நிலை திரும்பிவிட்டது என்றே கூறவேண்டும். ஆனாலும் காலித் அவர்கள் வீட்டினுள்ளேயே பெரும்பாலும் காலத்தைத் கழித்து வந்தார். அவசியம் தேவையான விடயங்களுக்காக மட்டுமே வெளியில் வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன் நாமிஸ் அவருடனேயே இருப்பதற்குப் பழகிவிட்டான். மற்றவர்கள் எவரும் அவனுக்குத் தேவைப்படவில்லை. நாமிஸின் அப்பா பாசமும் நேசமும் அவரை ஓரளவு பிரிவுத்துயரை மறக்கச் செய்தது. நாமிஸ் வெளியே போக அழைக்கும் போது மட்டும் அவனைத் தூக்கிக்கொண்டு நடமாடத் தவறமாட்டார் காலித். சிரிப்பதையும் சந்தோசமாகக் கதைப்பதையும் பலநாட்கள் மறந்திருந்த அவரது நிலை படிப்படியாக பேரனின் உறவால் மாற்றமடையத் தொடங்கிற்று. எண்பது வயதை நெருங்கியிருந்தார் காலித்.

மாலிக்கின் மனைவி ஆயிஷா ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். பேத்தியின் புதிய வரவு அவரை மேலும் உற்சாகத்தில் ஆழ்த்தியது. இப்போது சகஜ நிலைக்கு காலித் மாறிவிட்டார்.

பேத்திக்கும் தனது மனைவியின் பெயரையே சூட்ட விரும்பி காலித் தனது விருப்பத்தை மகனிடம் கூற "சாறா" என்ற பெயர் குழந்தைக்கு வைக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க நாளுக்கு நாள் தொழிலை விருத்திசெய்ய வேண்டிய கட்டாயம் மாலிக்குக்கு உருவாகியது. எனவே தனது நண்பன் அஸீஸை அழைத்து அவனது பொறுப்பிலும் மேற்பார்வையிலும் வேறாக தொழிலை மேற்கொள்வது பற்றி ஆலோசனை கூறினான் மாலிக்.

நீண்ட நாட்களாகவே இதுபற்றி நண்பர்களுடன் பேசவேண்டும் என்றிருந்த அஸீசுக்கு நண்பனின் வார்த்தைகள் பாகாய் இனித்தது.

நண்பனுக்கு ஒரு திருமணத்தையும் செய்து வேறாக தொழிலையும் ஒப்படைப்பது மாலிக்கின் திட்டமாகவிருந்தது. இதுபற்றி தந்தையிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்தும் ஆலோசனை பெற்றான். தந்தையும் அவனை மிகவும் உற்சாகப்படுத்தியது மட்டுமன்றி தனது நண்பர்கள் இருவருக்கும் அவ்வாறானதொரு ஏற்பாட்டைச் செய்வதும் நல்லது என்ற கருத்தை முன்வைத்தார் காலீத்.

- அத்தியாயம் இருபத்தி நான்கு

கோடை காலம் நிலவிக்கொண்டிருந்தது. மட்டு வாவி தனது பருமனைக் குறுக்கிக் கொண்டது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை புல்வெளிகள் பரந்து காணப்பட்டது. இவ்வேளையில்தான் நெற் பயிரின் அறிமுகம் அயற் கிராமங்களில் பேசப்பட்டு வந்தது. உணவுக்குப் பொருத்தமான நெற் பயிர்ச் செய்கையில் கிராமங்கள் முனைப்புக் காட்டின. மட்டு வாவியினூடாக போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

துறைநீலாவணை மக்கள் விவசாயம் செய்வதில் பேரார்வம் கொண்டிருந்தனர். பெரியநீலாவணையில் காய்கறித் தோட்டங் களிலிருந்து காய்கறிகள் சந்தி மணல் சந்தைக்க வந்துகுவிந்தன.

மட்டு வாவியின் நீர் உவர்நீராகக் காணப்பட்டமை விவசாயத்துக்குப் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது. மட்டு வாவிக்கும் வற்றுக் காலத்தில் புல்வெளி பரந்து காணப்பட்டதாலும் அவற்றை நெற்பயிர்ச் செய்கைக்காக உபயோகப்படுத்தலாம் என் அபிப்பிராயம் நிலவியது.

இவ்விடயத்தைச் சாத்தியப்படுத்துவதனால் இப்புல்வெளியில் உவர்நீர் புகாமல் தடுப்பு ஒன்றை இடுவதன் மூலம் வெற்றியடைய முடியும் என்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபற்றி துறைநீலாவணை, பெரியநீலாவணை மற்றும் மருதமுனை மக்கள் கூடி ஆலோசித்ததன் பேரில் தடுப்புச் சுவர் ஒன்று வடக்குத் தெற்காக எழுப்புவது என்ற முடிவு எட்டப்பட்டது. பின் அடுத்த மாரி வருவதற்குள் தடுப்புச் சுவரிட்டு உவர்நீர் புல்வெளியினுட் புகுவதை தடுப்பது என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டு அப்புல் வெளிகள் மக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இதில் துறைநீலாவணை மக்கள் அதிகளவு விவசாயத்தில் ஈடுபட்டதனால் அவர்களே கூடுதல் நிலங்களைப் பெறும் வாய்ப்பும் ஏற்பட்டது.

மருதமுனை ஒரு கைத்தொழில் கிராமமாகப் பரிணமித்தனால் விவசாயத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. ஆயினும் ஒரு சிலர் நிலங்களைப் பெற்றனர். இதன் மூலம் நெற்பயிர்ச் செய்கை இப்பிரதேசங் களில் அறிமுகமாகியதன் விளைவாக அம்மக்களின் பிரதான உணவா கவும் அரிசி முக்கியம் பெறலாயிற்று.

உப்புத்தண்ணிக்கட்டு என்று இப்போது அழைக்கப்படும் தடுப்புச் சுவர் பிற்காலத்தில் வீதியாக மாற்றம் பெற்று துரைவந்திய மோட்டுக்கு போக்குவரத்துப் பாதையாக மாறியது.

இதனிடையே மட்டு வாவியில் நன்நீர் மீன்பிடியும் பரவலாக மேற்கொள்ளப்பட்டதனால் மீனுக்கான தேவையும் நிறைவேற்றப் பட்டன. சள்ளல், விரால், செப்பலி போன்றனவும் சுங்கான், பனையான், மீசைக்காரன், ஆரல் போன்ற மீன் வகைகளும் மருதமுனை சந்திமணல் சந்தைக்குத் தினமும் வரலாயின. கடல் மீன்பிடி இங்கு இதுவரை அறிமுகம் செய்யப்படாமையினால் ஆற்று மீன்களுக்கு அதிக கிராக்கி நிலவியது. மருதமுனைச் சந்தைக்கு ஆற்று மீன்களுக்கு நல்ல விலை கிடைத்தது. இதனால் அதிகமானவர்கள் மீன் வியாபாரத்திலும் ஈடுபடலா யினர். மருதமுனையைச் சேர்ந்த சிலரும் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்புக்களின் அதிகரிப்பும் மக்கள் தொகையின் பெருக்கமும் மனிதனின் வாழ்க்கை முறையிலும் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன. மனிதன் தன்னை அழகுபடுத்துவதிலும் ஆரோக்கியம் பேணுவதிலும் கூடுதல் கவனம் செலுத்தினான். நோய்கள் காணும் மனிதர்களுக்கு வைத்திய தேவைகளும், கர்ப்பிணிப் பெண்களின் பிரசவத்தின்போது வைத்திய உதவிகள், தாதியர் உதவிகள் எனப் பல வகையான மனித தேவைகள் நிவர்த்திக்கப்பட வேண்டியிருந்தன.

கைத்தொழில் பிரதேசங்களில் நாகரீம் வளர்ச்சி காண்பது என்ற விடயம் இங்கும் பொய்யாகவில்லை.

சலவைத்தொழில், சவரத்தொழில் செய்வதன் மூலம் வருமானம் பெறுவதற்காக அயற்கிராமங்களிலிருந்து தமிழர்களில் ஒரு பிரிவினர் இங்கு வந்தனர். நல்ல நாட்கள், திருமணம் போன்ற வைபவங்களில் மேளதாள வாத்தியக் கச்சேரிகளும் சந்தணக்கூடு இழுத்தல் போன்ற களியாட்டங்களும் தலைதூக்கின. இவை யாவும் அயற்கிராமங் களிலும் தமிழ்க் கிராமங்களிலும் இருந்து வந்து குடியேறியவர் களினதும் மேலும் அப்பிரதேசங்களில் நடைமுறையில் இருக்கும் நிகழ்ச்சிகளின் தாக்கமாக இங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

உலமாக்கள், படித்தவர்கள் என்ற மட்டத்தில் எவரும் இல்லாத காரணத்தால் இவ்விடயங்களில் பொதுமக்கள் பிழைகாணவோ மார்க்கத்துக்கு முரணானவைகள் என்றோ இனங்காணுவதற்கான வாய்ப்புகளும் இருக்கவில்லை. நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் பல வேண்டத்தகாத நிகழ்வுகளும் நடந்தேறின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறானதொரு கால கட்டத்தில்தான் காலித் அவர்களின் மரணம் சம்பவித்தது. அவக்கலியப்பா பள்ளியின் கிழக்கே நூற்றைம்பது மீட்டர் களுக்கப்பால் அமைந்த இடமொன்றில் அவரது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது. அதுவே இன்று அல்-மனார் பெண்கள் பிரிவு அமைந் திருக்கும் இடமாகும்.

- அத்தியாயம் இருபத்தைந்து

இந்தியா, மலேசியா, யாவா போன்ற கீழைத்தேச நாடுகளிலிருந்தும் பலர் இங்கு வந்து வாழத் தலைப்பட்டனர். இலங்கைத் தீவின் ஆட்சியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயரும் தமது கட்டுப்பாட்டின் கீழ் இத்தீவைக் கொண்டு வந்தனர்.

ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இலங்கைத்தீவு இருந்தக்காலை ஆங்கிலேயரின் படையெடுப்பும் போர் உத்திகளும் ஒல்லாந்தரைப் பின்வாங்க வைத்தது. இதன் போது ஒல்லாந்தரின் படை அதிகாரியாக இருந்த அனஸ் என்பவர் மருதமுனையில் குடியேறி வசித்து வந்தவர். அனுஸ்லெப்பை என்று அறியப்படும் இவர் ஆங்கிலேயர் களின் வருகையை எதிர்த்து தன்னோடு மேலும் பலரை அழைத்து போராடியவர் என்றும் அதனால் அவர் இலங்கை வரலாற்றில் ஒரு தேசிய வீரராகவும் இடம் பெற்றார்.

இதன் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஒரு நிதி முறை ஏற்பட்டபோது கல்முனையில் நிதிதிரட்டும் முயற்சியில் அன்றைய ஆங்கில அதிகாரிகள் கூட்டம் ஒன்றை நடாத்தினர். அதன்போது தங்கக் காசுகள் நிரம்பிய செம்பு ஒன்றை அன்பளிப்புச் செய்ததன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதிப்பும் பெற்ற மூத்தவர் என்றழைக்கப்பட்ட அவருக்கு வேண்டிய நிலப்பகுதிக்குரிய உரிமைப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் அதனை உறுதிப்படுத்தும் விதத்தில் கல்முனை, மருதமுனை, பெரிய நீலாவணைப் பிரதேசங்களில் உள்ள அதிகளவான காணி உறுதிகள் அவர் பெயரில் காணப்பட்டமையை அவதானிக்கலாம்.

இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியொன்று பள்ளிவாசலின் பக்கத்தில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு வெள்ளைக்காரத் துரையும் அவரது உதவியாளரும் இறங்கினர். மதிய நேரம் லுஹர் தொழுகையை முடித்து விட்டு நின்றநேரம். இருபது முப்பது பேரளவில் கூடிவிட்டனர்.

வந்த வெள்ளைக்கார துரை தன்னை "எட்மண்ட்" என்று அறிமுகம் செய்து கொண்டார். அவர் பேசப்பேச உடன் வந்தவர் மொழிபெயர்த்தார். உங்களுக்காக நாங்கள் ஒரு தார் வீதியை அமைக்கப் போகிறோம். உங்களது ஒத்துழைப்பும் உதவியும் எங்களுக்குத் தேவைப்படும் என்று வேண்டிக் கொண்டார். லுஹர் தொழ வந்த அண்டக்குளத்தாரும் அவ்விடத்தில் நின்றபடியால் அவரும் ஆங்கிலத்தில் பேசியது கண்ட எட்மண்ட் துரைக்கு சந்தோசம் தாளவில்லை. அவரை அழைத்து அமையவிருக்கும் வீதி அமைப்புக்கு ஒரு மேற்பார்வையாளராக இருக்கும்படி வேண்டிக் கொண்டார். தனது பெயர் இஸ்மாலெப்பை என்றும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார் அண்டக்குளத்தார்.

இரண்டு வாரங்கள் கழித்து பாதை வேலைகள் துவங்கியது. மட்டக்களப்பிலிருந்து பாதை பல மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப் பட்டு கல்லாறு வரை அமைக்கப் பட்டிருந்த வீதி இப்போது மருதமுனையை நெருங்கியது. ஊரின் மத்தியில் வீதி அமைய வேண்டும் என்ற தீர்மானம் எட்மண்ட் துரையிடம் சமர்ப்பிக்கப்பட்டதற்கிணங்க ஊரின் நடுவால் வீதி அமைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வீதி அமைந்தமையானது மருதமுனை மட்டுமல்லாது ஏனைய கிராமங்களிலும் பாரிய மாற்றங்களைத் தோற்றுவித்தது.

நெசவுக்குத் தேவையான மூலப்பொருளான நூலை வெளிநாடு களிலிருந்து பெறக்கூடிய வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த வேளையில்தான் பள்ளிவாயல் நிருவாகத்தினர் மத்தியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. நிருவாகத்தில் தலைமைத்துவ மாற்றம் தேவை என்ற வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு அது நிராகரிக்கப்பட்டதனால் கோரிக்கையை முன்வைத்தவர்கள் பள்ளிவாயலின் தெற்கே தமக்கென ஒரு பள்ளிவாயலை அமைத்து அதில் தமது மார்க்கக் கடமைகளை நிறைவேற்றினர். காலப்போக்கில் இது ஊரின் தென்பகு தியில் அமைந்திருந்தனால் தென்தெருப்பள்ளிவாசல் எனவும் முதலில் அமைக்கப் பட்ட பள்ளிவாசல் ஊரின் வடதிசையில் இருப்பதனால் அது வடதெருப் பள்ளிவாசல் எனவும் அழைக்கப்பட்டது. ஊரின் நிருவாகங்களும் இரண்டாக மாறிவிட்டது.

இப்பள்ளிவாசலைக் கட்டுவதற்கான நிலம் மூத்தவர் என்றழைக்கப்பட்ட பக்கீர் தம்பி மரைக்கார் மற்றும் அலியப்போடி ஆகியோர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இப்பள்ளிவாசலில் இருந்து ஹலற மதத்தைச் சேர்ந்த அப்துர் றஹ்மான் மௌலானா என்பவர் மார்க்கப் பிரச்சாரங்கள் கடமைகள் செய்வதில் ஈடுபட்டார். இங்கேயே அவர் மரணமான பின் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

மருதமுனையில் மட்டக்களப்பு கல்முனையூடாக பெருந்தெருவொன்று அமைக்கப்பட்டமை அம்மக்களின் வாழ்க்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்களின் ஆட்சிக் காலத்தில் மருதமுனையும் சிங்கள மன்னர்களின் ஆட்சியில் இருந்தமையும் அதன் பின்னரான ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே மருதமுனை இரண்டு குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டன. அவற்றுக்கு இரண்டு விதானைமார் நியமிக்கப்பட்டனர். இவர்கள் பொலிஸ் விதானைமார் என்றழைக்கப் பட்டனர். இது சிங்கள மன்னர்களால் நியமிக்கப்பட்ட ஆராய்ச்சி என்ற பதவியை ஒத்திருந்தது. இவை யாவும் கௌரவ உத்தியோகங்களாகவே இருந்தன. மக்களும் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

மாலிக்கின் மகன் நாமிஸ் வளர்ந்து அவனது குழந்தைகள், பேரப் பிள்ளைகள் என நான்கைந்து தலைமுறை கண்டுவிட்டன. இப்போது கிராமம் நன்கு விரிவடைந்து இரண்டாயிரம் குடும்பங்களையும் விஞ்சி விட்டது. பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் தறிமால் அமைக்கப்பட்டு நெசவு மேற்கொள்ளப்பட்டது. தேவையான நூல் மற்றும் உபகரணங்கள் என்பது எகிப்து, சீனா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப் பட்டன.

நெசவில் ஈடுபட விரும்பாத சிலர் தமன்கடுவையில் புகையிலைத் தோட்டங்கள் செய்வதும், தும்பஹறகவல பிரதேசத்தில் தோட்டங்கள், பண்ணை வளர்ப்புக்கள் செய்வதும் உள்ளூரிலும் சிலர் மாட்டுப் பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள் மேற்கொண்டனர். கடல் மீன்பிடியும் விரிவாக்கப்பட்டது. பள்ளிவாசல்கள், பாடசாலைகள் உருவாக்கப்பட்டது. பரந்து வாழ்ந்த மக்கள் தத்தமது மூதாதையர்களின் பெயர் கொண்டும் தமது மூதாதையர்களின் தாய்நாடு, தொழில் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைக் கொண்ட பெயர்களில் குடிவழிகளாக இனங்காணப்பட்டனர். அயற்கிராமங்களில் தமிழ் மக்களின் குடிவழி முறையும் இங்கு பின்பற்றப்பட்டன.

பள்ளிவாசல்கள் கிராமத்தின் கட்டுப்பாட்டாளர்களாகவும், கடமைக்காரர் களாகவும் கொள்ளப்பட்டனர். பல இயற்கை அனர்த்தங்கள் தாக்கிய வேளைகளில் பல இழப்புக்களுக்குள்ளான மக்களுக்கான உதவிக் கரங்கள் ஆட்சியாளர்களால் நீட்டப்பட்டன.

இழப்புக்களிலிருந்து மக்கள் ஓரளவு மீண்டனராயினும் அதன் தாக்கத்தினால் பலர் தமது தொழில்களில் மாற்றம் தேடினர்.

தமது குடும்பங்களின் பெயர் சொல்லக்கூடிய பெரியார்கள் மரணமடைந்து விட்டால் அவர்களை அடக்கம் செய்த இடங்களை வெகுவாக மதித்து காணிக்கைகள், அன்பளிப்புக்களைக் கொடுக்கவும் முன்வந்தனர். அப்பெரியார்கள் மூலம் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என நம்பினர்.

அடிக்கடி மக்கள் விருந்தென்றும், நிகழ்ச்சிகளென்றும் ஒன்றுகூடினர். விருந்து களை ஏற்பாடு செய்வதற்காக மவ்லூத், கத்தம், புர்தா, தலைப் பாதிகா, றாதிப் என இந்திய முறைகளை பின்பற்றலாயினர். இவைகள் மார்க்கம் என்றும் அறிமுகப்படுத்தப்பட்டன.

அமைக்கப்பெற்ற பிரதான வீதி தென்தெருப் பள்ளிவாயலின் பக்கத்தினால் சென்றமை, சன நடமாட்டம் அதிகம் காணப்பட்டமை என்பன பிரதான வீதிகளில் கடைகள் அமைத்து வியாபாரம் மேற்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தின. இஸ்மாலெப்பை என்ற அண்டக்குளத்தார் பிரதான வீதியில் எல்லா விதமான பாவனைப் பொருட்களும் கிடைக்கத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதான ஒரு பெரிய கடையை நிறுவினார். அவரது மகன் இப்றாலெப்பை அந்தக் கடையை நடாத்தியதுடன் தனக்கு உதவி யாளராக ஒருவரை வைத்துக்கொண்டார். இவர் கணக்கப்பிள்ளை என்று அழைக்கப்பட்டார்.

இக்காலங்களில் எட்மண்ட் துரையோடு நட்பாகவிருந்த இஸ்மாலெப்பை அவர்களிடம் மருதமுனையின் சனத்தொகைக் கணக்கெடுப்பு என்ற பொறுப்பு வழங்கப்பட்டது. இதன் காரணமாக இவர் "தோம்பர்" என்று அழைக்கப்பட்டார்.

இதே காலப்பகுதியில் சுலைமாலெப்பைப் போடி என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டது. இது பள்ளிவாசலை அண்டியதாகவிருந்தது. ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் கற்பிப்பதற்காக தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இதன் பின்னரான காலங்களிலேயே மருத முனையில் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. வெள்ளைக் காரர்கள் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதும் அவர்களுடைய மதத்திற்கு மாறும்படி கட்டாயப்படுத்துவதும் அவர்களுடைய நோக்கம் என்று பரவலாகக் காணப்பட்டபடியால் முஸ்லிம்கள் கல்விக்கூடம் செல்வதில் முனைப்புக் காட்டவில்லை. தலைநகரான கொழும்பில் இதற்கெதிரான போராட்டங்கள் இடம்பெற்றன.

இவ்வாறான தடைகளையெல்லாம் மீறி எமது கிராமத்தில் சிலர் அமையப்பெற்ற பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்றனர்.

சனத்தொகை விரிவாக்கம் காரணமாக விளையாட்டு மைதானங்கள், வாசிக சாலைகள், சமூக அமைப்புக்கள் உருவாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்துடன் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள ஒரேயொரு முஸ்லிம் கிராமமாக மருதமுனை காணப்பட்டது. தேர்தல் காலங்களில் மருதமுனை மக்களின் ஆதரவை தமிழ் வேட்பாளர்கள் வேண்டி நின்றனர். மருதமுனை மக்கள் யாருக்கு வாக்களிக்கின்றனரோ அவரே வெற்றிபெற்று பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பைப் பெற்றார். இதனால் அவர்களின் இரக்கப்பார்வை மருதமுனையின் பக்கம் இருந்தது.

இக்காலப் பகுதியில் மருதமுனை மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுப்பவர்களாக பள்ளிவாயல்கள் தர்மகர்த்தாக்களே விளங்கினர். அவர்களது சொற்களை மதிப்பவர்களாகவும் கட்டுப்படுபவர்களாகவும் மக்கள் இருந்தனர்.

நல்ல காரியங்கள், விருந்துகள் என பெரியார்களை அழைத்து விருந்து படைப்பதும் ஒரு நடைமுறையாகக் காணப்பட்டது.

இக்காலப்பகுதியில் அரசினால் கல்லோயாத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் பயனாக மருதமுனையின் மேற்கே வாவியின் மறுபுறம் உள்ள இடங்களில் இவர் களுக்கான காணிகளும் வீடுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இவ்வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்திருந்த மருதமுனை அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு கல்முனைத் தொகுதியுடன் உள்ள முஸ்லிம் கிராமங்களான கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருதுவுடன் சேர்க்கப்பட்டன. இதன்போது மருதமுனையின் ஒரு மக்கன் தேர்தல் கேட்டு வெற்றி பெறமுடியாமல் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை நன்றாக இயங்கி வந்த நெசவுத் தொழில் அரச திறந்த பொருளாதாரக் கொள்கையினால் பாதிப்படைந்து இந்தியாவிலிருந்து வேண்டிய சாறன் சாரிகள் பிடவைகள் என்பன தாராளமாகவும் மலிவாகவும் தருவிக்கப்பட்டன. இதனால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டன.

இக்காலப் பகுதியில் வீசிய பாரிய சூறாவளியினால் மேலும் மோசமடைந்த நெசவுத் தொழிலை நிமிர்த்துவதற்காகப் பல முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அரசினால் சில நிவாரணங்கள் வழங்கப்பட்ட போதும் பழைய நிலைக்கு மீண்டு வருவதில் பாரிய சிக்கல்கள் உருவாயின. நெசவுத் தொழில் வீழ்ச்சியினால் கல்வி கற்பதிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக் களை நாடுவதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டன.

அரசியல் தலைவர்களும், ஆதரவாளர்களும் ஊரின் அபிவிருத்தி பற்றி சிந்திக்கத் தலைப்பட்டனர். பாடசாலைகளில் மாணவர்களின் தொகை அதிகரிப்பினால் இடப் பற்றாக்குறையை எதிர்நோக்கினர். பிரதான பாடசாலைக்கு மேலதிக இடம் தேடும் பணியில் இளைஞர் குழு இறங்கி தோல்வி கண்டது. இதனால் பாடசாலை இடமுள்ள இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்கள் மன்றில் முன்வைக்கப் பட்டது.

ஏற்கனவே வடக்கென்றும், தெற்கென்றும் நிலவி வந்த பிரிவினை இதற்குத் தடையாகவிருந்தது. இதனால் பிரதான பாடசாலையாக மேலும் ஒன்று உருவாக வேண்டியதாயிற்று. இதன் பின்னர் கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் பாரிய புரட்சி ஏற்பட்டது. போட்டிக் கல்வி கிராமத்தில் அதிகளவு உயர் உத்தியோகமாகக் கணிக் கப்படும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், கலாநிதிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலாளர்கள் என அயற்கிராமங்கள் மூக்கில் விரல் வைக்கு மளவிற்கு முன்னேற்றமடைந்தது.

இக்காலப் பகுதியில் நெசவுத்தொழில் அரச கொள்கையினால் வீழ்ச்சி கண்டது. நெசவுத் தொழிலைக் கற்கின்ற ஆர்வம் இளைஞர்கள் மத்தியில் இல்லாமல் போனது. அயற்கிராமங்களில் இருந்து வருபவர் களை நம்பியே நெசவு தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மீண்டும் புதிய தலைமுறையொன்றும் மாலிக்கின் வாரிசுகளும் இத்தொழிலை நவீன சிந்தனைகளுடன் முன்னெடுத்தனர். நாடு முழு வதிலும் உற்பத்திப் பொருட்களின் பாவனையாளர்களை ஊக்கு வித்தனர். அதனால் தமது மூதாதையர்களின் தொழிலான நெசவைக் கரிசனையுடன் செய்வதனால் நல்ல வருமானங்களும் பலருக்குத் தொழில்வாய்ப்பை வழங்கும் நிலைக்கு உயர்ந்தனர்.

தலைநகரங்களில் தமது சொந்த வியாபார நிலையங்கள் அமைத்து உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கும் நிலையில் தற்போது அவர்கள் மாறியுள்ளனர். இயற்கை அனர்த்தங்களினால் பாரிய சேதங்கள் ஏற்பட்டதாயினும் அரச தனியார் உதவிகளுடன் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கும் நிலை என்பது அவர்களினால் பரம்பரை பரம்பரையாக வந்த இத்தொழிலின் தேர்ச்சியும் அனுபவங்களுமே.

'மருதாபுரி' என்ற எமது மருதமுனைக் கிராமத்தின் முக்கிய வருமான மூலமாக அன்றும் இன்றும் இத்தொழில் விளங்குகிறது. ஆயிரக்கணக் கானவர்கள் நேரடியாகவும் மறை முகமாகவும் இதனால் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலித் அவர்களின் வழிகாட்டலில் மாலிக்கின் அயராத முயற்சியின் பயனாக மருதமுனை என்ற கிராமம் நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் நெசவுத் தொழிலால் தலைநிமிர்ந்து நிற்கிறது.

மாலிக்கின் வாரிசுகள் இத்தொழிலை மேற்கொண்டு ஆயிரக்கணக் கானவர்களின் வருமானத்திற்கான வழிவகைகளைச் செய்துள்ள மையானது என்றும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதும் வரவேற்புக்குரியயதுமாகும்.

--- நிறைவுற்றது --


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவர்கள் என் நன்றிக்குரியவர்கள் :**

01. ஏ.எம். றியாஸ் அகமட்
    சிரேஸ்ட விரிவுரையாளர்,
    கிழக்கு பல்கலைக்கழகம்.

02. ஜெஸ்மி எம். மூஸா, ஆசிரியர்
    முகாமைத்துவப் பணிப்பாளர்,
    அலிஷ் நியூஸ்

03. கலாநிதி பிர்தௌஸ் சத்தார், PhD (Sri Lanka)
    உதவிக் கல்விப் பணிப்பாளர்,
    வலயக்கல்வி அலுவலகம்,
    கல்முனை.

04. எம்.எம். பாஸில்
    விரிவுரையாளர்,
    அரசறிவியல் துறை,
    இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
    ஒலுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கின் தென்கோடி தொடங்குகிற மருதமுனை ஈழத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு பிரதேசமாகும். இக்கிராமத்திற்குப் பல்வேறு சிறப்பம்சங்கள் உள. இயற்கை வளமானாலும் கைத்தொழிலானாலும் இலக்கியமானாலும் இயல் தெரிந்த அறிஞர்களானாலும் இக்கிராமம் பேசப்பட வேண்டியதுதான்.

இக்கிராமத்தின் வரலாறு தொடர்பாகப் புலவர்மணி ஆ.மு. ஷரிபுதீன் அவர்களும் ஏ.எச்.எம். மஜீட் அவர்களும் பல்வேறு குறிப்புகளைத் தந்த போதும் "மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" மூலம் தன் வரலாற்றைப் பதிவு செய்தவரே அப்துல் றஹீம் அப்துல் சத்தார் அவர்கள்.

கல்முனையைக் களமாகக் கொண்டு கல்வி கற்ற அவர் ஒரு வங்கியாளராகச் செயற்பட்டவர். சமூக சேவையிலும் விளையாட்டுத் துறையிலும் ஈடுபாடு உள்ள அவர் முஸ்லிம் அரசியலில் ஆழமான அக்கறை கொண்டிருந்தார். தான் கொண்டிருந்த கொள்கைகளின் காரணமாக வங்கித் தொழிலை இடைநடுவிலே கைவிட்டு மருதமுனையைப் பதிவு செய்வதிலே மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டார்.

அவ்வகையில் அவரது குறிப்பிடத்தக்க ஒரு நூலாக அமைந்தது "மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள்" என்ற நூல். மருதமுனை குறித்து தகவல்களை அறிந்துகொள்ள இது குறிப்பிடத்தக்க ஒரு நூலாக அமைகிறது. இதற்கு அப்பாலே இவரது "மருதாபுரி" என்ற நாவல் இன்று வெளிவந்துள்ளது. தமிழிலக்கிய உலகில் வரலாற்றோடு இயைந்த பல நாவல்கள் வெளிவந்திருக்கின்றன. அவை பல்வேறு வழிகளில் தனது ஊரின், தனது சமூகத்தின், தனது கலாசாரத்தின், தனது மக்களின் தொழில்முறையில் என்று வரலாறு களைப் பதிவு செய்திருக்கின்றன.

அவ்வகையிலேதான் மருதமுனை என்பது நெசவுத் தொழிலுக்குப் பேர்போன ஒரு கிராமம். ஈழத்தின் எப்பகுதியிலும் இல்லாதவாறு நெசவுத் தொழில் அங்கு இடம் பெற்றிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக அத்தொழிலில் எழுச்சியும் வீழ்ச்சியும் இருந்தாலும் அந்தக் கிராமத்தின் அழகு நெசவிலேதான் இருக்கிறது. நெசவு கொண்டு இழைத்த மருதமுனையின் வரலாற்றை மாண்புறு மருதமுனையாக, அறிவியல் பூர்வமாகக் கொண்டு வந்த அவர் அதனை ஒரு கலை நோக்கோடு பின்னிப்பிணைத்து "மருதாபுரி" என்கிற நாவலாக இழைத்திருக்கின்றார்.

ஏ.ஆர்.ஏ. சத்தார் அவர்கள் ஒரு வங்கியாளராகப் பரிணமித்து ஒரு வரலாற்று ஆசிரியராகவும் மிக நீண்ட மருதமுனையின் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு இலக்கிய ஆசிரியராகவும் தன்னைப் பதிவு செய்துகொண்டார். அவருக்குக் கை கொடுத்திருக்கின்ற எழுத்துலகில் அவர் இன்னும் அகன்று பிரகாசிக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

**எம்.எம். பாஸில்**
விரிவுரையாளர் - அறிவியல் துறை,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,

ISBN No. : 978-955-41921-0-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபனா அச்சகம்-மருதமுனை